பாரதத்தில் முதன்முறை அனைத்து

ஆண் வேட பெண்ணாதிகள்.

Kp. [signature]

K.P.செல்வகுமார்
7-வது வார்டு உறுப்பினர்
L.R.பாளையம்
கெங்கராம்பாளையம் ஊராட்சி
செல்: 9787062770

**கே.பி. செல்வகுமார்,**
**மாவட்ட பொதுச்செயலாளர்,**
**தமிழர் தெருக்கூத்து கலைஞர்கள் இயக்கம்**
**விழுப்புரம் மாவட்டம் (தெற்கு)**

Kp. [signature]

K.P.செல்வகுமார்
7-வது வார்டு உறுப்பினர்
L.R.பாளையம்
கெங்கராம்பாளையம் ஊராட்சி
செல்:

T.V. ஏழுமலை நாடக ஆசிரியர்
பேரூர். AND. போஸ்டு
அன்னியூர் வழி
விழுப்புரம் வட்டம் & மாவட்டம்
பின்கோடு No. 605 202.
செல்: 9626330635.

## ஆன்புரிதி நோட்டு

உ

(வெண்பா)

நீடாழி உலகத்து மறைநாலொடைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராஜன் மாபாரதம் சொன்னநாள்
ஏடாக மாமேரு வெற்பாக வெங்கோடு எழுத்தாணி தன்
கோடாக எழுதும் பிரானை பணிந்தன்பு கூர்வமரோ.

(வெண்பா)

பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்க
நெருப்பிலே நின்று வைகை ஏட்டினில் தவழ்ந்த பார்வை
மருப்பிலே நின்று கற்றோர் மனப்பிலே வளருகின்ற
பொறுப்பெனும் சர்வதிக்கு புகழான காப்புதானே.

(வெண்பா)

எட்டெழுத்தான மந்திரம் எமனை வெல்லும் மந்திரம்
துன்பமதை ஜெயிக்கும் மந்திரம் தொல்வினை அகற்றும் மந்திரம்
இன்பமாய் மறையோர் போற்ற இகபர மளிக்கும் மந்திரம்
அன்பாய் எங்கும் அளிக்கும் மந்திரம் அரிநாம மந்திரமாமே.

(வெண்பா)

புகழாரும் பண்டரிபுரநாதன் பாதக்க
யுகமாரும் தமிழ்மாலை செப்புதற்கு
தும்பிக்கையாழ்வார் தூய்ய மலர் சேவடியை
நம்பிக்கை கொண்டேன் தினம்.

(வெண்பா)

அப்பன் இரந்துண்ணி ஆத்தாள் மலைநீலி
ஒப்பரிய மாமன் உறிதிருடி
சப்பைக்கால் அண்ணன் பெருவயிறான்
ஆறுமுகத்தானுக் கிங்கென்ன பெருமையிது.

(1) வடமதுரா புரி மேவியநாதன் வணங்கி வெளிக்கி
வாழும் வசுதேவ மைந்தன் திருமேனி: வேதன் – உயர்
சுடரொளியாகவே கொடுமைதீர் கூர்மனே தேடி – வசுதேவ தேவகி
வடிவுள செல்வன் மடமையகற்றிட நாடி – கோகுலம் புகழ்
மடியில் யசோதை மடியில் தவழ்ந்துமே ஆடி – மனமகிழ்ந்து
இடையர் குலமதில் யமுனைக் கரையில் விளையாடி – மதுவே பசி
(சு) இதமுடன் கோபியர் நாதிருவந்தேன்
விதவித ஜால விநோதங்கள் செய்தேன். (வட)

(2) வெண்ணெயும் பாலும் தயிர் திருடியே மத்தடிபட்டவன் – கோபாலமாதர்
வண்ணமாயுரலில் கட்டவும் சங்கடமுற்றேன் – வாயை திறந்து
மண்ணைத் தின்று வான் பூமியைக் காட்டி நகைத்தேன் – புன்னைமரத்தில்
திண்ணமாய் பத்தினியர் சேலையை சுருட்டியே மறைத்தேன் – வஞ்சகனாம்
(சு) திடமில்லா மாமன் கொடுமைகளைந்தேன்
கடமதில் சகடன் படமிக வெனத்தேன் (வட)

(3) நீதியே வரும் பூதகியிடம் மீறிப்பாலுண்ட முன்னவன் – மல்லராலிழுத்த
தீவாரணன் விரிப்புக் கோர உடலைக்கண்டவன் – மனைக்குணன்
வாரிப் பெருமழை வாரியே எதிர் வீரகக்கேனை கொன்றேன் – வலிய சேனை
சரிசமமாய் ஒருவன் கை கொண்டு வாமனை நின்றேன் – பகையை வென்று
(சு) தட்டிப் பணைகளை வெட்டியே சாய்த்தேன்
மட்டிக் கஞ்சனைக் கொட்டமும் மாய்த்தேன். (வ)

(4) பூட்டியே பத்தினிகள் வெளிக்கேட்டின் பொருந்து கைமாட்டிய
விலங்கொடித்த தியாகன் – அதிவேகன்
புத்திகெட்ட கங்கை தமில் புற்றியே பிறந்தெரிய தொட்டவன் – விழுவும்பல
பத்து நூறுயிரம் கோடி செத்த பட்டாடையளித்த சுதன் – பாண்டவர் தூதன்
சூதகமை விளையும் பாதகன் சுயோதனனை மோதமாய் துணித்து
ஓதுமுன் தருமனுக்கு கொடி பிடித்த போதன் – அன்பர்க்காயன்
புல்லர்கள் படியும் அண்டர் தொல்லையை மடிய செய்த
சொல்லியே ருக்மணி ராதை வல்லிசத்தியபாமா மெல்லியரிருக்கின்மகிழ்
–மெய்ஞானத்தேன்–
(சு) பொங்கியே காவிரி தங்கு ரங்கேசன் சொல்
எங்குமே போங்கி வழங்குவேனென்னருள். (வட)




| | | | பக்க |
|---|---|---|---|
| 1. | ஜவக்கிரிடை நாடகம் | கிருஷ்ணன் | 3 |
| 2. | அரக்குமாளிகை ,, | வீமன் | 7 |
| 3. | துரௌபதை மாலையிடு ,, | பாஞ்சாலன் | 12 |
| 4. | ,, ,, ,, | அர்ச்சுனன் | 16 |
| 5. | சுபத்திரை மாலையிடு ,, | அர்ச்சுனன் | 20 |
| 6. | துகில் நாடகம் | தருமர் | 25 |
| 7. | ,, ,, | விதுரன் | 28 |
| 8. | ,, ,, | துர்ச்சாதனன் | 31 |
| 9. | தபசு நாடகம் | அர்ச்சுனன் | 35 |
| 10. | 13-ஆம் நாள் சண்டை நாடகம் | அர்ச்சுனன் | 45 |
| 11. | ,, ,, ,, ,, | அபிமன்னன் | 50 |
| 12. | 17-ஆம் நாள் சண்டை நாடகம் | அர்ச்சுனன் | 56 |
| 13. | இராஜசூய யாகம் ,, | சிசுபாலன் | 59 |
| 14. | விராட பர்வம் ,, | திரிகர்த்தன் | 65 |
| 15. | ,, ,, ,, | இந்திரன் | 68 |
| 16. | ,, ,, ,, | வேடு | 73 |
| 17. | கிருஷ்ணன் தூது நாடகம் | சகாதேவன் | 76 |
| 18. | ,, ,, ,, | விதுரன் | 79 |
| 19. | அரவான் கடபலி நாடகம் | சகாதேவன் | 82 |
| 20. | கிருஷ்ணன் தூது நாடகம் | கிருஷ்ணன் | 84 |
| 21. | இராஜசூய யாகம் ,, | கிருஷ்ணன் | 92 |
| 22. | அரவான் கடபலி ,, | கிருஷ்ணன் | 94 |
| 23. | சுந்தரி மாலையிடு ,, | கிருஷ்ணன் | 99 |
| 24. | 13-ஆம் நாள் சண்டை ,, | கிருஷ்ணன் | 104 |
| 25. | 18-ஆம் நாள் சண்டை ,, | கிருஷ்ணன் | 110 |
| 26. | 17-ஆம் நாள் சண்டை ,, | கர்ணன் | 115 |
| 27. | 18-ஆம் நாள் சண்டை ,, | துரியோதனன் | 122 |
| 28. | 18-ஆம் நாள் சண்டை ,, | வீமன் | 132 |
| 29. | சுந்தரி மாலையிடு ,, | அபிமன்னன் | 137 |
| 30. | 14-ஆம் நாள் சண்டை ,, | கிருஷ்ணன் | 141 |
| 31. | ,, ,, ,, ,, ,, | அர்ச்சுனன் | |
| 32. | கீச்சக சம்மாரம் ,, | கீச்சகன் | 144 |
| 33. | காந்தவராயன் கழுகு ,, | காத்தமுத்து | 155 |

2 (4)

வாலி மோட்சம் நாடகம்: வாலி. 166

மகா வர்த்தன சுபசம்பவம்: கிருஷ்ணன் 171.

| | |
|---|---|
| சந்திரவம்சம் | 31. பிரதீபன் |
| சந்திரன் | 32. சந்தனு |
| புதன் | 33. ஆயர் தம்முறை |
| புரூரவன் | (பெ) சித்திராங்கதன் |
| ஆயு | விசித்திரவீரியன் |
| நகுஷன் | திருதராஷ்டிரன் |
| யயாதி | பாண்டு |
| புருவன் | விதுரன். |
| ஜனமேஜயன் | இளம்பஞ்சபாண்டவர் |
| பிராசீனன் | 1. பிரதிவிந்தியன் |
| சய்யாதி | 2. சுதசோமன் |
| சார்வபூமன் | 3. சுருதகர்மன் |
| ஜயசேனன் | 4. சதானிகன் |
| 13. வைப்புதன் | 5. சுருதசேனன். |
| 14. குரோதனன் | அக்ரோணி விபரம் |
| 15. தேவாபி | தேர் 1. யானை 1. குதிரை 3. காலாள் 5 |
| 16. ரிச்சகன் | இது ஒரு பத்தி. |
| 17. அரிசகன் | பத்தி மூன்று கொண்டது 1. சேனாமுகம் |
| 18. மதிவரன் | 3. சேனாமுகம் கொண்டது 1. குல்மம் |
| 19. திடன் | 3. குல்மம் கொண்டது. 1. கணம் |
| 20. நீலன் | 3. கணம் கொண்டது 1. வாகினி |
| 21. துஷ்யந்தன் | 3. வாகினி கொண்டது 1. பிருதனை |
| 22. பரதன் | 3. பிருதனை கொண்டது 1. சமு |
| 23. பவுமன் | 3. சமு கொண்டது 1. அனீகினி |
| 24. சுகோத்திரன் | 10. அனீகினி கொண்டது 1. அக்ரோணி. |
| 25. அஸ்தன் | 1. அக்ரோணி தொகை |
| 26. நிகும்பன் | லக்ஷம் ஆயிரம் நூறு |
| 27. அஜமீடன் | 2. 18. 700. |
| 28. சம்வரணன் | 18. அக்ரோணி தொகை 39. 36. 600. |
| 29. குரு | |
| 30. பரீக்ஷித்து | தேவகர்த்தனுக்கும் திரிபுரசுந்தரிக்கும் |
| | சூரசேனன் பிறந்தான் |
| | சூரசேனனுக்கும் மாரிஷை என்றவளுக்கும் |

(5)

ஜலக்கிரீடை - நாடகம் - கிருஷ்ணன்

(கவி)

3

அகங்கொண்ட கம்சனிட சிறைச்சாலையில்
அண்டமிசை கிம்பமுடன் தேவகியின்
மதங்கொண்ட யானைபல வீரரெல்லாம்
மண்மீது வீழ்ந்திடவே சாய்த்து நல்ல
துதிகொண்ட தேவகியாள் கெர்ப்பம் நீங்கி
தூயவனாம் அசோதை மனை தன்னில் விட்டு
மிதங்கொண்ட ஆயருக்குத் திலகமாகி
மாயவனும் கோபாலக் கண்ணனிதோ வருகின்றானே

(தரு)

வந்தேன் மதனக் கண்ணன் பாரீர் வேடிக்கையாக
வாறேன் மதனக் கண்ணன் பாரீர்
வந்தேன் மதனக் கண்ணன் விந்தையசோதை பாலன்
செந்திரு மேனியுடைய ஜெகம் புகழும் தூய்யாவன்
(சு) சில சில வார்த்தைகள் செல்வனும் பேசவே
நலமுடன் தாயைக்காண நயனங்கள் பேசவே. (வ)

(ஜதி தரு)

பச்சை மேனியனென்ன எந்தனைக் கண்டு
அச்சுதனென்று சிலர் பண்ண
உச்சித சிட்டிக் கொண்டை இச்செகமெல்லாம் மதிக்க
(சு) காசினியோர்களும் கண்டுமே மகிழ
வாசவனென்றுமே யாவரும் புகழ. (வந்)

(ஜதி தரு)

காயாம்பு மேனியனென்று கண்டுமே யாவரும் போற்ற
காகுத்தனென்று சிலர் கரங்குவிப்பி துதிப் போற்ற
(சு) கலங்கிட கவராவர் தன்னை ஒழிக்க
பாலனாய் பிறந்தேன் பாரதம் முடிக்க. (வந்)

(சுருணைத் தரு)

தாயே சுகுணம் உமது பாதம் சேயனிங்கன் தெண்ட
காயாம்பு வண்ணனும் கேழலடி போற்றினேன்
(சு) கண்டு வீதியில் சென்று விளையாட
இன்று அம்மணி நன்றிய் வருவேனே.

(தரு)

தடுக்காதே யம்மா நான் விளையாட வருகிறேனம்மா

(6)

மலர்க்கொடி என் தாயே மாபலராமனோடு
(சு) மைந்தனிருவரும் விந்தையாகவே
பந்தடித்துமே முந்தி வருவோம்.
(கரு)

தமையனரே வாருமே கம்பிழிகம் பாருமே
சமைய மிது நேரமே சேர்ந்து விளையாடுவோம்.
(கரு)

அண்ணன் கண்ணனைப் பார்க்க மன்னித்தின்றான் எந்த
எண்ணம் மிக பூர்க்க எல்லோரையும் கோர்க்க
சொன்னால் உதை தானே சொல்லவேண்டாம் கோனே
அண்ணா வாரேன் நானே அழைத்துப் போவாய் தானே.
(கரு)

அன்னையரே கேளும் அன்னையரே
மன்னி நானே மானிவத்தில் திண்ணவில்லை சொன்னேனே.
(கரு)

அடிக்காதீர் எந்தன் தாயே அடிக்காதீர்
அடிக்காதீர் வாயைப் பாரும் அருமை என் அன்னையரே
துடிக்குதே என் தேகமெல்லாம் துன்பங்கள் செய்யவேண்டாம்.
(கரு)

கன்னியர் மாளிகை தேடி போறேன் அண்ணா போறேன்
காவலடி வெண்ணெய் தின்ன வாரேன் அண்ணா வாரேன்
அண்ணா பலராமா வந்தோம் இங்கு வந்தோம்
கன்னியர்கள் தூங்கும் நேரம் கண்டோம் நாம் கண்டோம்
உன்னிதமாய் வெண்ணெய் வாரி உண்டோம் அண்ணா உண்டோம்
(கரு)

கள்ளத் திருடனைப் போல் முன்னும் பின்னும் சுற்றிப் பார்த்து
கண்ணனும் வந்தேனே கோபியர் வீட்டில் வெண்ணெயும் உண்டேனே
கன்னி உறியிலே அள்ளி வெண்ணெயும் நல்ல
அண்ணன் தனக்கு சொல்லா தென்று கொடுத்தான்
(சு) நந்தன் மனையில் விந்தையாய் தேடி
மைந்தன் யாரும் வந்தேனே ஓடி.
(கரு)

அண்ணனே வாடா பலராமனே வாடா

(7) 5

அன்பாய் தயிர்ப்பால் வெண்ணெய் தருகிறேன் வாடா
இன்னமும் வாடா அண்ணா கொண்டனை அடா
கன்னியர்கள் அறிய வெண்ணெய் [struck through] திருடலாம் வாடா
பாம்பினையே அண்ணா பாம்பினையே
பாவையரை பங்கம் செய்ய வந்திடும் அண்ணா
தேள் பூரான் அண்ணா தேள் பூரான்
தெருவையர்கள் வீடு பூரா காணப் போறான்.
(கரு)

நானா இழைத்திட்டேன் சொல்லுங்கள்
நங்கையரே நின்று விள்ளுங்கள்.
ஏனோ என்னிடம் இப்படி பேசுகீர்
மானங்கெட்ட சாதி இடைச்சியே கேளடி.
(கரு)

பார்த்தவனோடி சொல்லுமே உங்கள்
பசப்பெல்லாம் காட்டாதே நில்லுமே
கூர்ந்து இருந்தாயே கள்ள சிரிக்கியே
நேர்த்தியாய் வந்துமே நீட்டுவாய் முருக்கியே.
(கரு)

அன்னியர் வீட்டினில் வெண்ணெய் திருடி அண்ணா அண்ணா
கண்டிப்பாய் வாருமே கன்றுடன் நன்னா நன்னா
மோகமும் தீர்ந்திட பாலைக் குடித்தேனே நன்று நன்று
சோகத்தை தீர்த்திட கோபியர் தன்னையே இன்று இன்று.
(கரு)

நம்பிட்டேன் மாமி அடிக்காதீர் கும்பிட்டேன் மாமி
கும்பிட்டேன் விடும் விடும் கோதையே மனம் வைத்து
தெம்புடன் விடுவாய் தெரியாமல் வந்தேனே.
(கரு)

அன்னையாளுரைத்தபடி இன்னிலத்தில் மாடு மேய்க்க
கண்ணனுமே ஓடி வந்தேனே
சின்னஞ் சிறு எருது கன்று நானே — அந்த
சிவந்த காளை வரமட்டும் காணேனே
வெள்ளெருது நல்லமாடு கொல்லக் கண்ணு கருப்புமாடு
துள்ளி ஓடுவதும் வல்லமையை அடக்க வேண்டும்.

(கந்-ம்) ⑧

அடித்த தோசி மாதரெல்லாம் அருமையான் வரவுங் கண்டு
இடித்துவுடை இம்சை செய்த இடைச்சிகள் தன்னை இப்போ
படித்திட கோபியரெல்லாம் துகில் தனைத் திருடிக் கொண்டு
பிடித்துமே ஓட்டமாக.

(கரு)

பின்னே மரத்தில் ஏறினன் சேலை எடுத்து
கன்னித் தேவர்க ஏறினன்
சின்னப் பின்னங்கள் செய்த சிற்றிடையின் ஆடை எல்லாம்
(சு) நாடியே மரத்தில் ஓடியே ஏறினன்
கூடியே கோபியர் தேடியலையவும்.

(கரு)

மாதரெல்லாம் ஒன்று கூடியே = முல்லை மாதர்களே
மர்மம் என்ன சொல்வீர் நாடியே.

(கரு)

என் பெண்ணைக் கொண்டிங்கு வந்தீரோ = முல்லை மாதர்களே
இருகரத்தை சரியாய்த் தூக்கிங்கள்.

(கரு)

கண்ணைக் காட்டி என்னை அழைக்கிறீர் = முல்லை மாதர்களே
கட்டியணைந்தால் சேலை தருவேன்.

(கரு)

தனித் தனியாய் பிரிந்து நில்லுங்கள் = முல்லை மாதர்களே
சிரித்த இடையை அவித்துப் போடுங்கள்.

(கரு)

கொங்கை ரெண்டையும் எனக்குத் தாருமே = முல்லை மாதர்களே
கூடியணைத்து மையல் தீருமே.

(கரு)

இந்த தெப்பமாம் இந்த போடுங்கோ = இடைமாதர்களே
கோதையே உங்கள் சேலை தருவேன்.

(வேறு தரு)

என்று வருவாயோ எனக்கு
இன்பம் தருவாயோ
(சு) வேலைக்கு நன்றேய் கொக்கோக விலைகள்
ஜாலம் செய்யாமல் தையலே வருவாய்.

⑨ 5

அன்பாய் தயிர்ப்பால் வெண்ணெ தருகிறேன் வாடா
இன்னமும் வாடா அன்னை சொன்னேனே அடா
கன்னியர்கள் அறிய வெண்ணெ ~~[illegible]~~ திருடலாம் வாடா
பாம்பினையே அண்ணை பாம்பினையே
பாவையரை பங்கம் செய்ய வந்திடும் அன்னை
தேரூ பூரான் அண்ணை தேரூ பூரான்
தெருவையர்கள் வீடுபூரே காணப் போறான்.

(கரு)

நான இருத்திட்டேன் சொல்லுங்கள்
நங்கையரே நின்று சொல்லுங்கள்
பெண்ணோ என்னிடம் இப்படி பேசுநீர்
மானங்கெட்ட சாதி இடைச்சியே கேளடி.

(கரு)

பார்த்தவனாடி சொல்லுமே உங்கள்
பசப்பெல்லாம் காட்டாதே நில்லுமே
காத்து இருந்தாயே கள்ள சிரிக்கியே
நேர்த்தியாய் வந்துமே நீட்டுறாய் முருக்கியே.

(கரு)

அண்ணியர் வீட்டினில் வெண்ணெ திருட அன்னை அன்னை
கண்டிப்பாய் வாருமே கன்றுடன் நன்னை நன்னை
மோகமும் தீர்ந்திட பாலைக் குடித்தேனே நன்று நன்று
சோகத்தை தீர்த்திட கோபியர் தன்னையே இன்று இன்று.

(கரு)

நம்பிட்டேன் மாமி அடிக்காதீர் நம்பிட்டேன் மாமி
நம்பிட்டேன் விடும் விடும் கோதையே மனம் வைத்து
தென்புடன் விடுவாய் தெரியாமல் வந்தேனே.

(கரு)

அன்னை யாருரைத்தபடி இன்னிலத்தில் மாடுமேய்க்க
கண்ணாலே ஓடி வந்தேனே
சின்னஞ் சிறு எருது கன்று நானே - அந்த
சிவந்த காளை வரமாட்டும் காணேனே
வெள்ளெருது நல்லமாடு கொல்லக் கொண்டு கருப்புமாடு
துள்ளி ஓடுவதும் வல்லமையை அடக்க வேண்டும்.

(கந்-ம்) (10)

அடித்த தோசி மாதரெல்லாம் அவையோர் பலவுங் கண்டு
இடித்துவிடு இம்சை செய்த இடைச்சிகள் தன்னை இப்போ
பிடித்திட கோபியரெல்லாம் துகில் தனைத் திருடிக் கொண்டு
பிடித்துமே ஓட்டமாக.

(தரு)

பின்னை மரத்தில் ஏறினன் சேலை எடுத்து
கன்னித்தயங்க ஏறினன்
சின்னப் பின்னங்கள் செய்த சிறுக்கியின் ஆடை எல்லாம்
(சு) நாடியே மரத்தில் ஓடியே ஏறினன்
கூடியே கோபியர் தேடியலையவும்.

(தரு)

மாதரெல்லாம் ஒன்று கூடியே = முல்லை மாதர்களே
மர்ம்மம் என்ன சொல்வீர் நாடியே.

(தரு)

என் பெண்ணைக் கொண்டிங்கு வந்தீரோ = முல்லை மாதர்களே
இருகரத்தை சரியாய் தூக்குங்கள்.

(தரு)

கன்னிக் காட்டி என்னை அழைக்கிறீர் = முல்லை மாதர்களே
கட்டியணைந்தால் சேலை தருவேன்.

(தரு)

தனித் தனியாய் பிரிந்து நில்லுங்கள் = முல்லை மாதர்களே
தரித்த இலையை அவித்துப் போடுங்கள்.

(தரு)

கொங்கை ரெண்டையும் எனக்குத் தாருமே = முல்லை மாதர்களே
கூடியணைத்து மையல் தீருமே.

(தரு)

குந்தி தோப்பணம் முந்தி போடுங்கோ = இடைமாதர்களே
கோதையே உங்கள் சேலை தருவேன்.

(வேறு தரு)

என்று வருவாயோ எனக்கு
இன்பம் தருவாயோ
(சு) லீலைக்கு நன்றேய் கொக்கோக லீலைகள்
ஜாலம் செய்யாமல் தையலே வருவாய்.

(தரு) (17)

அல்லி இலையை அவித்துப் போடுங்கோ இடைமாதர்களே
அம்மணமாய் வந்து நில்லுங்கள்

(தரு)

கரங்கள் கூப்பியே சரணம் செய்யுங்கள் = இடைமாதர்களே
கால் ரெண்டையும் அகற்றி வையுங்கள். =

(தரு)

காணிங்க மடுவை கண்டான் கண்ணன் தானும்
கண்டு அதன் மேல் நடனமாடினன்.

(சுபம்) (சுபம்) (சுபம்)

## அரக்கு மாளிகை நாடகம்: பீமன்

(கவி)

கதிர் மணி மகுடம் மின்ன கடகமும் பளபளென்ன
மதிகுலம் தழைக்க வந்த மணிபுஜத்தழகுக் கெம்பீரன்
அதிகதி வாசர் ~~[illegible]~~ கூற. அடலம்பு புயத்தை கோணித்தீரன்
பதிபுகழ் வீமசேனன் பவாட்டியன் வருகின்றானே.

(தரு)

வீமசேன ராஜ தீரன் வேடிக்கை உல்லாசத் தீரன்
சோம சூரியன் போலவே வீமசேன ராஜன்
சுந்தரன் போல் வந்து மேவினன்.
சித்திர ஆரம் பளபளென்ன தனிமுடி அலங்கரித்து
கந்தமலர் வாடை வீசவே வீமசேன ராஜன்
காமனைப் போல் வந்து மேவினன்.
ஓசை யுள்ள வீரகண்டா ஒளி பெருங்கல கலென்ன
தேச மன்னர்கள் மெச்சவே வீமசேன ராஜன்
திங்கள் குல தீரன் வந்தானே.
கட்டுங் காவல் தன்னைத் தாண்டி கைகடகம் பளபளென்ன
பட்டுச் சாலுவை இலங்கவே வீமசேன ராஜன்
பகலொளி போல் வந்து மேவினன்.

(தரு)

அன்னை சகுணம் உமது பாதம் அன்னை சகுணம்
அன்னை உன் தாளினை அடியேன் சிரங்குனிந்து
புன்னை மலரைக் கொண்டு பொன்னடி தன்னிலே. (அ)
(சிற்பசாஸ்த்திரியிடம் கவி)

அந்தமும் இனமும் உள்ள யாகசாலை நீ தனக்கு
வந்திடும் இறை தாவென்னா மனதினில் அச்சமுற்று
எந்தன் பணிந்த தென்று இன்பமாய் உளரும் பெரும்
சந்தோஷமாக எல்லாம் சம்பவமாய் உரைசெய்வாயே.

(சிப்பாசாஸ்திரி அனுப்பிவிட்டு கவி)

இன்ப நாயகனை சங்கம் செய்தியே அரியெடுத்தா
அம்புவி அரசருக்கு அடுக்குமோ இந்த நீதி
வம்புள்ள துரியன் மீற மந்திரி சொல்ல மெய்யாக
நம்பியே வந்தோமிந்த நடத்தைகண் டேங்கினேனே.

(தரு புலம்பல்)

வாழ்மனையில் தீயை இட்டு வாழ்பவர் உலகிலுண்டோ
மாதவா சோதியாதவா ஆதிமூலமே
சூது செய்யவோ நினைக்க தனக்கென்ற உலக வாழ்க்கை
தன்மை அறிந்திடாமல் ஆதிமூலமே
பஞ்சமா பாவித்துரியன் வஞ்சகம் மனதிலெண்ணி
பஞ்சம் சுக விதமறியேன் ஆதிமூலமே
கொஞ்சமும் பாவமென்னாமல் இடி இடிக்க வைத்த வீட்டை
கொளுத்த ஆள் அனுப்பினானே ஆதிமூலமே
நல்ல மனதாய் அனுப்பி கொல்லவும் தந்திரம் செய்ய
நாங்களென்ன செய்த தோஷம் ஆதிமூலமே.
இவ்வளவும் அலங்கரித்து நல்ல மனதாய் அனுப்பி
இடர் நினைக்க நீதியுண்டோ ஆதிமூலமே.

(கவி)

ஆலஅமிர்தம் உண்ட சிவன் தனக்கும்
அடியாத ~~[illegible]~~ வரமளித்த விதமே இன்று
தேவன்ன நீதனகோ எங்களுக்கு
ஜீவநிலை காட்டி வைத்த செய்கையாலே
கால மெதுவன்ன மட்டும் நீயே தந்தை
கட்டி வைத்தும் இட்டு மனம் களிப்படைந்தேன்
மேலணியும் பணிகளெல்லாம் உனக்கே தந்தேன்
மிக மகிழ்ந்து அவன்மனைக்கே போவோமே.

(தரு)

(1) இதுவோ அரக்கு மாளிகை நல்ல



இலகிய நவமணி உலவிய கதிரொளி (இதுவோ)
இதுவோ அரக்குமாளிகை இப்படி செய்வதும் உண்டோ
(சு) இந்திரலோகமும் இதற்கிணையாமோ
விந்தையான அழகை விளம்பவும் போமோ. (இது)

(2) (தை) (தரு)

கட்டும் அழகை நாடுமோ. தன். மதியது வாகு சரியுமெய்செய்யும்
கொடிய பாதகரை முடியதென்னப் போகுமோ (கட்)
நேட்டுத்தாணையும் கண்டேன் உடங்கிடும் மாளிகைத் தின்னை
(சு) ஓதிய பாதையை உகர்ந்து கண்டேனே
வாதையும் தீர மகிழ்ந்து நின்றேனே. (இது)

(3) (தை தரு)

பொன்னிழைத்த மாளிகை. நல்ல. பச்சையும் ஒளி மணி வச்சிரம் அழுத்திய
தன்னுதமைச்ச தாளிகை
மின்னுத மின்னலொளி வீசும் பிரகாச மென்ன
(சு) வேடிக்கையோ இந்த வெகுவித லோக்கியம்
பீடிக்கைப்படுவது பெரும்பிழை பாக்கியம் (இது)

(4) (தை தரு)

மோசம்செய்யவே உத்தது இன்று.
மூன்று உலகம் மதிக்க வேண்டி விநோதம் கொண்டு
ஆசை கொள்ளவும் வைத்தது
வாசமாளிகை சார வத்தி சூதையும் கண்டேன்
(சு) வாடுதே தன் மனம் வைய்ய மின்டோனே
ஓடிப்பிழைக்க உபாயம் கண்டேனே. (இதுவோ)

(1) (தரு)

நித்திரை போவாயடா புரோசனே உன் நினைவெல்லாம் எங்கேயடா
சத்திய வாசகன் போலே வந்தனுகிய சதிமோச விஸ்வாசா. (நித்திரை)

(2) (தை தரு)

இத்தனை நாளாக புரோசனே விணாய் எங்களை நீ மடிக்க
புத்திகள் கோரியே உள்ளம் களித்து நீ
பாவித்துரியன் செய்த சூதை பக்ஷமாய் நீ மாற்றி
ஆவிவாங்கவே வந்து நீ கள்ள சாவியைக் கொண்டவனே- (நித்)

(3) (தை தரு)

நாளும் மனம்துணிந்து. சொன்ன லக்கினம் வந்திருக்க

தாவிய மாளிகையை சுவதியில் கொளுத்தாமல்
சயனித்து இருப்பதென்ன.

பொறுமை மிகுந்தவன் போல் வந்து பொங்கி மகிழ்ந்திடவே
ஒருவரைக் கொல்ல நினைக்க தனக்கென்ற உண்மை இதுதானே
(பு)

(ஷ தரு)

அஞ்சாமல் கொள்ளிவைக்க நல்ல அய்யர்க்கு நீ மகனாய்
என்றிருந்தனை உந்தன் தலைமாட்டுக்கே கொள்ளி
நான் வைக்கப் போறேனடா (நித்திரை)

(கவி)

இப்படியாய் வீமனுமே மனதிலெண்ணி
இதுசமயம் வக்கினமும் வந்ததென்று
அக்கரையாய் தீ மூட்டி மந்திரி
அசைந்ததுவும் தெய்வச் செயலென்று எண்ணி
கைக் அளவாய் கொள்ளிக்கட்டை தனை எடுத்து
கணமின்ன சாவத்தி தனை கொளுத்தி
திக்கென பெரிய அரக்கு மாளிகை தான்
திமுதிமு னெ வெளிநோக்கி திடங்கொண்டேனே.

(கொண்டிசிந்து தரு)

சாவத்தி தனை கொளுத்த வீமனுமன்
சரிந்தி மாளிகை கரிந்திடவே
தர்மருடன் ஓடி தாயுடன் — சுந்தர
தனையன் தம்பி ஐந்து பேரையும்
முதுகிலும் கக்கத்திலும் தோளிலும்
சேர்த்தவரு னை கூடி எத்தடி வைத்து
அதிக சந்தோஷமாக வீமனும்
அண்டின தனதுமணி மண்டபம் கிட்டி
துணையும் தட்டி வைத்து தன்னியே
தாக்கி விரலால் கல்லில் நீக்கி நுழைத்து
சுரங்கம் வழி போக இருபுறமும்
சொர்ணம் போல் மாணிக்க விளக்கெரிய
பொருணைக் கடந்திடவே சத்தமடைய
கட்டி வைத்தப் பாறையை முட்டி விலக்கி
வீதியே வெளியில் வந்து இடும்பாவனம்
மேவும் வனத்தில் வந்து தாவினனே.



(இடும்பியிடம் சகபத நயம்)

கயலான உந்தன் நயனம் சிவந்து கனவேகமுடனே 11
மயிலானே வந்து செயலித்தணிந்து மதிவாடி எந்தனருகே
ஒயிலாக நின்று நயமாக சொல்லும் உன் சேதி கண்டறிகிலேன்
குயிலானே சொல்லும் நயமாக எல்லாம்,

(தரு)

கூறுமிந்தன் சேதி உந்தனிட பெருமென்ன ஜாதி
தாது மாறேய் மீதி வந்தவித் — தேரமலை
(சு) கோரமான உரு மாறி ஏதே நலம்
சாருமிந்தனிட தீரங்கண்டறிய. (கூறு)

(சகபத்தியம்)

அரியாயோ சேதி துரியோதனன் செய்த அரக்குமாளிகை தன்னில் நாங்
தரியாலழித்து நெரியாலே மீண்டு இவ்விடம் தன்னிலே வந்தோம் நாங்க
சரியான தாயும் பிரியாத அய்வர் தாமென்ற எங்கள் குலமே
தெரியாதுனக்கு பரிவாக வந்த,

(தரு)

இந்திர ஜாலப் போடி முந்தி நானும் சொந்தக்காரனோடி
சந்தோஷமாய் வந்து சேரக்கூடி நொந்து வாடி
(சு) அந்தமல்ல விது விந்தை சுந்திரமே
மைந்தனதிடம் என்ன சொந்தமது தனே. (இந்)

(தரு)

ஏதடி நீ பருபாவி நல்ல இனியில்லா இடி கேடி = என்மேல்
இச்சைக் கொண்டாய் இனைசாலி இனி
எவர் கட்டுவாருன்னை தாலி
வாதுகள் பேசாதே மையல் கொண்டேன் தன்
சாதிக்கருக்காதே சதிமோக வில்வாசி.
(சு) தாரமல்லவே சேரவந்திட
வீரமல்லவே தாங்கல்லடி.

(தரு)

வந்து மடிப்பவன் யாரடி வீர. வார்த்தைகள் சொல்வதேதடி - அந்த
வல்லவன் பேரென்ன கூறடி - அவனை
வானுலகம் சேர்ப்பேன் பாரடி.
அந்தபலத்தினாலே தன்னை மிரட்ட வந்தாய்
சந்தோஷமாக வே ஸ்தானத்துக்கே போவாய்
(சு) சண்டி இப்படி கண்டதில்லையே
[illegible]

12 (கவி) (16)

மன்னனை எதிர்த்துக்கொன்ன வருங்குல வசிஷ்டை கந்தன்
கண்ணே நீ மணம் புரிந்து சந்தோஷம் பெருகிட எமல்
என்னை நீ மயக்க வந்தாய் இடும்பனென்றெனும் அந்த
உன்னை நான் சேருவேனே உளமகிழ்ந்தே இருவோமே.

(கரு)

எட்ட நில்லம்மா தொட வேண்டாம் எட்ட நில்லம்மா
எட்ட நில்லும் நில்லும் கிட்டியே பேசவேண்டாம்
இப்படியே சொல்லும் சொற்படியே
(சரண்) தீதப்படி மாதப்படி. வேதப்படி வாதப்படி (எட்ட)

(கரு)

வந்து கவிக்கிறாய் அடிப்பெண்ணே. (வந்து)
வந்து உன்னைச் சேர உந்தன் குலம் அல்ல
வஞ்சிகமே கெடும் வஞ்சிதமே.
(சரண்) கெட்டித்தனம் விட்டுவிடு. துஷ்டத்தனம் மட்டுப்படு. (வந்)

(இடும்பனிடம் கரு)

இடும்பனென்றிடும் சவுரிய புஜபல தீரனே
ஏமனும் மெச்சிய வீமனும் நானடா சூரனே
பதும்படி காண்பதோ விடுவேனோ பாரடா வீரனே
புத்தியே உன்றன் கத்தியே ஓடவே கோரவே
(சு) பாய்ந்து வந்து காய்ந்திடும் உந்தனை
ஓய்ந்துமே உடலை தீய்ந்திட செய்குவேன்

(கரு)

அந்தரபூமியும் அஞ்சவே வந்து நாடுவேன்
அத்திகாறுபோல நித்தமே உந்தனை போடுவேன்
இந்திரதேவரும் மெச்சவே நானிதோ வாட்டுவேன்
இப்பவே நானிதோ தண்டமெடுத்துமே சாடுவேன்
(சு) இடியது போலவே கடுகியே சாமது
மிடுகியே கொடியினில் கடுகியே சாமது.

(கரு)

தொட்டணை. வெறுங்கையால் தூக்கியே மண் மேல் தாக்கியே. அரைத்துவிட்டனே
விட்ட கணத்தில் வீறு மாமலை யாது மென்னவே
(சு) விரிந்த அரக்கனும் இழைத்திட்ட சதை
பிதுங்கிட விழி நித்தே தெரிந்தனே.

(சுபம்) (சுபம்) (சுபம்)

திரௌபதை மாலையிடு — பாஞ்சாலன் (13)

துரௌபதை [illegible] (17) கம். பாஞ்சால[illegible]

(கவி)

அணிதிகழும் உலகில் உள்ளோர் அனைவரும் மதிக்கும் 13 வல்லவன்
மணிமிகு வெற்றிமாலை மார்புயத் தணிந்தவீரன்
இணையில்லா பாஞ்சால நாட்டிற்கு இறைவனாம் எதிர்த்த பேர்க்கு
இரணமிகு புரி பாஞ்சால ராஜனும் வருகின்றானே

(கரு)

பாஞ்சால ராஜன் வந்தேன் கொலுவிற்கு (பாஞ்)
பாஞ்சால ராஜன் வந்தேன் பக்கத்தில் அமைச்சர் கூட
வாஞ்சையுடனே பல வாத்தியம் முழங்கிட
(சு) வல்லவனென்றுமே எல்லையில் புகழ
மெல்லியர் இருபுறம் சாமரை வீச. (பாஞ்)

டை (கரு)

வெற்றி கிரீட மின்னவே காலில் அணிந்த
வெண்டையமணிகள் துன்னவே
முத்து பதக்கம் மார்பில் மோகன மாலையாட
கத்தியும் வெண்சாமரை தோகையர் வீசவே
(சு) செங்குடை ஏந்திய மிஞ்சிய மகுடமும்
அஞ்சியே மந்திரிமார் வஞ்சியே சூழ்ந்திட. (பாஞ்)

டை (கரு)

வேத கோஷ்டங்கள் பாடவே - வேதியர் வந்து
முன்னே ஆசீர்வதிக்கவே
மாதவம் பெற்ற மன்னர் மன்னர் மண்டபத்திலே
நீதியாம் பெருகும் நிமலன் கொலுவதாக
(சு) நித்திய சர்க்கரை உத்தமனென்றிட
பத்தியே அரசரும் சுத்தியும் செங்கோலிட. (பாஞ்)

(கவி)

வேதமோர் நான்கும் வாழ்க வேதியர் மறையோர் வாழ்க
காதல் மன்னர் வாழ்க புகழ் மறைநீதி வாழ்க
மேதினியோர்கள் வாழ்க விளங்கும் செங்கோலும் வாழ்க
நீதில்லா அதிர்த்தி செங்கண்மால் பாதம் போற்றி.

(கரு)

என்ன சொல்வேன் எந்தன் மனக்குறை மந்திரி (ஆ) என் மந்திரி
மன்னரும் புகழ் பெற்ற உன்னித தோரணையும்
பின்னப் பார்த்தனை விட்டு என்னைக் கட்டச் சொன்னான். (எ)

(டை கரு)

துரோணர் சொன்ன சொற்படி அர்ச்சுனன் வந்து அவன் வந்து
தேரதை உடைத்து கேசத்தை பிடித்து
கட்டிக் கொண்டு வந்து தோரணர் முன்விட்டானே. (என்)

(ஷை தரு)

கண்டு மனம் களித்துப் புன்னகை கொண்டு. அவன் கொண்டு
கட்டதை அவிழ்த்து விட்டு விடுமென
அட்டி இல்லாமலே அவிழ்த்து விட்டார்களே. (என்)

(ஷை தரு)

கட்டச் சொன்ன துரோணரை நான்
வெட்ட ஒரு ஆண் பெறுவேன்
கட்டிவந்த அர்ச்சுனர்க்கு திட்டமாய் ஒரு பெண் பெறுவேன் (என்)

(ஷை தரு)

சபையில் சொன்ன சபதத்தின் படியாக படியாக
உபயாசர் செய் ஓமகுண்டம் தனில்
உத்தமி பிறந்து பக்குவமடைந்தாள். (என்)

வேறு (தரு)

யாகியே மதி யாகியே
மனதினில் ஒருவித விரணம் தோணுது இதனையாரிடம் பதனமாகவே
சாற்றுவேன் துயர் ஆற்றுவேன்.

(ஷை தரு)

யோதனன் துரி யோதனன் செல்வம்
சிறக்கும் பாண்டவர் இறக்கும்படியொரு நெருக்கமாகவே அரக்குமாளி
யிட்டினன் தனல் மூட்டினன்.

(ஷை தரு)

திரௌபதை தையல் திரௌபதை
தனஞ்ஜெயன் வந்து மாலை புரிந்திட கனவு கண்டுமே நினைவு கொண்டவள்
வெட்கிறாள் மனம் தயங்கிறாள்.

(ஷை தரு)

மாதுவை கன்னல் மாதுவை அந்த
காளை அர்ச்சுனன் நாளைவந்துமே தோளைக்கிணங்கிய மாலைபூண்டிட
காண்பேனோ இன்பம் பூண்பேனோ

(கவி) (ஷை கவி)

மந்திரி மாரே கேளீர் மனதினில் நினைத்து வந்த



சந்தேகமில்லாமிந்த சபைதனில் அறியவேண்டும்
விந்தை சோதிடத்தில் நல்ல விற்பன நிபுணரான
அந்தணர் தன்னை இப்போ அழைத்துமே வருகுவீரே.

(கவி)

கோர துரோணனை நான் கொல்ல துஷ்டத்தாய்மனையும் அளித்ததன்
மாரனாம் அர்ச்சுனனுக்காக மங்கை துரௌபதையைப் பெற்றேன்
வீர துரோணனை நானெந்த விதத்திலும் கொல்வேன் அந்த
பாரினில் மருகனை பார்த்ததே எப்போது காண்பேன்.

(கவி)

கபட வஞ்சகனாம் பாவி கடுந் துரியோதனன் தான்
அவமதியாலே செய்த அரக்குமாளிகையில் அந்த
பலமிலா தருமசிந்தை பாண்டவர்கள் ஐந்து பேரும்
தவறியே மாண்டாரென்ற சமாச்சாரம் கேட்டிலீரோ.

(கவி)

அய்யரே தங்களிட ஆசீர் வாதத்தினாலும்
தெய்வமென் மகள் பாஞ்சாலி தான்செய்த தபோ பலத்தினாலும்
உய்யும் பாண்டவர்கள் இன்னும் உயிருடன் இருப்பாரகில்
செய்யும் என் சபதமெல்லாம் சிறப்புடன் நடக்கும் தானே.

(வியாசரிடம் தரு)

விற்குருவாம் துரோணச்சாரி வில்விஜயன் தன்னையழைத்து
மற்பெரிய யுத்தம் செய்து மாணிக்கத் தேர் தன்னையுடைத்தான்
கைப்பிடியாய் தேர்க்காலிலே கட்டிக்கொண்டு சென்றேன் அய்யோ
சொற்பெரிய சபையில் என்னை துரோணரும் இகழ்ச்சி செய்தார்
அப்போது சபையை நோக்கி அவசி முன் சபதமிட்டு
கப்பாமற் என்னை பிடித்த தனஞ்ஜெயன் தனக்கோர் பெண்ணும்
பாத்து வாசர் மைந்தர் துரோணர் பகைமுடித்து கொல்ல ஆணும்
வரத்தினாலே பெற்ற யானும் வாரேனென்று போனேன் அய்யா
சபையில் சொன்ன சபதப்படி அந்த காவலர்கள் சிலையாவே
உபயாசர் வேள்விதன்னில் உதித்தாளையா துஷ்ட தாய்மன்
ஓமகுண்ட சாலையிலே உத்தமியாள் பெண்பிறந்தாள்
சோமனுக்கு நேர் விஜயன் காளையர்க்கு தேவியென்று
தேசமெல்லாம் தானறிய துரௌபதையை வளர்த்தேனய்யா
ஆசையா பேர் நாட்டையெல்லாம் ஆள்வோம் என்று அறியாதோம்

(20)

மோசமாக அவ்வர் தம்மை    மெழு அரக்கு மாளிகையில்
நேசமாக குடியை வைத்து    நெருப்பையிட்டான் துரியமன்னன்
அன்றுமுதல் இன்றளவும்    அவ்வரைக் காணேன் அய்யோ
என்னுடைய மகள் தனக்கு    எவர் வருவாரோ சொல்வீர்.

(கவி)

அரக்கு மாளிகையில் அந்த    அவ்வர் மடிந்தாரென்றீர்
இருக்கின்றார் என்று சொல்லி    இசைந்த சாஸ்திரங்கள் சொன்னார்
செருக்குமென் மகள் பாஞ்சாலி    செல்வியும் பருவமானாள்
திருக்கில்லா முனிவே யாரும்    செய்வகை அறிகிலேனே.

(வியாசர் கவி)

எல்லையில் அநுமந்தாகா    பெரிய சபையில் ஒன்று
மல்லர்கள் சேர்ந்து அந்த வில்லை வைத்தனர் இமையம் சார்பில்
வல்ல பாண்டவர்கள் அல்லாமல்    மற்றவர் வளைக்கமாட்டார்
சொல்லவும் வில்லைக் கொண்டு    சுயவரம் சாடிப்பீரே.

(பாஞ்சாலன் கவி)

காரியம் தெரிந்த மந்திரி    கருத்துடன் முனிவர் சொன்ன
நேரிய சபையில் இந்த    நிமிஷத்தில் வரவே வேணும்
வீரிய புலி போலிந்த    வீரிய கில்கில்யனை
கோரிய வில்லை இந்த    கொலுவினில் தருவிப்பாயே.

(சுபம்)    (சுபம்)    (சுபம்)

## துரோபதை மாலையிடு நாடகம். அர்ச்சுனன்.

(கவி)

நித்திய சப்பரப்பாலக    வேஷம் கொண்டிருக்கும் மைந்த
சதுர்பெரும் சுயவரத்து    தாய் இந்திரா தேவியோடு
தெய்மறையோர்கள் போற்றும்    முன்னூற்று மங்கலத்தை விட்டு
நிதிவளச் சரிபாஞ்சால    நாட்டிற்கு வருகின்றேனே.

(தரு)

அந்தணன் வந்தேனே    சந்தன மணிந்து
விந்தையாக நாடி    வேத்ரகிரியை விட்டு போட்டு    (அந்)
காதினில் தடுக்கன்    கம்மலும் மின்ன துன்ன
விந்தையாக நாடி    வேத்ரகிரியை விட்டுபோட்டு    (அந்)
கையினில் கடகம்    காப்பு மோதிரங்கள்
சோதிமணியாரம்    சூரியன் போல் மின்ன துன்ன.    (அந்)

(21)



சுந்தரப் பாண்டுவின்    சுதனும் வந்தேனே
அந்தணர்கள் வேஷம்    அடவாகப் பூண்டுக்கொண்டு.    (அந்)
பஞ்சரத்தினம் போலே    பாண்டவரும் தாயும்
கொஞ்சி கொஞ்சிப் பேசி    வேத்ரகிரியை விட்டு போட்டு    (அந்)
மலைக் குகை கானாறு    வனங்களெல்லாம் தாண்டி
பலவகையாய் தேடி    பாஞ்சால புரியை நாடி.    (அந்)

(வை) தரு

என்னுடைய நாமதேயம்    யானுரைப்பேன் கேள் கேள் மாதவா
மன்னவன் பாண்டு மகா ராஜனளித்திடும் புத்திரன்    (என்)
சத்தியம் நெறியும் தர்ம்ம    தானமும் நீதி வழுவாமலே
வெற்றி செய்திடும் குருவே வியாசர் விஷ்ணுருக்குப் பேரன்    (என்)
சந்திர குல மரபில் வரும்    தர்ம்ம ஸ்ரீபியாகவுமே
அய்ந்துருக்களாய் வந்திடும்    அய்வராசாக்களிலொருவன்    (என்)
ஆண்டொகை மைந்தன் தனஞ்செயன் அனுமக்கொடியை உடையோன்
காண்டீப மாதவக் கொடுஞன்    கண்ணன் தோழன் சவ்யசாசி.    (என்)
பர்க்குணன் புரவலன் மைந்தன் பார்த்தன் சுவேத வாகனன்
விர்க்கினன் விஜயன் கிரீடி    வீர அர்ச்சுன ராஜன்    (என்)
அர்ச்சுன ராஜன்    அவனி புகழ் கெம்பீரன்
துர்ச்சனர் குலகாலன்    சூரர் பணி அருள் லோலன்.

(தரு)

கன்னி துரோபதை    கல்யாண காக்ஷிதை
கண் களிக்க நாமும்    கண்டு வருவோம்
பண்ணும் புகழ் பெற்ற    பாஞ்சால தேசமும்
பட்டணமும் கண்ணால்    பார்த்து வருவோம்
வேந்தரெல்லாம் கூடி    வில்லை வளைக்கின்ற
வேடிக்கையைக் கண்ணால்    பார்த்து வருவோம்
மாந்துளிர் போன்ற    மங்கை துரோபதை
மாலையிடக் கண்டு    மகிழ்ந்து வருவோம்
பருமறவக் கொடி    பாவி துரியோதனனும்
பாரவில்லை சுற்றே    பார்த்து வருவோம்
அந்தரம் தன்னிலே    தந்திர மச்சமே
ஆடும் சுழலதை நாம்    அறிந்து வருவோம்
சுந்தரமான    சுயவர வெளியில்

தோப்பும் கெலிப்பும்    தெரிந்து வருகுவோம்
சூதானப் பாலி    துரியோதனதியாமல்
தோற்றிடல் போய்    சுருக்காய் வருகுவோம்
மாதாவும் காடும் போய்    மன்றவிடமாய் இருந்து
மங்கை மணம் பார்த்து    மறுக்கால் வருகுவோம்
எருது இடி மன்னர்கள்    நெருங்கும் சபைதனிலே
நீங்கள் ஏகம் சென்று    நின்று வருகுவோம்.

(தரு)

அண்ணடா ஷேஷா    வழியும் தெரியவில்லை
பாரடா    பாரடா
முன்னாதாக கெங்கையில்    யாரோ இருக்கின்றார் வழி
கேளடா    கேளடா
பொற்கொடி துரோபதை    கல்யாணத்திற்கே போவோம் வழி
கேளடா    கேளடா.

(தரு)

துருபதேயன் பட்டணமே    போகலாம்    வெகுதூரம்
நடம் துடந்து    மிக நடந்து
துன்பமும் நாங்களும்    தேடிமாருடனே    (துரு)
(சு) விரும் வழிதனே    கடினமாய் பேசாதே
அடைகிற சுகமதை    முடியவே காணும்.

(தரு)

துள்ளி துள்ளி பேச வேண்டாம்
துரோபதைக்கே கலியாணம்
வள்ளலே நாங்கள் வருகின்றோம் — வித்தியா தரனே
தென்னும் பாஞ்சாலன் சமூகமே.

(தரு)

உக்ரமிகு பாணத்தாலே    உன் பணம் தன்னை
ஒட்டியே நமனுக்கிரை    காட்டுவேன்
திக்குகள் நிறைந்திடவே    அக்கினி
சாவெடுத்தேன்    தீரனே யென் வீரம் பாராய்.

(தரு)

பொற்கொடி துரோபதை    கல்யாண காட்சியை
போய் வருவோம் காணும்    அடடா ஏய்    (போய்)



பூந்தொடையாகிய    பாஞ்சால ராஜன்கை.
தோரணமாங்கானும்    அடடா ஏய்    (தோ)
முத்துப்பருப்புக்கும்    புத்துருக்கும் நெய்யுக்கும்
கூசாமல் வார்ப்பானம்    அடடா ஏய்    (கூசா)
பத்தாங்கி பொன் பெரும் பட்டாங்கி தோவத்தி
முற்றும் தருவானாம்    அடடா ஏய்    (முற்)
ஓட்டமாய் ஓடி சபைக்குள்ளே    நாமும்
உட்கார்ந்து கொள்ள வேணும் அடடா ஏய்    (உட்)
நாட்டமாய் முன்னே    கொடுக்கின்ற தக்ஷிணை
நாம் வாங்கி கொள்ள வேணும்    அடடா ஏய்    (நாம்)

(கவி)

இன்னிய துஸ்டத்தி தாய்மா    சுழல் மச்சேந்திரம் வீழ
மன்னர்வில் வளைத்தால் மாலை    சூடுவதன்றோ ரவையே.
இன்னில மறையோர்க்கு    யெந்திரம் விழச்செய்தாலே
சொன்ன துரோபதையை மாலை    சூடுவதன்றோ சொல்லும்.

(தரு)

ஏழை பாப்பான் வல்லமையை சற்று எல்லோரும் கண்ணினால் பாருங்கள்
சுழல் மச்சேந்திரம்    துளைக்குவேன்    அண்ட
கோளத்தையும்    ரெண்டாய் பிளக்குவேன்.
யானைவிருங்கிற    அம்மை யருக்கு கொடு
பூனை சுண்டாங்கி அல்லவோ
அக்கினியைத்தின்று    தக்கின்ற பிள்ளைக்கு
அவ்வித்தை தண்ணோ பகை    சொல்லவோ
(சு) வானுற்ற சக்கரம் மச்சையைப் போக்குவேன்
மேலிட்ட நக்ஷத்திரத்தையும் தாக்குவேன்.

(ஜ தரு)

அண்டத்தை வைத்து    தாலாட்டும் பிடாரிக்கு
சுண்டக்காய் மெத்த பாரமோ
அலைகடல் தண்ணீரை    குடிக்குமடைவைக்கு
இலவம் பஞ்சுத்தினி    கனமோ
(சு) கண்டதிர்த்திடும்    குண்டத்தை வாட்டுவேன்
சண்டப்பிரசண்ட உத்தண்டத்தை வாட்டுவேன்.

(தரு)

வில்லை வளைத்து வெல்லையைக் கொள்ளாமல் போன
வெட்கம் இக்கி கெட்டுப் போன வீரரே
பாரில் இனி ஒருவனுக்கு பாரியாள் ஆனபின்பு
பவுஷம் வந்த தென்ன வீரரே.
(தரு)
தையலைக் கொள்ளும் சவுரியங்களெல்லாம்
சபையிலவனிடம் பார்த்தனமே
ஐய்யா எமன் சும்மா உயிருடனே தப்பி
ஓடிப் போகக் கண்டோம் மன்னரே.
(தரு)
அடிக்கின்ற சமர்த்தெல்லாம் கொடிக்கின்ற விற்சபை
அருகிலிருந்த நான் பார்த்தனே
பற்றிக் கடிக்கின்ற நாய் சும்மா இலைக்காதென்று
பழங்கதை கேட்டதில்லையோ மன்னரே.
(சுபம்) (சுபம்) (சுபம்)

## சுபத்திரை மாலையீடு நாடகம் - அர்ச்சுனன்.

(கவி)
பூக்காத காவந்தன்னில் பூத்த தோர் பாண்டு மைந்தன்
மிக்க கெம்பீர தீரன் விஜயனும் புஜபல சாலி
பக்குவமுடனே சென்று பலதீர்த்தமாட வேண்டி
தக்கென நாடித் தேடு தனஞ்ஜெயன் வருகின்றானே.
(தரு)
அப்பா மறை யோனே நாமிப்போ
யாத்திரை மார்க்கமாய் போய் வருவோம்
துய்யா மறையோரே நாம் இப்போ
துரிதமாக யாத்திரை போய் வருவோம்
பாதி மதியணிந்த சிவ சொக்கர்
பாதத்தை அனுதினம் மறவாமல்
வேத புலவோரே நாமிந்த
வேடிக்கை யாத்திரை போய் வருவோம்.
(தரு)
என்னுடைய நாமதேயம் யானுரைப்பேன் கேள் கேள் மாதவா
பாட்டு பாடவும்,
(தரு)



நாரதர் சொற்படிக்கு அர்ச்சுனராஜன் நாகலோகம் புகுந்தான்
நீர் உலூபியாளை அர்ச்சுனராஜன் ஜெயமாய் மணம் புரிந்தார்,
அரவான் தனைப் பயின்று அர்ச்சுனராஜன் அன்புடனே அளித்தார்
தெற்கு முகம் நோக்கி அர்ச்சுனராஜன் தென்மதுராபுரி தான் நடந்தார்
சித்ராங்கதையாளை அர்ச்சுனராஜன் சிங்காரமாகவே தான் மணந்தார்
பப்புருவாகனனை அர்ச்சுனராஜன் பாங்குடன் பின்பு ஈன்றெடுத்தார்
வடக்கு முகம் நோக்கி அர்ச்சுனராஜன் வடமதுராபுரி தான் நடந்தார்
கிருஷ்ணன் பலராமனை அர்ச்சுனராஜன் கண்டு தரிசிக்கவே
(கவி)
அன்னவனே போற்றி ரவி குமரனே போற்றி போற்றி
மன்னனே போற்றி தீர்த்த மாதவா போற்றி போற்றி
என்றுமானவனே போற்றி ஒருவராய் தெருவனி
இன்னபடி வந்த சேதி நவிலுவீர் நவிலுவீரே.
(தரு)
கல்யாணம் செய்து வைப்பமே கண்ணபிரானே (கல்)
கல்யாணம் செய்து வைப்பும் கன்னி சுபத்திரையை
மண் அளந்த நாராயணா மாயவா அரிகோவிந்தா.
(தரு வேறு)
உனக்கு கொடுக்க விருப்பம் தானுண்டோ சுபத்திரையை
மணக்கத் துரியன் தகுதி தானுண்டோ
என்னுடைய சுபத்திரை மேல் எனக்காசை தானோ சுவாமி
என்னை விட்டு நீர் கொடுக்க இஷ்டம் தானோ உனக்கு.
(கவி)
விரும்பிய தொண்டு காவி வேஷமாய் காடு தன்னில்
வரும்பய மொழிந்து வேறி மாண்டர் பாருக்கோனை
உவம்பியல் மணமுங்காவி உடையுடை துணையுமாக
விரும்பிய சன்யாசிபோல் அர்ச்சுனன் தோன்றினானே.
(தரு)
சன்யாசி வேஷமாகினேன் தனஞ்செயனும்
பின்னலாசை கொண்டு வாடினேன்
விமலவடி சிரசின் மேல் வித்தகனும் வைத்தது போல்
திமை மேடுக் கொக்கை போல நிலையிலிருந்தான் வேடி.
(கவி)

அய்யய்யோ மதனா உந்தன் அருங்கணை மலர்களாலே
ஐயுறேன் எந்தன் மேலே இருந்தப்பெண் ஏசிவிட்டாள்
தையல் மேல் கணை தொடுத்து சதுரங்க லீலை செய்வாய்
கையுறேன் விரகத்தாலே நானென்ன செய்வேனய்யோ.

(தரு)

ஏன்ன செய்வேன் என்ன செய்வேன் ஏது செய்வேன் விதிவசமே
மன்மதன் பாண விரகத்தாலே வாயுமில்லை வசமில்லை
கூசாமல் கால்பிடித்தேன் குணங்கெட்ட வார்த்தை சொன்னாள்
ஆசை உருவமானேன் அறியாது போலே போனாள்
உறக்கம் இனி வராதே ஏதும் ஏதுவோ ஆவது ஏது
பொறுக்க முடியவில்லை பொழுதும் விடியவில்லை
சுபத்திரை என்றும் பெண் துரியோதனனுக்கு ஆனாள்
விபத்தியான சன்யாசி வேஷமும் ஆனேனய்யோ.

(வெண்பா)

நித்திரையும் கெட்டதே நெஞ்சம் தடுமாறுதே
சத்துருவாய் காமன் சரந்தைக்குதே
ஐமத்தொருவர் அருகில் இருந்து வாடி ஆசையை தீர்க்க

(தரு)

ஆர் வருவாரோ குயில்வண்ணங்கள் அழைத்து வாரீரோ
மயிலானப் பெண்ணை அழைத்து வாரீரோ.
மயிலானப் பெண்ணை உங்களெதிர் வந்து
கணைதைத்திடு முன்னே மணமுடித்த உதவி செய்ய. (ஆர்)

(கவி)

கொங்கை கனத்ததோ கொடியிடை தான் நொந்ததோ
செங்கமல பாதம் நின்றும் சிவந்ததோ
மங்கை நல்லீர் மெய் வெயர்த்ததே மானே மயிலினையே
என்னென் எப்பொழுது வந்தாய் இங்கு.

(தரு)

இந்திரபுரியில் வாசமாய் இருக்கும் மந்த
என் பெயர் விஜய ரிஷி தான்
இந்த உலகமெல்லாம் வெகுநதியிலாடி
சிந்தை மகிழ்ந்து கன்னி தீர்த்தமிங்காட வந்தேன்.

(தரு)



நாலுபேர் தன்னை உதைத்தாய் — அர்ச்சுனன் பேரை
கூறிக் கேளாமல் மறைத்தாய்
ஏன் அவனைக் [illegible] கேளாமல் இகட்டு செய்ததென்ன
வானவர் கோன் மைந்தனை மறந்து விட்டதுமென்ன.

(கவி)

பாதகி சண்டாளி இந்த பழிதனை என் மேல் வைத்து
ஆதியாய் பிழைக்கு மந்த அமுதை நீ கொடுக்க வந்தாய்
ஏதடி பெண்ணே நீ தான் ரிஷி என்று அறிந்திருந்தும்
மாதருக் காசை யிந்த மடிமங்கா போ போமா

(தரு)

மைத்துனன் என்று என்னை மனதில் எண்ணிக்கொண்டாய்
அச்சமில்லா வார்த்தை அன்பாய் உரைக்க வந்தாய்.

(தரு)

பத்தர் மாதினே னென்று பதில் வசனம் சொன்னாய்
கிருத்திமன் அறியாமல் நான் உந்தனை சேரேன்.

(தரு)

ஐயுறேன் என்று சொல்லி என்னை மயக்க வந்தாய்
கைபடலே உன்னைத் தொடேன் பெண்ணரசே.

(தரு)

அட்டி செய்யாமல் என்னை அணைந்தால் பலபத்திர ராமர்
வெட்டி எரிந்திடுவார் பெண்ணரசே.

(கவி)

சோகமும் ஆனேனென்று தோகையே சொல்லிக்கொண்டாய்
மோகமும் தீர்ப்பதற்கு முடிந்திடா தெந்தனாலே
வாது சேர் துரியராஜன் வந்துன்னை மணமும் செய்வான்
போகும் உன் இடத்தை நோக்கி இனி இங்கே நிற்கொணாது.

(தரு)

பாபத்தை சொல்லாதடி தவியோட பதியேத்துக் கொள்ளாதடி
பாபம் இந்த வார்த்தை பதறுதே என்னோடு
சோகம் தீரவென்றால் துரியன் வருவான் நாளை.

(தரு)

சிவசிவா சங்கரனே இப்படிப்பட்ட அநீதம் சொல்லாதடி
பரதேசி எனக்கிந்த பரிகாசம் தெரியாது
சரியல்ல உனக்கிது [illegible]

21 (தரு) 28

மையல் கொண்டேனென்டி சுபத்திரா
இது மரியாதை இல்லையடி
அய்யய்யோ இனி விலகி அண்ணன் தன்னை விட்டு
உய்ய வழி தேசாடி உந்தன் நான் போகிறேன்.

(தரு)

வீண் வார்த்தை சொல்வது ஏனோ சிவ
சங்கரர்க்கு அற்புதம் தானோ
வீணே வீண்பழி தேடிக் கொள்ளாதே
வெகு மோசக்காரி நீ இனி பிழைக்க கில்லாதே.

(தரு)

மணமென்ன செய்வது நீதியோ அடி
மங்கையே நானுந்தன் சாதியோ
இனி யொன்றும் வார்த்தைகள் என்னோடு பேசாதே
யோகாந்த சன்யாசியை ஏளனம் செய்யாதே.

(தரு)

மதிகெட்டு போகாதே சுபத்திரா என்னை
மணக்க வேண்டுமென்று நினைச்சியோ
பலபேர் அறியவே பெரிய அரசனை
அவமதித்தவனுக்கு மனைவி ஆனப்பின்னே.

(தரு)

சங்கடம் பேசுவாய் மாதே — எந்தன்
சாவகாசம் தெரியாதே.

(தரு)

உறவாடுதல் வெகு மோசமே — உந்தன்
அன்னையே உயிர் நாசமே.

(தரு)

செல்வி உனக்கினி நான் அல்லவோ — வெகு
நல்ல வார்த்தைகள் சொல்லவோ

(தரு)

உயிரை விட்டவனைக் கொன்னடி — அடி
உனக்கும் எனக்கும் ... பெத்த முறையோ

(சுபம்) (சுபம்) (சுபம்)

நீலி நாடகம் — நகன்

(கவி) 29

25.

சோணியில் உதித்தோர்க்கெல்லாம் தையலர் மையிருக்கும்
அறிவை கேள் தம்பிமார்கள் அன்பு துணை பகையாள் தாலும்
கருணையாய் அருகில் சூழ கதிர்மணி பணிகள் மின்ன
பரந்தாமா தீனையே பொன்று பக்கவர் வருகின்றேனே.

(தரு)

கொலுவில் வந்தோர் தரணிக்கதிபதி (கொலு)
விலகும் மறையோர்கள் வேதமே பாடவே
இருபுறங்களும் ஆலவட்டம் ஏந்தவே
கருணையுடன் வீமன் குடை பிடிக்கவே
கவரிசாமரை நகுலன் போடவே. (கொலு)

(தரு)

அருகில் நின்று சரினை செய்துமே
அர்ச்சுனனும் வருகவே
சாஸ்திரம் சகாதேவன் படிக்கவே
சத்தி துரோபதை அருகில் சூழவே
பார்த்திப ராஜர் நெருங்கி வருகவே
பஞ்ச வாத்தியம் பாடி ஆடவே. (கொலு)

(தரு)

சகல முனிவர்கள் சகல மறையவர்
சமஸ்த வாசிகள் பாடவே
அகத்தில் அரி இருந்தா வென்றுமே
அன்புடன் கொலு வருகவே. (கொலு)

(கவி)

காளியங் கடல போற்றி கார்முக தலைவா போற்றி
கோவிலில் குடிகொண்டிருந்த இறைமற்றவரே போற்றி
தேவியெங்கள் ரக்ஷிக்கும் வித்தகா போற்றி
தர்ம தேவதையான எங்கள் சித்தப்பா போற்றி போற்றி

(கவி)

நீதியும் நேர்மையும் நல்ல நிலைமையும் நிகழும் அன்பு
ஒதுங்கி தெய்வமணைந்த உத்தமா நின்றேன் போற்றி
தெய்வாதனை இந்த சிறியோனை ஓர் பொருட்டாய் எண்ணி
யாது காரணமாய் வந்தீர் எந்தையே உரை செய்வீரே.

(தரு)

கே.பி. செல்வகுமார்,
மாவட்ட பொதுச்செயலாளர்,
தமிழர் தெருக்கூத்து கலைஞர்கள் இயக்கம்
விழுப்புரம் மாவட்டம் (தெற்கு)

அசுரர் வாசு தேவா அனந்த ரக்ஷகனே மூர்த்தி
அனியாயம் தானோ இன்னும் ஆதிமூலமே
பரிவாய் இந்த மோசம் செய்ய பாவிகளெவர்கள்
பக்ஷம் பிரிந்தாரைப் போல ஆதிமூலமே
நன்மையும் புகழும் நல்ல ஞானமும் பலமும் வாழ்வும்
நலமாய் செங்கோலும் பெற்றோம் ஆதிமூலமே
வண்மை புகழ் நீதி மார்க்கமும் தெரிந்தவர்
வஞ்சனை சூதாடலாமோ ஆதிமூலமே
பஞ்சமா பாதகத்தில் இந்த பகையும் ஏன் தானென்று
பெரியோர் தள்ளிவிட்டீர் ஆதிமூலமே.
நெஞ்சினில் எண்ணாந்தானோ கெடு நெஞ்சன் சூதாடவே
நினைப்பது சகுனி மாமன் ஆதிமூலமே
நாராயணா கோவிந்தனே நாபெண்டே(?) திவ்விய பாதா
நமோ பக்த வத்சலமே ஆதிமூலமே
பாவாய் இந்த வேளை தோம்(?) பரம புருஷோத்தமனே
பரந்தாமா நீயே கதி ஆதிமூலமே.

(கவி)

தோர்த்தவ எவர் செய்தாலும் தோதகம் எவர் செய்தாலும்
தந்திரம் எவர் செய்தாலும் தர்மமே ஜெய மென்றெண்ணி
அந்தமே நிறைந்த தம்பி அர்ச்சுனா வாடா ஏகாந்த(?)
தந்தையார் அனுப்பும் ஓலை எடுத்ததை படித்திடாயே.

(கவி)

எரிமலை(?) அண்ட கோளம் இடித்திட்டாலும் ஆழி பொங்கி
பிரளயம் வந்திட்டாலும் பிராரப்தியம் தள்ளலாமோ
வருவது வரும்போதும் வாராதது வாராதென்றும்
தினக் கொண்டும் சொல்வழக்கம்(?) என்றுநாம் வாழ்வோமே.

(தரு)

அந்தப்புரத்தை(?) போவோம் வாராய் தம்பியாவரும் வாவாய்
அந்தப்புரம் நாடி அன்புடனேக் கூடி
சுற்றிலும் சேனைகள் சூழ மெத்தவே மன்னர்கள் தாழ. (அ..)

(ஜதரு)

வீரர் புகழ் பாண்டு புத்திரர் இவரென்று
வேசவை யாவர்களும்(?) நேசமுடன் ராஜர்களும். (அ..)



(ஜதரு)

ஆடம்பர பேரிகை வீரமல்லர்ப்பல(?)
தாரையுடனே பூரி(?) வீரிட இன்னம்பல்லவரி(?) (அ..)

(ஜதரு)

நறுமலரினி வலர் நெடுமால்தான் பூசித்து
பெருமை உபயாசன் அருளும் செல்வியமுடன். (அ..)

(கவி)

மங்கை துரோபதையைத் தந்தேன் மாமியார் இடத்தில் தானே
சங்கையுடனே நீயும் சகுனியுடன் இருந்தாயானால்
துங்கமாய் பீஷ்மர் கிருபர் துரோணர் மற்றுமின்னோரை
போங்கமாய் பணிந்து போற்றி பெருந்தவே வருவோமே.

(தரு)

மண்டபம் அமைந்த விந்தை பாராய் தம்பி பாராய்
கண்டதிபோலும்(?) இதைப்போல் கண்கவரும் மண்டபத்தை
எங்கும் நான் கண்டதில்லை தங்கவொளி வீசுதே. (மண்)
பளிங்கினால் தூண்கள் பவளத்தால் அமைத்த
இலைகளில் பச்சைகள் விளக்கிய இருக்கிறது(?). (மண்)
வச்சிர கொடுங்கை வலம்பிரி(?) பொன்னிறம்
உச்சித ரத்தினம் இச்சையுடன் இழைத்த. (மண்)
கொத்து சித்திர வேலை எத்திசையிலுமின்றே(?)
இத்தனை அதிசயம் மெத்தவே தோணுகின்றதே. (மண்)

(கவி)

வேதங்கள் இருக்க ஞானம் விளங்கும் நூல்களிருக்க
நல்ல நீதி சாஸ்திரமிருக்க நிபுணர்கள் பலரிருக்க
நூதனமாகச் செய்து நுவலுரு மண்டபத்தில்
சூதுமனையர்(?) செய்யும் தொழிலேன் செய்ய வேண்டும்.

(தரு)

ஸ்ரீ கிருஷ்ணா அரி திருப்பையா — உந்தன்
செயலல்லவோ ஜெகரக்ஷகா தீனதயாளா.

(தரு)

பதறாமலே ஆடும் கேளும் மாமா (பத)
பதறாமல் பாய்ச்சிகையை பக்குவமாய் போட்டு
பந்தயம் வைத்ததை பார்த்திட வேண்டும். (பத)

(தரு)

தர்ம்மமே சத்தியம் அரிகள். (தர்)
இம்மையில் கோடி இடறுகள் வந்தாலும்
நன்மை சேர் நாடு நகரத்தை தோற்றிலும். (தர்)

(தரு)

உங்களுக்கே செல்வம் பெருக்கட்டும் — நாங்கள்
ஒடுங்கினாலும் தர்ம்மம் இருக்கட்டும்
எங்களுக் கெத்தனை இடறுகள் வந்தாலும்
அங்கமும் இன்றி உங்கள் அடிமையாய்ப் போனாலும். (உங்)

(தரு)

அய்யய்யோ இதெல்லாம் அசக்கருத்ததல்ல
அன்னீதன் செய்ததால் அதற்கு நான் சொல்ல
வெய்யான மேர்க்கமும் பொய்யான மார்க்கமும்
விச்சுகளும் கொஞ்ச பேச்சுகளும் பார்த்ததால்.

(சுபம்) (சுபம்) (சுபம்)

(துகில் நாடகம் விதுரன்)

(கவி)

நல்லவனென்று சொல்லி நாட்டினில் கீர்த்தி பெற்ற
பல்லியம் முழங்கத் தேரில் படைமன்னர் புடை சூழ
சொல்லிய தலையணையும் சுகத்தினில் அமைத்தாரென்று
வில்லினில் திறமிகுந்த விதுரனும் வருகின்றானே.

(தரு)

சத்திய விதுரனுமே வந்தேன் நல்ல
படைசுற்றும் புடைசூழ புவிதன்றும் புகழ் பெற்ற (சத்)
ஒருவரும் எதிரில்லா வில்லாள் இந்த
உலகம் மெச்சினாலும் ஒருபொய்யும் சொல்லான்
வீரமின்ன பேச்சுகள் பின் நில்லான்
மெய்ஞான பொருள் கொண்டு வீண் பொருள் சொல்லான்
தருமத்தை மறவாத சீலன் என்றும்
தவறில்லா கலை கற்ற சர்ச்சன குலன்
அருமை புகழும் உள்ளவன் — தினம்
அனைவருக்கும் நயமான் ஆத்ம பரிபாலன்
வந்தவன் தன்னை பல்லாமல் இது
மாய வார்த்தை என்று மறுவார்த்தை சொல்லாமல்



சந்தேகம் எதுவும் கொள்ளாமல் இப்போ
சமையன் அழைத்ததற்கு தடையென்றும் சொல்லாமல். (சந்)

(கவி)

பாதிநாடளித்த பின்பு பகிர்ந்திட நினைத்து வஞ்சம்
சூதினால் வெல்லவோமென்று சொல்வது தருமந்தானோ
நீதியோ நெறியோ அய்யோ நீர் சொல்லும் கொடிய வார்த்தை
காதிலும் கேட்கலாமோ கனவிலும் நினைக்கப் போமோ.

(கவி)

கனவான சூதும் வேண்டாம் கருதிநாம் கொடுத்த நாட்டை
தரவேண்டும் என்று சொல்லி தகப்பன் கை ஏவினால்
பரிவாக நாட்டை விட்டு பாண்டவர் வனமே போவார்
உலகை உவகை நீயே ஒருமிக்க ஆள்வாயப்பா.

(கவி)

உற்றது சொன்னேன் நீங்கள் ஒருவருக்கொருவர் நெஞ்சில்
பற்றியே பகையைக் கொண்டால் பாரினில் மன்னர் நகைப்பார்
மற்றுமென் மொழி கடுத்து வஞ்சனை சொன்னேன் என்று
குற்றமும் என்மேல் சொன்னால் கூறுவதினால் வேறு இல்லை.

(கவி)

ஆனதோர் உன் குடிக்கு அப்பட்ட சனி போல் வாய்த்த
தோன்றிய சகுனி மாமன் துர்ப்புத்தியாலே அந்த
உந்தன் தன் அரசும் வாழ்வும் இழந்திட காலம் வந்தால்
உணர்ந்திய பெரியோர் வார்த்தை உரைக்குமோ உணர்ந்து பாரோ.

(தரு)

அய்யய்யோ இப்படியும் செய்வாரோ துரோகம்
அரிகள் இதை நினைத்தால் ஆறுமோ சோகம்
அய்யய்யோ இது சகுனியால் விளைந்த மோசம்
அகமுடைந்த கவுரவர்க்கு புகமுடியு காலம்
கர்ணன் துர்ச்சாதனன் சகுனி கருத்துடையன் சூது
கருதியவர் கொடி முடிந்த கபட வஞ்சகந்தானே
பின்னரும் சிறு பாண்டவர்க்கு இன்னும் கருத்தெரியாதோ
திருவுளமே துணையல்லவா தீக்கொருவர் உண்டோ
ரத்தமும் திருதராட்டிரர்க்கு ரோசந்தான் இல்லையோ
நம்ப வைத்து கழுத்தறுக்கும் ஞாயமது கொண்டோ

(34)

சூஸ்திரம் செய்30 சகுனியவன் · இருந்ததென்ன கண்டோ
கொடுசெய்து வாழ்ந்தவர்கள் இவ்வையத்திலுண்டோ
தர்மபுத்திரர்க்கு திரக்சாரம் பொல்லாதோ
சதிரான தேவிகள் தர்மமும் இல்லாதோ
அருமை என்ன பாவிகளே அக்ரமம் வெல்லாதோ
அரசன் அன்று கொன்றிக்கால் தெய்வம் நின்று கொல்லாதோ.

(தர்ம்மர்பட்டம் கவி)

மெய்வரும் நீதி வாய்ந்த மிகு வதனமே வாழி
கைவரும் வில்லியில் வெற்றி கண்ட வீரர்களே வாழி
பொய்வரும் மொழி சொல்லாத புகழ் உத்தமரே வாழி
அய்வரும் வாழி எந்தன் அருமை கண் மணிகளே வாழி.

(கவி)

பாவலர் சொல்லக் கேளீர் பாண்டுராஜனுக்குதித்த
சேனைம் பெரியதந்தை திருதராட்டிர மகிபன்
மேலும் உங்களை அழைத்து விரைவுடன் வரவே சொல்லி
ஓலையும் எழுதி தந்தார் உள்ளபடி வேலை கண்டாய்.

(தரு)

நீர் செய்யும் யாகம் தனக்கு வந்திருந்து
நின் புகழ் பெருமையும் கண்டு
நெடுமுடி துரியன் கெடுமதி சகுனி
நெஞ்சில் பொறாமை எண்ணி
மாளிகை பெரிய மண்டபம் செய்து
மகிழ்ந்ததில் குடிபுகும் தினத்தில்
மைந்தரே உம்மை அதில் வரவழைத்து
மாயச் சூதாடவே உங்கள்
தேசமும் அரசும் செல்வமும் பறிக்க
திட்டம் ஆலோசனை செய்து
இறந்த உன் பெரிய தகப்பனார்க்கிங்கிதங்கள்
செப்பினவரும் சம்மதியாய்
ஆசையாய் நீ போய் அழைத்து வா என்று
அன்புடன் எந்தனை அனுப்ப
அவ்வுடன் எழுதி கொடுத்த உன் பெரிய
அப்பன் கை-ஓலை இதப்பா.

(சுபம்) (சுபம்) (சுபம்)

நாடகம் இயற்றியவர் ராமச்சந்திர கவிராயர்-

துகில் நாடகம்: துச்சாதனன் செந்தி-மெய்ச்சேரி

(கவி) (35)

ராஜசன்யம் என்ன மாட்டேன் தயவையும் எண்ணமாட்31ன்
நாட் சென்றவரை எல்லாம் நானிப்போ தீர்த்துக் கொல்வேன்
வாழ்சென்ற மன்னரெல்லாம் மருவிய கொலுவின் முன்னே
சூழ்ச்சியாய் கொண்டு வந்து சிறுக்கினில் விடுவேனே.

(தரு)

அப்படியா சொல்லலாச்சா எங்கள்
அடிமையாய் போன பின் பேச்சா
தப்பிதம் சொன்னவரை தவிடாக இடிக்கிறேன்
தடுத்துச் சொன்னால் வாயை பிடித்துக் கிழிக்கிறேன். (அப்)

(தரு)

புலியைப் பூனை வந்து வெல்லுமா இந்த
போக்கெல்லாம் இனி இங்கே செல்லுமா
நலிய மயிர் பிடித்து நானே இழுக்கிறேன்
நியாயம் எடுத்துச் சொன்னால் நாக்கை அறுக்கிறேன். (அ)

(தரு)

செத்த மாடு புல்லைத் தின்னுமா இந்த
சித்திரமின் இங்கு மின்னுமா
எந்தன் சத்தம் கேட்டவுடன் வந்தாலே பார்க்கிறேன்
தடங்கல் சொன்னால் சக்கை சக்கையாய் போக்கிறேன். (அ)

(தரு)

பெண்கள் சாதிக்கிந்த வார்த்தையா
பிரிதுகாமியா நீ பார்த்தாயா
என்படுந் தாயை இப்போது அழைக்கிறேன்
இகலெடுத்துச் சொன்னால் கைபிடித்திழுக்கிறேன். (அ)

(1.) (கவி)

மதித்த துரோபதையே நீதான் மானமுள்ளவளோ ஆனால்
விதித்த நூற்றொருவர் என்பு வேறு வென்றதுவோ யானால்
கொதித்தவன் அண்ணன் உன்னை கொலுவினில் அழைக்கச் சொன்னான்
எதிர்த்ததாலும் சொல்லாமல் எழுந்திருந்து என் பின் வாராய்.

(கவி)

(3) நடக்கத்தான் வந்தேனிப்போ நாழிகை தன்னிலே உன்னை
அடக்கத்தான் வந்தேனிங்கே எங்கள் அண்ணன் முன் கொண்டு
விடுக்கத்தான் வந்தேன் எந்த வேந்தர்கள் சபையில் வெட்கம்
கெடுக்கத்தான் வந்தேனந்த தர்மமும் ...

மன்னிய தர்மபுத்திரன் வலிய சூதாடியே
முன்னே நாடு நகரம் முழுதுமே தோற்றேன் பின்னே
[illegible]
உன்னையும் தோற்றேன் எல்லாம் செருக்கினை வந்துபாராய்.

(தரு)

கேட்டு இருக்காமல் போவேனோ போனால்
துரியோதனன் தம்பி ஆவேனோ
பட்டி உன் பாண்டவர் பரிகேசி ஆவரோ (தொ)
படிவாங்கி கொண்டே அடிமையாய் போனவரோ.

(தரு)

என்ன நீ எண்ணாமல் பேசுவாய் உனக்
கேற்றபடி எல்லாம் வீசுவாய்
மண்ணி யுன்னிக் காலே பின்னி நனிக்கொல்ல (ஏ)
பின்னைப்பின்னமாக முன்னும் பின்னுமாக

(தரு)

ஆட்டத்தில் உன்னைவைத்து தோற்றேனே நீங்கள்
அடிமையாய் போனதும் பார்த்தோமே
ஆட்டி நீட்டிப்பூச்சி காட்டிச் சொல்லாதே வெகு
வேற்றுமையாய் வந்து நீட்டிக்கைப் பேசாதே

(தரு)

மெத்த மெத்த துள்ளி விழுவாய் என்ன
மேல்வரப் பெண்ணாமல் பேசுறீய் என்ன நீ
கற்ற சமர்த்தெல்லாம் காட்டுவாய் என்ன நீ
கண்ணீர் உதிர்த்து கசக்குவாய் என்ன நீ
சித்துக் கள்ளி போலே எத்துகள் இந்த
சித்துகளின் வெகு வித்தைகள் சும்மா
நடந்து நீ வா வா கொலுவுக்கு நடந்து நீ வா வா

(தரு)

பத்தினிவாக்கு நான் பார்க்குறேன் வா உந்தன்
பட்டி நீவட்ட மேட்டாதே வா உந்தன்
வித்தைகள் சொல்லி விளக்காதே வாவுந்தன்
வெண்ணீரிலே வீடு வேகாது வா சும்மா
போ கிக்குவாய் [illegible] என்னை தூவிக்குறேய் இப்போ



பூசிக்குவாய் சும்மா சொலிக்குவாய் இப்போ
நடந்து நீவா வா கொலுவிற்கு நடந்து நீவா வா.

(கவி) (கவி)

விதிநல்ல விதியே யானல் வில்வளைத்திடாத
மதியில் என் அண்ணனுக்கு மணமாலை சூட்டாமல்
கெதியில்லா பாண்டவரை கெதியென்று நம்பிகெட்ட
இதனுடன் போமோ இன்னும் இருக்கினைந்தும் வா வா.

(தரு)

விண்ணணம் பேசி நிறுக்குவாய் என்ன நீ
வெகு சாலம் பேசி ஒழுக்குவாய் என்ன நீ
ஒண்ணொன்று எட்டாய் முடிக்குவாய் என்ன நீ
இதோ சும்மா நொடிக்குவாய் என்ன நீ
ஒட்டாதே என் சொல் தட்டாதே. என்ன நீ
தட்டாதே கம்பி திட்டாதே நீயும்
பேசாமல் நீவா வா கொலுவுக்கு பேசாமல் நீவா வா.

(தரு)

மாட்டுக்காரப் பையல் போல் என்னைப் பேசாதே
மாதாங்கி நீ சும்மா வீசெல்லாம் வீசாதே
நீ[illegible]ட்டியாட்டி உன் நீட்டெல்லாம் காட்டாதே.
நீமிஷநேரம் போனல் மானம் நில நிற்கமாட்டாதே.
தலுக்காதே பேய் போல் நலுக்காதே கொஞ்சி
குலுக்காதே மிஞ்சி பலிக்காதே இங்கு பேச.

(தரு)

பாண்டவர் [illegible] பேச்சி பகலே முடிந்தது
பதியெல்லாம் உன் தலைமேல் விழுந்தது
தாண்டியே யென்னுள்ளம் தணலாய் எரியுது
சபையிலே நீ வந்தால் எல்லாம் தெரியுது
வெடிக்காதே வீங்கி துடிக்காதே கள்ளி
கொடிக்கா போ சொல்லி துடிக்காதே இப்போ.

(தரு)

பாங்கா என் அண்ணனை பார்த்து நகைத்த உன்
ஆங்காரமிப்போ அறியுவேன் வா வா
தாங்காமல் நீ இந்த சபையினில் கேட்ட

தீங்கை வழக்கை தீர்க்குவேன் வா வா
தேவைபட்டும் சும்மா விட்டுப்போகமுந்தன்
ஆணவமிங்கே அரியுவேன் வா வா
நாகரீக மெல்லாம்
நாணயமான உன் நாகரீக மெல்லாம்
நாணவே எல்லோர்க்கும் காட்டுவேன் வா வா.

(கரு)

தேவவந்தானென்ன செய்யும் பார்ப்போம்
உன்வித்து வித்தை யிங்கே காட்டாதே
சேவையிற்கிருந்த சபையிலே நானுன்னை
தீகம்பல மார்க்காமல் விடுவேனோ.

(கரு)

மேயமாக ஆதி மாயனென்று சொன்னால்
நிலைநிற்கும் மாண வமென் றெண்ணதே
ஒரு நிமிஷத்திலே இந்த அகங்கரெல்லாம் உன்னை
நிர்வாண மாக்குவேன் பாராய்.

(கரு)

உன்றன் சேவையெல்லாம் உள்ளிந்து கொண்டேன் இன்னும்
ஒருகத்து இருக்குது பாராய்
ஒருகத்து போனவுடன் பரிசுத்த மில்லாமிங்கு
உடனே வெட்ட வெளியாக்குவேன்.

(கரு)

பலபேரு மெய்யென்று மெச்சிக் கொள்ள வுந்தன்
பத்தினி தனமிங்கே காட்டாதே - இப்போ
பாரில் உன் சேவையை உன்றன் சபைதனில்
பவுசை கெடுக்குவேன் பாராய்.

(கரு)

மாமா துகில் வளர மந்திரங் கற்றாய் உன்
மந்திர வித்தைக்கு சலிப்பேனோ
வளைக் துகிலெல்லாம் வெகுசீ வாங்கி நானுந்தன்
மானங் கெடுக்குவேன் பாராய்.

(கரு)

இவமிட்டே சும்மா ஏழுகுவாய் - உந்தன்
ஏழுகெடுக்கப் பயப்படுவேனோ

KP. [illegible]





கைசோர்ந்து போனாலும் மெய் சோர்ந்து போனாலும்
உன்னி பங்கம் பண்ணாமல் விடுவேனோ.

(கவி)

அதிவல்ல அண்ணை கேளும் அடையுடன் ஏற்றம் போட்டு
மறிகடல் நீரை எல்லாம் மானவே இறைத்திட்டாலும்
கொடியுள்ளம் படைத்திருந்த துரியோதனன் இடம்விட்டு
எவ்விது கடமையையா இனி என்னால் ஆகாதப்பா.

(சுபம்) (சுபம்). (சுபம்)

## தபசு நாடகம்: அர்ச்சுனன்

(கவி)

சடைமுடி தரித்து மெய்யில் தவள வெண்ணீறும் பூசி
இடையினில் காவி வேஷ்டி இன்பமாய் ருத்ராக்ஷம் பூண்டு
சடையாண் யீசர் பாதம் தன்னையே மனதில் கொண்டு
அடலம்பு வில்லும் கொண்டு அர்ச்சுனன் புறப்பட்டானே.

(தரு)

திங்கள்தன் குலத்தோன் பார்த்தன் சிறுடன் வடக்கை நோக்கி
சங்கரா கெங்காதரா வென்று தனஞ்செயன் நடந்தேன்
சத்திக்கிட பாகம் தந்த சதாசிவனார் பாதங்காண
சங்கரா கெங்காதரா வென்று தனஞ்செயன் நடந்தேன்
அத்தியை உரித்தணிந்த ஆண்டவனர் பாதங்கோரி
சங்கரா கெங்காதரா வென்று தனஞ்செயன் நடந்தேன்.

(வை தரு)

என்னுடைய நாமதேயம் யாருரைப்பேன் கேள்கேள் மாதவா
மன்னவன் பாண்டு மகா ராஜனீந்திடும் புத்திரன் (ஏ)
சத்தியம் நேரியும் தர்ம்ம நானும் நிலைவுவாமலே
வெற்றிச் செய்திடும் இருதலை வியாசர் மிஞ்மருக்கிப்போவன். (ஏ)
சந்திர குலமதில் வரும் தர்ம்ம ஸ்ரூபியாகவுமே
ஐந்துருக்களாய் வந்திடும் அய்வராஜாக்களி லொருவன் (ஏ)
அன்னொழி மைந்தன் தனஞ்செயன் அனுமக்கொடியுடையோன்
காண்டீப மாதவர் கொடுத்தான் கண்ணன் தோழன் சவ்யசாசி. (ஏ)
பர்க்குணன் புரவலன் மைந்தன் பார்த்தன் சுவேத வாகனன்
விர்க்கினன் விஜயன் கிரீடி வீரு அர்ச்சுனராஜன் (ஏ)
அர்ச்சுனராஜன் அவனி புகழ் கெம்பீரன்

(கவி)

விளம்பிய வேதநூல் விரிவாக கற்றுணர்ந்த
கலங்கமில்லாத நாத்தா காண்டீபன் வணங்கி நின்றேன்
வரம் பெறும் தபசிலையும் வார்த்தையின் படியே வந்தேன்
நலம் பெற உபதேசம் செய்து நல்வாக்கு தந்தருள்வீர்

(கரு)

ஒன்றுமனது ஒருமனது உறுதிகொண்டவன் சுருதியாக
சென்றவன் கயிலை ஈசன்பாதம் சிவமேற் கொண்டவன் அரகரை
நீண்ட வர்ணச் சடையாம் புலித்தோல் நிறைந்த நாகமாம்
பூண்ட மறைமுனிவன் சிவனால் புகழ்பவன் மேவினனே
மண்ணாசை மறந்து புவிதனில் மன்னவனும் துறந்து
பெண்ணாசை மறந்து தவச்செயல் யோகத் துணிந்தனனே.
பாண்டவருக்காக இந்திரன் பக்திக்கு ஈன்ற மைந்தன்
ஆண்டவனைத் தொழவே சிவனால் அர்ச்சுனன் மேவினனே.

(கரு)

தபஞ் செய்ய நடந்தானே அர்ச்சுனராஜன் (தபஞ்)
தபஞ் செய்ய நடந்தானே தவமுனியைப் போலவே
தவறில்லாத திவ்விய தபசிலையும் பூண்டு. (தப)
மெய்யெங்கும் விபூதி தரித்து வியாசர் சொன்ன மந்திரம்தனை ஜெபித்து
அய்யன் வினைபிறையும் துய்யன் மலர்ப்பாதம்
செய்யாமறை வேதம் என் செவியினில் போற்றிடவே (தப)

(கரு)

இருபெரும் நாட்டை விட்டு அருமை அன்னையை விட்டு
இந்தியான தாயையும் விட்டேன். ஓம் அரகரா அரகரா அரகரா சிவமே
கோத்திரவுள்ளப்படி மாற்றவர்களையும் விட்டு (இம்)
இம்பிட்டு வந்து நடக்கிறேன் · ஓம் அரகரா சிவமே
மதகரி என்னும் பீமன் மற்றோர்களையும் விட்டு
மண்ணாசை பெண்ணாசையும் விண்டவன் ஓம் அரகரா சிவமே (மண்)
நிலை மைத்துனனான செங்கண்மால் தனை நினைந்து
சிந்தையில் தவமுங் கொண்டவன் ஓம்
அரகரா அரகரா அரகரா சிவமே (சிந்)

(நாமவளி)

ஓம் அரகரா அரகரா மகதேவா ஆண்டருள் எந்தன் கவுரீசா
கரியுரித்தவனே மகதேவா காத்தருள் புரிவாய் கவுரீசா



(தேவாரம்)

மறை மொழிவழுத்தும் கோனே மாதொருபாகத் தோனே
கறை மிடற்றவனே காவா காவலனே கண் மூன்றுடையோனே
பிறையணி சடையோனே எம்பிரத்தனே பெருமானே நீ
இறைவனே ஈசனே நீ என்மனம் சோதிக்காதே.

(கரு)

தெய்வமே நானென்று செய்கு வேன் நறும்
தேனூர் மொழி உமையாள் கோனார் உலகமெல்லாம்
தானாய் நிறைந்த சிவமே உபதேசிக்கனே. (தெய்)
தர்மமே நித்தியமென்பது இது தப்போ இது உனக்கு மெய்போமோ
தெப்போ இப்புவி மீது - (தர்)
வஞ்சனை பொய்வாது வெல்லாது - இது வாதுகவுரவரை மோது அறுத்து
செய்வதேது இது தகாது (வஞ்)
மாசில்லா மணியே ஈசனே மெழில் மான் தனையரிந்த சுவன் உடம்பதி
ஆலகால நஞ்சையுண்டவா - ஆதி அமரர் தொழும் சோதி சுடரொளியாய்
பாதிமதியணிந்த கார்த்தருள் கயிலைவாசனே. (ஆல)

(தேவாரம்)

ஆதியாய் அருளுமாகி அண்டமும் தானாய் எங்கும்
சோதியாய் சுடருமாகி சுடர்மணி விளக்காய் தோன்றி
ஆதியாம் அம்பலத்தில் ஆடிய பாதம் தன்னை
தேடிய விஜயன் உன்னை திருவடி காண வாரேன்.

(கரு)

கண்ணே உனக்கு நமஸ்காரம் வெறு பெண்களோ பார்வாதே
காமத்தால் இந்திரன் கலியுற்றவன் காமத்தால் சந்திரன் கலக்கமுற்றவன்.

(தேவாரம்)

அத்தியை உரித்தணிந்த ஆண்டவன் பாதங் கொரி
சித்தத்தில் எண்ணங் கொண்டு சிவனையே மனதிலெண்ணி
பக்தியாய் பரமன் பாதம் பார்வனம் தன்னில் சென்று
உத்தமன் அர்ச்சுனன் உறுதியாய் நடக்கின்றானே.

(கவி)

காசிக்குப் போகும் போது கர்மமும் தொலைந்தென்று
பேசிய கதை போல் யாவும் பேதை நான் செய்த பாபம்
ஆசாரத்தைச் செய்து அடவியில் நடக்கும் போது
மாசுறு மாய்கை என்முன் வருவதேன் சிவ சிவா ஓம்.

(தரு) (42)

வேட்டை இல்லையம்மா தேட வேண்டாம் (வேட்)
வேட்டை இல்லை இல்லையும் எங்கிட்டும் வராதே
எப்படியோ அவன் சொற்படியோ
(சு) எதிர்ப்படி வாதைப்பட. நீது செய்வது நீதியல்லவே. (வேட்)

(தரு)

மாமுனிக்கு மோகமேது. மங்கையே செய்வது வாது
மேகமாகவே நிர்மலனைத் தேடி
ஆகம வழிப்படி அருவையே செல்லுவேன்.

(தரு)

அய்யய்யோ இதுவென்ன மோசம் நீ அடவியில் செய்வது நாசம்
செய்யாத காரியம் செய்யத்துணியு மென்றே
நெய்யுதே என்னுள்ளம் நாடி கயிலை போவேன்.

(தரு)

வந்து மடிப்பவன் யாரடி வீண் வார்த்தைகள் பேசுவதேது
இந்த வனமதில் நொந்து தவிக்கிறாய்
எந்த விதத்திலும் பேசினேன். சொல்லுவேன்.

(தரு)

வழிநடக்கிறேன் சம்போ வழிநடக்கிறேன்
வழிநடக்கிறேன் என் பதியை கதித்திட. (வழி)

(தரு)

யாரென்று கேட்பவன் யாரு இந்த அடவியில் வந்து மேகம் கூறு
பாவடா யாருமே பவமின்றி கேளியே
நேராக யாருமே நில்லாமல் போகிறேன்.

(தரு)

சந்தி தூவ்வைப்பதை பாலே ராக்கதனே சூரசூரன்மாண்டவனைப்போல
மெத்த பேசித்திப்பாரும் ராக்கதனே பெண்வார்த்தையை
மேன்மையாய் நினைக்கவேண்டாம் ராக்கதனே

(தரு)

பத்தினி சேதையாலே ராக்கதனே இராவணன் பனையோடு தானும் மாண்ட
சித்தினியாள் வார்த்தை பாலே ராக்கதனே ஜீவன் அழியப் போறாய் ராக்
(சு) சீக்கிரமாகவே கணையதை விடுத்தேன்
போக்கிரியையே மடியவே விடுத்தேன்.

(தரு)

(43)

சங்கரனே சங்கரனே சம்போ சதாசிவமே 
அம்பாளை காத்தவனே ஆதியந்தம் அரகரசிவமே
கங்கை தனை தரித்தவனே கிருபைதர வேண்டினேனே
மங்கைக்கிட பாகம் தந்தவனே மகாதேவா அரகரனே.

(கவி)

கயிலையான் மலையைத் தேடி காண்டிபன் பாணம் போக
அபயாத பிசின் தன்னை அன்புடன் தரித்துக் கொண்டு
மெய்ப்பயிலக் கொண்டு என்ன மங்கையும் வழிமறிக்க
அய்யோ நான் என்ன செய்வேன் அரகரா சிவனே போற்றி

(தரு)

கயிலை மலையை நாடி அம்மணியே கர்த்தனை காணப்போறேன் அம்மணியே
வழியினில் மறிக்க வேண்டாம் அம்மணியே உனக்கு வம்புகள் வந்து சேரும் அம்மணியே
மாயாசூரனிடம் (தரு)

சீண்டின ராக்கதப்பேயே என்னை கண்டு சேர வந்தாய் நாயே
அன்னையில் வரவேண்டாம் அதனை நான் கோரியே
அருவையே செல்லுவேன் பெருமையுடனாகவே.

(தரு)

[struck-through] விடுத்த பாணத்தை தடுத்துவிட்டவனே அடா ராக்கதனே
விமலா கர கரனே என்றேனே : ,, ,,

(தரு)

வில்வல் மலையை விலக விட்டவனே = அடா ராக்கதனே
விமலவன் அன்பாய் மனதில் எண்ணினேன் = ,, ,,

(தரு)

விவேதில்லை என்று பேசுறே = அடா ராக்கதனே
வெட்டி எறிந்தேன் பாவா உன்னை = ,, ,,

(தரு)

சண்முகனை பின் றைத்த சந்திர சடாதரனே
சத்திக்கிட பாகம் தந்த சம்போ சங்கரனே
விண்ணவர்கள் முனிவர் தொழும் விடையேறுமீசா
விளங்கும் வெள்ளிமலை தன்னில் வீற்றிருக்கும் நேசா
பாவை சூழ் உலகம் தன்னில் பரனே கண்பாராய்
பரிவுடனே எளியாளை பண்பாய் வாழ்த்திடாய்
அரவமதை தானணிந்த ஆதியே எம்பிரான்
ஆதரவாய் வந்து எந்தன் அல்லல் தனை தீராய்.

திரிபுரத்தை நகைத்தெரித்த தேவாதி தேவா
தேன்மொழியை இடத்தில் வைத்த திகழும் திரிசூலா
அன்னப் பூரணிக்கிசைந்த ஐம்முக விலாசா
ஐங்கரனை யீன்றெடுத்த அதிபரமேசா.

(ஜம்பை தரு)

அண்டத்தைப் போற்றிப் புகழும் ஆதி பரங்கடவுளே
இன்பமதாய் இருதயத்தில் எண்ணுவம் நான்புரிய
நின்னை நெஞ்சதனை யுணர்ந்த நினையது தவறாமல்
துன்பமத்தி தனை விடுத்து தோத்திரத்தை ஈசன் சங்கரனே.

(தேவாரம்)

அத்தனே அரனே போற்றி அம்பலவாணா போற்றி
சித்தனே போற்றி போற்றி சிற்றம்பலவா போற்றி
எத்தனை பிழை செய்தாலும் என்னையும் சோதிக்காதே
முத்தமிழ் வைத்தாய் என்னை உந்தன் திருவடி போற்றி போற்றி.

(வேலக்கண்ணி இடம் தரு)

பெண்ணே இது என்ன வாது நீயும் பேசுவதெல்லாம் தகாது
சென்னியில் கெங்கையை வைத்த ஈசன் தன்னை
சீரடி தொழுதிட ஓடோடிச் செல்கிறேன்.

(தரு)

நங்கைநீ பலவீனத்தோடே இப்போ நாடி தவம்செய்ய நாடி
செண்பக மணிந்த சிவனுடன் வேண்டினேன்
வஞ்சியே எந்தன் வழியை மறிக்காதே.

(கவி)

பெண்மணியாளே நீயும் பேதையே கீழ்வந்த உரை
வன்மையாய் உந்தன் பேரும் வஞ்சியே உரைப்பாய் இந்த
நன்மைசேர் கானகத்தில் நாடியே இங்கு வந்து
துன்புற பேசுவதேனோ தோகையே எட்ட நில்லும்.

(தேவாரம்)

சிந்தித்தேன் காய வாழ்க்கை சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி எங்கள் விடையவா போற்றி ஒப்பி
ஒருத்தனே போற்றி ~~[illegible]~~ உம்பர் தம்பிரானே போ
திருத்தனே போற்றி எங்கள் சிவனே போற்றி. திங்

(தரு)

K.P.[redacted]

(45)

தபஞ்செய்ய நடந்தானே அர்ச்சுனராஜன் சன்யாசி 41 ஆடை
சிவ சிவ சிவா என்று தேவா அழைத்து நின்று
தேவில்லாத திவ்ய தபசு வேடம் கொண்டு. (தரு)
மெய்யெங்கும் விபூதி தரித்து வேதவியாசர் சொன்ன
மந்திரம் உச்சரித்து
அய்யன் விளையாடலும் தூய்யன் கயிலைவாசம்
செய்யும் மறை முனிவன் சிவனடியைக் கொண்டு (தரு)
நீண்ட சடைமுடி இலங்க கையில்
நெடிய வில்லதுவும் துலங்க
இவர் நமக்கு வந்த இடர்களெல்லாம் தீர்க்க
ஈசன் கையில் இருக்கும் எழில் பாசுபதம் வாங்க. (தரு)

(விருத்தம்)

ஆதிமா மலர்க்கண் தூவி உமையவள் பங்கா மிக்க
சோதியே துலங்கும் பொன் சடைமணி பணியினனே
ஆதியே அமரர் கோவே அடி அண்டமெல்லாம் உடையோனே
நீதியாய் நின்னையல்லாம் நினைவு நினைவிலோனே.

(தரு)

வேழத்தினில் எழுந்த வள்ளியே கணபதியே சரணம்
இற்றிடும் என்னை காக்கும் இறைவனே
வேலவன் தனக்கு உதவி செய்தவா கணபதியே சரணம்
விரும்பும் கயிலை விளங்கிடும் கணேசனே
கோவில் சுற்றி குமரன் வருமுன்னே கணபதியே சரணம்
கொன்றை சூடிக் கனியைக் கொண்டவா
சாலவும் உன்னை பூஜை செய்கிறேன் கணபதியே சரணம்
சகல காரண மான விநாயகனே.
ஆதி மூல மான விநாயகனே கணபதியே சரணம்
ஐங்கரா உன்னை போற்றி செய்குவேன்.

(தேவாரம்)

ஓம் நமசிவாயா உதித்தெழும் கதிரை வாழ்வே
வானவர் முதலாய் போற்றும் மந்திரமாய் எங்கும்
ஞானதா உயிரும் சிவ சாட்சியாய் கண்டமோனா
யானையின் முகவனென்னும் ஆதியே போற்றி போற்றி.

(தரு)

தேவர் முனிவர் சித்தர் [illegible] தொழும் — சிவகாசிவாழும்
தேவனே வில்வ நாதலிங்கமே
வேதம் ஏழு ரூபமானவா சிவகாசிவாழும்
முதல்வனே உன்னை பூஜை செய்குவேன்.

(தேவாரம்)

வேதம் ஏழ் உருவமான மூர்த்தியே காசிநாதா
தேவர்கள் முனிவர்கள் போற்றும் தெய்வமே போற்றி போற்றி
ஆவலாய் இங்கு வந்தேன் அருமை கருணையாளா பாகா
பாவினன் என்ன செய்வேன் பரமனே வில்வநாதா.

(குரு)

ஆதி நடுவில் அமர்ந்த மூர்த்தியே ஸ்ரீ-ராமர் பூஜித்த
அய்யனே சிவ ராமலிங்கமே
தாழ்வில்லாமல் வரம் தருவாய் — சிவசம்போ சங்கரா
தனஞ்செயன் உன்னை கோரி வருகுவேன்
பாவம் தீர்த்து கதி கொடுத்தவா — சிவ ராமலிங்கமே
பார்த்திபன் தனக்கு உதவி செய்தவா.

(தேவாரம்)

பார்த்திபன் இன்பணியால் மலங்கள் பறக்கச் செய்யும்
மூர்த்தியாம் ராமேஸ்வர முதல்வனே போற்றி போற்றி
தீர்த்தியாய் அடியேன் மீது பூரண கிருபை வைத்து
சேர்த்திட உந்தன்பாதம் சிவ சிவா ராமலிங்கா.

(குரு) (ஆதி தாளம்)

பாரொடு விண்ணாய் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப் பெருந்துறை சிவனே
யாரொடு நோகேன் யார்க்கு எடுத்துரைக்கில்
ஆண்ட நீ அருளிலையானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றருள் புரியாயே.

(தேவாரம்)

இன்றுணைக் களிப்பாய் போற்றி இருவினை ஒழிப்பாய் போற்றி
பண்டடியார்க் கென்னையும் பகுத்திட செய்வாய் போற்றி



அண்டர் தம்பிரானே போற்றி அரியனுக் கெட்டாய் போற்றி 
தண்டொண மொழியாள் பாகா கைலைநாயகனே போற்றி.

(குரு)

வைகை யடக்க மண்சுமந்தவா தென்மதுரை தன்னில்
வாசமான சொக்கலிங்கமே
தெய்யல் மீனாக்ஷி தழுவும் பாதனே — மதுரை சொக்கலிங்கா
தமியேனுக் கருள் புரியவேண்டுமே
வேத மகரிஷி [illegible] ஆளுடைமையனே மதுரை சொக்கலிங்கா
பிஞ்சகா உன்னை பூஜை செய்குவேன்.

(தேவாரம்)

மங்கையர்க்கரசி என்னும் மாது மீனாக்ஷி பங்கா
கங்கையும் மதியும் சூடும் கர்த்தனே போற்றி போற்றி
அங்கமும் கிடைத்தபோது அய்யனை அழைக்கிறேனே
சங்கரா மதுரை வாழும் சாம்பவா சொக்கலிங்கா

(குரு)

யானை உரி போர்த்தமர்ந்த ஈசனே சிவபுரத்தில் வாழும்
அய்யனே லோக நாதனவா
மானைக் கரந்தனில் ஏந்தி மகிழ்ந்தவா சிவசம்போ சங்கரா
மாணிக்கவாசகர் போற்றும் பாதனே
திருந்த வேதம் புரிந்த நாதனே — சிவசம்போ சங்கரா
சிவகணங்களுக் கருள் புரிந்தவா
அருமையாய் உன்னை பூஜை செய்குவேன் — சிவசம்போ சங்கரா
அடியேனுக் கருள் புரியவேண்டுமே.

(தேவாரம்)

யோகநாயகனே போற்றி எவர்க்கும் மகிமா போற்றி
போகநாயகியாள் பாகத் தூற்ற நற்றவனே போற்றி
நாகபூஷணனே போற்றி நான்மறை பொருளே போற்றி
யுகமா மதியாய் போற்றி உயர்வரம் தருவாய் போற்றி.

(குரு)

தம்பி தனக்கு காசி கொடுத்தவா — சிவந்தி பூஜித்த
தீர்த்தக் கரை அமர்ந்த ஜம்புலிங்கமே
நம்பி வந்துன்னை பூஜை செய்குவேன் — அகிலாண்டேஸ்வரா
நாதனைக் கண் பாருமையனே.

([illegible]) (48)



சிவந்தி மணிக்கு சேவை தந்தவா — சிவசம்போ சங்கரா
சிற்பரா உன்னை பூஜை செய்குவேன்
அகிலாண்டேஸ்வரி பாகத்தமர்ந்தவா — அரகர சிவனே
ஆதரித்தென்னை யாளுமைய்யனே.

(தேவாரம்)

சங்கரா போற்றி போற்றி சச்சிதானந்தா போற்றி
மங்களாம்பிகையாள் பாகத் தமர்ந்தெமக்கருள்வாய் போற்றி
துங்க நான் மறைக்கு மெய்யா சோதியே ஐம்புலிங்கா
செங்கரம் குவித்தேனுக்குன் சேவடி தந்தாள்வாய் போற்றி.

(தரு)

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேனே
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ.

(தேவாரம்)

பத்தனாய் பாடமாட்டேன் பரமனே பரமயோகி
எத்தனைப் பத்தி செய்தே என்னை நீ இகழவேண்டாம்
முத்தனே முதல்வா தில்லை அம்பலத்தாடுகின்ற
அத்தா உன் ஆடல் காண்ப அடியேன் நான் வந்தவாறே.

(தரு)

உளமுருகியிலே உட்கார்ந்து உன்பாதத்தை
உறுதியாய் தவம் செய்தேன் சங்கரனே
மாலை பார்த்த தேவ ஈசா கயிலை வாசா
மகாதேவா ஐந்தெழுத்தை ஓதினேனே
பரமசிவனே உந்தன் பாதங் காணவே வந்தேன்
புத்திரன் தன்னைக் காக்கும் சங்கரனே
பங்காளி துரியனை பார்த்திபன் வெல்வதற்கு
பாசுபதம் தருவாய் சங்கரனே.

(தேவாரம்)

போற்றியோ நமசிவாயா = புயங்கனே மயங்குகின்றேன்
〃 〃 〃 = புகலிடம் பிறிதொன்றில்லை
〃 〃 〃 = புரமனைப் போக்கல் கண்டாய்.
〃 〃 〃 = ஜெய ஜெயா போற்றி போற்றி.



## வில்வம் அர்ச்சிக்கும் அகவல் (49)

சிவசிவா சம்போ — திரியம்பகா போற்றி
பவமறுந்தாண்ட — பரமனே போற்றி
மரகத வடிவாய் — விளிந்தை போர்பாகா
அரவாபரண — ஐந்துண் பொருளே
திங்களும் கங்கையும் — சிவந்த வேணியனே
எங்கனும் தானாய் — இருந்திடும் பொருளே
பஞ்சாட்சர வத்தன் — பதிலிப்பவனே
கஞ்சன் சிரசை — கபாலமாய் கொண்டாய்
நஞ்சை யுண்டு — நாகவில் கொண்டு
தஞ்சமென்றடியார் — தமக்கருள் புரிந்து
முப்புர மெரித்த — முக்கண்ணா போற்றி
சிற்பரா அனங்கன் — தன்னை எரித்தாய்
மெய்யென் றிருந்த — மீனவன் தனக்காய்
வைகையடைக்க — மண்ணை சுமந்தாய்
அடியவர் தமக்காய் — அடியது பட்டு
வடிவது காட்டி — வாழும் வித்தகனே
கருங்குழி தாழும் — காயம் எடாமலே
திருக்கண் பூரா — திருவருள் புரிவாய்.

(சுபம்) (சுபம்) (சுபம்)

## 13.ஆம் நாள் சன்னை நாடகம் : அர்ச்சுனன்

(கவி)

மல்தனை குடைபிடித்த மாயவன் பாதங்கோடி
நிலைபெற துதிக்கும் தீரன் நிதமிகு பணிகள் பூண்டு
கொலைபுயல் போர்களத்தில் கொடுஞ்சமர் புரியவேண்டி
சிலைமணி கலகலென்ன தேர் விஜயனும் வருகின்றானே.

(தரு)

வீரக்காண்டீபத் தீரன் வந்தேன் குருக்ஷேத்திரம் நாடி
வேணு கோபாலனருள் கொண்டேன்
பாரதம் முடிக்கும் சூரன் பாகசாதனன் குமாரன்
ஆரணிக் கடவுள் பாதம் அனுதினம் துதிக்கும்மாரன்
(சு) அஷ்ட திக்கிலும் வெற்றிகள் பெற்றவன்
மட்டறவே தனுர் வித்தையைக் கற்றவன். (வீர)

(தரு)

(50) ஜோன்புரி

அமராபதிக்காக பூண்டவன்
அவுணர் தனை வதைத்து அன்பவன்
சமரால் பாட்டன் பீஷ்மன் தன்னையே களத்தில் சாய்த்தேன்
எமரால் துரியன் சேனை போரில் உயிர் மாய்த்தேன்
(சு) எரிபணி சோலிகள் விருதுகள் மின்னை
வரிசிலை மணிகள் கலகல வென்ன. (வீரக்)

(ஜுகரு)

பதினெண்டாம் நாள் போரில் நானே பகதத்தன் தன்னை
தன்னை தலையைத் துணித்தேனே களத்தில்
மன்னர் அனைவர் கூடி என்னை எதிர்ப்பாராலே
(சு) பீடிலவர பல வீரியனென்ன இன்னிலில் அவரைக்
பாடிய இராஜ கோபால் துதிப்பனை. (வீர)

(கவி)

செந்திரு வண்ணன் தன்னை துரியனும் சேனைக் கூட்டி
இந்த நாள் சகரவூகம் அணிவகுத்தில் பீடிலவா வகுத்த தாலே
அந்த தேர் அணி வகுத்தில் அமரரும் விதங்கள் தன்னை
எந்தனுக் கரிய கன்றே இன்பமாய் உரை செய்வீரே.

(கரு)

கொண்டல் மேனி வண்ணா வாரும் இந்தக்
கட்டம் தனைக் கண்ணால் பாரும்
வண்டு திணமாக வாய்மதம் பேசுறேன்
துண்டன் கின்றதென்று சொல்லுவீர் எனக்குமே. எந்தனுக்கு (விகா)

(கரு)

வினமெத்த மீறுதே தேவனே இவர்கள்
தீய வார்த்தை சொல்ல பாவனே
அனல் பட்ட மெழுகு போல் மெய் ஆகம் உருகுதே
இனி சிலை வளைத்துடன் கொன்று வருகிறேன். (வினை)

(கரு)

நலமிது வாகுமோ நாரணா என்னை
இப்படி சொல்ல காரணா
பலமெத்த இன்று பாதகர் தங்களை
கெலவித்து தலை துணித்து வருவேன். (நல)

கந:டம்(~~[illegible]~~)

(51)

அச்சுதானந்தா முகுந்தா அதிரதன் என்று எண்ணி 
அச்சக மெல்லாமெச்ச திடமாக எதிர் நின்று
கொச்சையதாகப் பேசும் கூட்டத்தார் பரந்தோட
கைசிலை தனை வளைத்து

(கரு)

காவலகம் தன்னையே காட்டுவேன் அந்த பாதகர் மடிய
சாமார்த்தியாகவே பூட்டுவேன்
உலகமீது ஐயனே முரகர் மதுசூதனே
பலம் பொருது வருவீர் ரதமேறி நடத்துவேன்.

(கரு)

தேவகிபாலா திருமகள் லோலா நீ செய்வது சரியாமோ
காவலில் பாலன் மாபலி போடு
கார்க்கத் திரணியுடன் அரியே
(சு) கர்த்தனே மைந்தனே யுத்தமும் முனையின்றி உலகினில்
வைத்திட எந்தனின் சித்தமும் வாடுதே. (தேவ)

(கரு)

வீரியனென்று கூறுவீர் நன்று
வீர் இரு தோரணர் முன்னே நிற்பாரோ
ஆரியர் தந்திரம் அதுபெரும் மந்திரம்
அறிந்து சமர் புரிந்து ஜெயிப்பானோ
(சு) அற்புதனே அரி தர்ப்பராபரனே
சொற்பமாகவே நீர் சொல்லுவீர் தானே. (வீரி)

(கந:டம்)

தினகரன் வடிவுள்ள தேவனே எனது பாலன்
கனமுடன் வில்லில் கத்திச்சி கண்டிட தவறுமாச்சே
தவர் வேத மந்திர ஆரணர் தன்னையே எதிர்ப்பாளனோ தான்
என தகம் வாடுதைய்யோ.

(கரு)

இது அரியாயோ மாயனே எந்தன் மதியினில்
இஷ்டமில்லையோ ஐயனே
புதுமையுடனொருங்கி புகல வந்தீரோ தேவா
ஆவிசுபத்திரையாள் ஆவிப்பதறுவாளே.

(கரு)

பெண்ணே இதுவென்ன நாயம் - எந்தன்
பிள்ளையைக் கொல்வதோ உபாயம்
என்னைத் துரியன் சேனை இதுவாகவே
கன்னியே அவர்கள் தன்னை கண்டித்து வருகிறேன். (பெண்)

(தரு)

சிந்தையும் வாடித் தயங்காதே எந்தன்
தேவியே நீமனம் மயங்காதே
உந்தன் மீதினில் ஒரு குற்றம் இல்லையே
எந்தன் தலைவன் பக்கம் இருந்திட மெல்லவே.

(தரு)

தங்கமே எனதுபாலா பங்கய கண்ணனுடனே
வெங்கல ரதக்காரரை வென்று வருவேன்
(சு) விண்மணி யென்னரு கண்மணி நீயே
அன்னையுக் கருகினில் அமருவாய் சேயே.

(தரு)

ஏதுசொல்வேன் தலைவன் தன்னை வேதகிலே துரோணாச்சாரி
ரதகொடி கம்பத்தில் கட்டி வாசலென்றுமே
(சு) இறையவனும் துரியனுமே அறிவிய மொழிப்படி
அர்த்தமாகவே வருகிறானென்றுமே.

(கவி)

மாவில்லா எனதுபாலா மற்புய வலியினோடு
பேசிய வார்த்தைக் கேட்டு பேர் இதயமும் நான் களித்தேன்
காவில்லா தந்தை பக்கல் காத்துநீ இருந்தாயானால்
தாதிபோல் துரியன் சேனை துரத்தியே வருவேனே.

(தரு)

திருவணியும் மார்பனே உன் சேவடி பணிந்தேனே
தேரை நடப்போமே துரியன் சேனை
வீரிட துணிப்போமே

(தரு)

மணிமேக வரிசை கனிவென முழங்கிட
வாரிப் போரிடுவோமே சஞ்சயர் போரில்
கூர்பாணம் விடுவோமே.

(தரு)



சங்காழி கையனே சஞ்சய சேனையை மடித்தோமே
பங்கய கண்ணனே பாசறை தேடியே நடப்போமே.

(தரு)

அவனே நாமுமே திரும்பி வரும்போது மாயவனே.
செத்துப் பிணவாடை வெத்தலை வீசுதே மைத்துனரே.

(கவி)

நந்தா கோபாலா நீயும் நானுமே ரதந்திருப்பி
வந்தோம் நாம் பாசறை தேடி வழக்கத்திலே இரைச்சல் போலவே
எந்நாள் இல்லாதிருந்தும் இரைச்சல் செவிடாய் கேட்குதாலே
அந்த ஓசை விபரம் தன்னை அன்புடன் உரைசெய்வாயே.

(கவி)

அருயிர் அனபாலா அய்யய்யோ அபிமன் தன்னை
ஒருயிர் தனை பிழக்க பாதையன் யுதவத்தில்
ஈர் உயிர் இருந்து மென்ன இந்த உலகத்தை ஆள்வோமோ
சோருதே யென் அபிமன்மேல் சோர்ந்தியே விழுந்திட்டனே.

(தரு)

சூரியன் உதிக்கும் முன்னே என் மகனே பாலா யென்மகனே
சோர் அலங்காரம் செய்வாய் போடா என் மகனே
போர் செய்து திரும்பும் போது என்மகனே பாலா என்மகனே
தேரில் வந்திடைப்பாயோடா என்மகனே
மாரன் வடிவை யொத்த என்மகனே பாலா யென்மகனே
வானப் பதிக்கு சென்றாய் போடா என்மகனே

(கந்.ம்)

எத்தனை விதத்திலும் என்மனம் தேற்றினாலும்
மைத்துனர் பெருந்துக்கு என்மனத்துயர் மாறிடாது
இத்தத் தம்பிமாரே எரியதை மூட்டி நீங்கள்
சித்தமும் அணிந்து யானும் யோசித்ததுபோ

தீயினில் இறங்குவேனே உலகவின்ப
மாய்கையை மறந்தேனே.
சேயன் அபிமன்னன் மாள பேயன் இருந்துமென்ன
மாயா முகுந்தனே உன் பாதமே எனக்கித்துணை.

(சுபம்) (சுபம்) (சுபம்)

13-ஆம் நாள் சண்டை நாடகம்



அபிமன்னன் (கவி)

சொல்லரிய அதிவீர வீரதீரன்
சோதிமா மதிகுலத்தில் தோன்றுமாவன்
தொல்லுமறை புகழும் மாயன்தங்கை
சுபத்திரையாள் ஈன்றெடுத்த வதன தீரன்
அல்லும்பகல் அரியணை சேனை எல்லாம்
அந்தகன்பால் அனுப்பிடவே விருதுகூறி
வில்லம்பு கையுடனே காத்தில் தாங்கி
வீரவான் அபிமன்னன் வருகின்றானே.

(தரு)

வெண்ணிலா குலத்தில் வந்த வில்விஜயன் அளித்தபாலன்
வண்ணவில் கரத்திலேந்தியே அபிமன்னராஜன்
காளையைப்போல் வந்துமேவினான்.
பொன்னொளி பணிந்திலக்க மன்னர்கள் கரங்குவிக்க
~~[illegible]~~ எண்திசையும் புகழ்ந்து போற்ற அபிமன்னராஜன்
யானையின் வந்துமேவினான்.
நாவலெல்லாம் தன்புகழும் பாலன் இராஜகோபாலன் மருகன்
நவமதில் வந்து போற்றவே அபிமன்னராஜன்
காளையைப் போல் வந்து மேவினான்.
தந்தையாம் அர்ச்சுனராஜன் சமருக்கேக விருப்படிக்கு
விந்தையாய் ரதத்தை ஓட்டியே அபிமன்னராஜன்
வேடிக்கையாய் வந்து மேவினான்.

இறைதாள (கவி)

எத்திக்கும் வெற்றிக்கொண்ட எந்தையே உன்பாதம் போற்றி
உத்தசன்னித்தனகே உனைத்தினம் ரதத்தைப்பூட்டி
பத்தியாய் பணிவைக்கப்படி பயணமாய் போரசெதி
இத்தரை எந்தனுக்கு இயம்புவீர் இன்னதென்று.

(தரு)

அன்னவே அமருக்கேக புண்ணியவான் கருமருக்கு
அடுத்து ஏகுமோதான் தந்தையரே
(கூ) அதுவித காரணம் அறியேனே ஐயா
எதுவித காரணம் தெரியனே மெய்யா.

(தரு)

(55) 

வருகுமந்த துரோணச்சாரி மறைநூல் விதிப்படிக்கு
புரோகிதம் படிப்பானென்று தெரியீரோ
(கூ) போரினிலே ஜெய வீரர்கள் தம்மோடு
பரியேதோத்திட தீரங்களைது.

(தரு)

என்னருமை அன்னையரே போற்றினேனம்மா உன்
இணையடி தனக்கு மலர் சாற்றினேனம்மா
மன்னன் தருமராஜருக்கு காவல் காக்கவே
மாதாவே நான் சென்று வருவேன் வாழ்த்துவையம்மா.

(தரு)

கொருமறை துரோணர் வகுத்த வெறுசேனை (சூழ்ச்சி) வகுத்தபோதும்
கூட்டம் கூட்டமாய் நான் வெட்டி வாட்டுவேன்
கேடுசெய்வதேதுமே கூடுசெய்குவேன்
மைத்திரமம் வாடவேண்டாம் உத்தரம் தாருமே.

(தரு)

கொல்லவே கூடி வந்தாலும்
வெல்லுவேன் எந்தன் பலத்தாலும்
வல்லவியன் தாயே சொல்லியே தீருமே
நல்லவிதமாக நலமுடன் அனுப்புவாய்.

(கங்-மீ)

கடலைவளைத்து பெரும் மடிமேல் கிடந்த
கற்புடைய தாயின் பதமே
திடமேமிகுந்த புயவலிகொண்ட தீண்டோனன்
தேர்விஜயன் பதமும் நிதமே
வட வாயில் துதில் கொண்ட மணிவண்ணன் பாதமதை
மறவாமல் துதிகள் செய்து
திடமேவிவந்த ஜெயித்தரசன் சேனையை

(தரு)

சிக்கை சக்கையாய் வெட்டுவேன் எனது தாயே
மிக்கவே பறக்க ஓட்டுவேன்
(கூ) தாண்டியே துரோணரும் தாண்டியே வந்தால்
ஆண்டவனருளால் மீண்டும்நான் வருவேன்.

(தரு)

(56)

அன்னையாள் விளையாடிக்க    பின்னவன் எழுந்திருந்து
மண்ணையும் நான் ஆடி வருவேன் - அபிமன்னனுமே. (மன்)

(கந்தம்)

பொன்னொளிர் மேனி    புகழ்ந்திடும் சுபேபி
மன்னன் விராடன்    மகிழ்ந்திடும் அதனி
எங்கும் புகழ்ந்திடும்    எழில் பெரும் சுபேபி
என்னருமை கண்ணே

(தரு)

சந்திரையாளே எப்போதும் மண்மேல் வாழ்ந்திடும் மேலே
சாந்த குணமுடைய    தையல் மனோகரியே
மாந்துளிர் வதனியே    மங்கையே வாழ்ந்திடு.

(கவி)

செல்லுவேன் கோபமாக தலைவனும் தருமன் தன்னை
கொல்லுவேன் என்று வீரம் கூறியே போயிருக்க
புல்லறிவாளன் விட்ட    சேனைகள் போர்க்கடைக்க
செல்லுவார் தந்தைமார்கள்    தேவியே காத்து வாழ்வேன்.

(தரு)

எப்படியோ இவரை வென்று    கற்பினை படிக்க வந்தாய்
வில் பிடித்தவனை வாட்டுவேன்    என் மானே தேனே. (வில்)

(தரு)

கார்மேகம் சுற்றி வந்தால்    போர் விஜயன் மைந்தனோடு
பார்ப்பனன் எதிர்க்கப் போமோ என் மானே தேனே.    (பார்)

(தரு)

பலசாலி என்று நீயும்    இவ்வமர் பேச வந்தாய்
கலமாரும் ராஜேக்கண்டி. என் மானே தேனே.    (கல)

(தரு)

தெற்பிணியே துரோணருக்கு விற்பிடிக்கத் தெரியாதே
அற்பமாக பேசவேண்டாமே. என் மானே தேனே.    (அற்)

(தரு)

செம்பவாய் கூடி விருந்தாலே
கொல்லு அவன் சக்தன் பலத்தாலே
அம்புலி போர் போற்றும் அபிமன்னு ராஜனும் நான்
வம்புகள் பேசாதே    வல்லவி ஓடிப்போ.

(தரு)

(57)



சொற்பனத்தால் என்ன சோக்கமோ
தவியே உன்மனம் ஏக்கமோ
பற்பல வீரர்கள் படை கூட்டி வந்தாலும்
மற்புய வலியினால் மாட்டியே வாட்டுவேன்.

(தரு)

செல்வம் கூடி விருந்தாலும்
கொல்லுவேன் சக்தன் பலத்தாலும்
புல்லாக எண்ணி புகலவந்தாயோ
சொல்லாதே பெண்பிள்ளை கல்லாதே ஓடிப்போ.

(கந்தம்)

பாம்பாக கண்ட சொப்பனத்தால்
போர் வீரன் எனக்குபயம் வந்திடாது
வையகமே போற்றுகின்ற பரமநாதன்
பரந்தாமன் அருளிருக்க ஜெயம் தப்பாது
துய்யவனை இன்றவுமே கொண்டமாது
சக்கரியிலே செழித்த சனன் விரைந்திட்டாலும்
தையலாளே தன்பாட்டு பாக்க வாட்டிடு

(தரு)

சங்கத் தொனி முழங்கிடுவேன்    ஜெய ஜெய வென்று
சிங்கத் துவஜம் காட்டுவேன்
பொங்கிடும் எனது கொடி    தங்கியே வாழ்ந்திடவே
மங்கையரை செய்து வருவேன் அங்கமும் துடிதுடிக்க.

(கந்தம்)

அப்படியே அன்னரின் பகையைப் போல
அம்மானும் அமர்களத்தில் சூழ்ச்சியாக
தப்பிதங்கள் மிக விளைத்து கொன்றபோதும்
தந்தை மொழி தனை மறந்து தீர்க்கொண்டு
தப்புடைய மாதரசே    புவியின் மீது
சுகமுடனே வாழ்ந்தாலும் விதிப்படிக்கு
எப்படியும் போர் தனத்தில் மரணமின்றே

(தரு)

இருதயம் வாடாதே கண்மணி    போய் வருவேன். (இரு)
இருதயம் வாடாதே கண்ணே    செருகளத்தில் தூரியன் சேய்

ஒருமிக்க வந்த போதும் இருதுணி செய்திடுவேன்
(சு) ஓதும் மொழியதை நீயும் கொண்டுமே நிலைத்தேரோ
வாதுகள் செய்யாதே வஞ்சியே கேளடி.

(தரு)

வெற்றி வீரனென்று மெத்த வருத்தி நானே
சற்றும் அறியாமல் புத்தி சொல்ல வந்தாய் மானே.

(தரு)

வாட்டங்களோ கூட்டத்தை நானே
வதைக்கவே வீரமுண்டு அஞ்சாதே
கேட்டிடுமை துரோணர் இட்டமே பிடிக்க
தீட்டுவேன் பாணத்தாலே மிஞ்சாதே.

(கவி)

மறை வல துரோணச்சீர் மாணாக்கன் உனக்கு யேது
இறையவன் திருமன் தன்னை எதமதில் பிடிப்பேனென்று
உரை செய்தாய் இதற்கு ஏந்தி உன்னாலே முடியவில்லை
இறையது வருமுன்னே இப்படி ஓடுவாயே.

(தரு)

எச்சித் தொண்ணையில் வந்த பீடிலா பிரம்மனை
என்னோடு சரியாக எதிர்த்திட கூரனை
பிச்சைக்கும் இச்சைக்கும் பேசும் நீ தீரனை
பிடித்திட எந்தனை மடித்திட கூவனை
(சு) நில்லாதே நில்லாதே என் முன் சொல்லாதே சொல்லாதே.

(தரு)

கொடியப் பாவித்தூரியன் கூட்டத்தில் கலந்தாயே
குருதக்ஷிணை தந்த உண்மையை மறந்தாயே
மடியக் களவிடம் வாய்விட்டு நொந்தாயே
மானத்தை உயிர்ப்பிச்சை கொடுத்ததை மறந்தாயே.

(தரு)

போடா வக்கணை உந்தனை வாட்டியே பொடிபட ஆக்கிடுவேன்
போடா எண்களை விட்டு நீயும் போதனை தூரியனுக்கு இந்த தீர் சொல்ல வந்தாய்
(சு) பொங்க முடன் எங்களிட பங்கதனைக் கொடுக்கவே
விங்குணம் பேசினால் அங்கமதை துணிப்பேன்.

(தரு)



சிந்து பூபதி மைந்தனே என்னெதிர் நில்லடா
ஜெயிக்கவே வந்தாயோ பயமது அற்றவே சொல்லடா
அந்தகன் மைந்தனுக்காகவே நின்றாயோ சொல்லடா
ஆண்மையே எந்தனை வென்றிட வாருமோ சொல்லடா
(சு) ஆகாதே வெல்லப் போகாதே வேகாதே வினைச்சாகாதே.

(கர்-ம்)

இருதோளில் ஒருதோள் போக இடிக்கர் முதலியோடு
பெருமித வலியினாலே பேசும் யுத்தம் செய்து
பெருமித யானைப்போலே பார்ப்பனப் பயலே ~~[illegible]~~ நீதான்
உன்னை ஒரு தோளைக் கொய்து.

(தரு)

ஏங்கி ஏங்கியே அடித்தேன் உன்னை
நீங்கிப் போகவே அடித்தேன்
பாங்காக இல்லாத பார்ப்பனப் பயலே
போங்காலம் ~~இன்றே~~ நேர்ந்ததோ போருக்கு வந்தாயோ.

(கவி)

மருதமென் பொடித்த மாயா மாமாலே எனக்கு இன்னல்
அருளிய மந்திரத்தால் அனைத்தேன் சக்கரத்தால்
உருவது ஜெயித்தயானும் ஒருவனாய் சமர்புரிந்து
செருமுகம் தனில் இறந்தேன் செய்வகை அறிவேனே.

(தரு)

அரிகமோ நாராயணா அமரர் தொழும் பூரணா
அங்கமும் பதறலானேன் தெய்வமே
தூரியன் மொழிபோல் வந்த குருவான துரோணரும்
தூசிபோல் பறக்கடித்தேன் நாராயணா
வென்றிட ஜெயித்ரதன் நின்றமர் புரிந்து என்னை
கொன்ற மாலியால் வீழ்த்தான் நாராயணா
குன்றுபோல் என்னை வளைக்க நின்றேன் நான் மாகுதன்னில்
கொடுஞ்சமர் புரிந்தேனையோ நாராயணா
கர்ப்புடைய என் தேவி கண்ட சொற்பனந்தன்னில்
அற்பமாக எண்ணி வந்தேன் நாராயணா
அரசன் தூரியன் பாவி தன் யாக இத்திரை கட்டி
சராசந்தன் மகனை கொன்றேன் நாராயணா
காருடனே அவன் பாரி கற்புடையாள் தந்த சாபம்
கனமதில் [illegible]

## 17. ஆம் நாள் சண்டை நாடகம்

### அர்ச்சுனன்

(60)

(கவி)

குந்தியின் வயிற்றில் வருதோன் குறைவிலா உதித்த பாலன்
அந்தமாய் பணிகள் பூண்டு அழகுடன் தனுவைப் பூட்டி
பந்தமாய் வில்லும் பாணம் பாங்குடன் கையில் ஏந்தி
விந்தையாய் விஜயன் தானும் விரைவுடன் வருகின்றானே.

(தரு)

அமரர்க்கு நிகரொற்ற சரியற்ற பலம் பெற்ற
அர்ச்சுன ராஜன் வந்தேன் போர்க்களம் நாடி (அர்)
செகத்தில் இணையில்லா ஜெக சக்ரமது பெற்ற
(சு) சப்த வீணைகள் மெத்த முழங்கிட
துத்தி நாத சாலங்களுடன். (அம)

(தரு)

உலகத்தில் இணையில்லாத ஜெகசக்ரமது பெற்ற
பேரிகள் மிக ஜொலிக்கவே உல்லாசமாக. (பேரி)
வரையொற்ற புகழ் பெற்ற நிறையொற்ற கணையிட்ட
(சு) வச்சிரக் கொடி பச்சைக் கொம்பினைல்
மெச்சும் பூஷணம் அச்சமில்லாமலே. (அம)

(கவி)

என்னிடம் அருகிருக்கும் எழில் பெரும் மந்திரிகளாய்
வடிவுள்ள சூரியன் சேய் வந்ததோ பாருமிப்போ
எனக்குச் சத்ருவாக இருந்திடும் கர்ணன் தன்னை
மைத்துனர் தனையழைத்து மன்னரும் சமர் செய்வேனே.

(தரு)

மைத்துன சகுனம் அரிகோவிந்தா மாயவா இந்த தினம்
அத்திவைக் காத்தவா அர்ச்சுனன் போற்றினேன்
இத்தனை நாள் போல என்னை இன்றைக்கும் காத்திடும்

(தரு)

திருமால் அரி கிருஷ்ணர் தேவர் ரதம் நடத்த
அதன் மேல் விஜயராஜன் அன்பாய் புகழ் படைத்தேன்
தேவர்க்கு தேவனும் மாயவர் ரதம் நடத்த
தேர் மீதில் வீற்றிருந்தானே விஜய பூபன் (ரத)
அனுமன் துவஜம் ஆடல் பாடல் ஜொலிக்க
அன்வம் இரு நான்கும் மேகம் போல் கர்ச்சிக்கவே.

---



(கவி) (ம)

அநிருத்தா நந்தன ... ஜோலமர்

...கள் பெருந்தன் பாவம் அச்சமே இந்தக் கனம்
...வுள செயலோ ஐயோ நான் முன் செய்த பாவந்தானோ
...மென் தனையன் மீதில் சாமிட்டி கொல்லச் சொன்னாய்
...மது சோதனையோ கர்த்தனே என்ன செய்வேன்.

(தரு)

என்ன மாயமோ சுவாமி ஏது மாயமோ
மன்னர் தர்ம[illegible] மேல் கண[illegible]டும் என்கிறீர்
(சு) மாதவா அரி ஏது செய்குவேன்
வாதையாகவே என்னை நீது செய்கிறீர்.

(தரு)

இப்படி இதுவோ அயன் கற்பனை ஏதுவோ
இப்பிறப்பினில் வந்து [illegible] எனக்கு நேர்ந்ததோ [illegible]
(சு) இந்த வேளையில் கந்தா முகுந்தனே
வந்து பெருந்தன் தொந்தரவு செய்கிறீர்.

(கவி)

நாரணனே நற்புகழ் பெற்றவனே ~~[illegible]~~ கேசவா
நாகஜெய மேந்திரனே அரியவன் [illegible]
மாதப்போர் முடிக்க வந்த பச்சை நாங்கள் பாதி தாண்டிக்கிட்டே
காரணம் போல் கனி கூர்ந்து இதுகாள் [illegible] வேங்கதன்னை
கர்த்தனே உனக்குப் பகை என்ன செய்ததோ தரணியில்
~~[illegible]~~ [illegible]
[illegible]
[illegible]

(தரு)

அன்னை சகுனம் [illegible] போதா சகுனம்
சிதைவும் நானும் ஜெகஜீவ போனோம்
காதலாய் கர்ணனை கண்ணால் மிகவே கண்டேன்.

(தரு)

[illegible]யை வென்றீர் வளர்ந்து கொன்றீர்
[illegible] நின்று உற்றுமே பார்த்தேன்
[illegible] என்னவே நின்றேன் மயங்கியுற்று.

(கவி)

இப்படி எனக்கு வாக்கு இந்த் சணம் அளித்தீரானால்
ஜெயம் பெற சுவாமி நானும் கூடவே போக அந்த

[illegible]

தப்பில்லா கர்ணன் தன்னை சாத்திலே அவனை மாட்டி
வில்பிடித்தவனைக் கொன்று வெற்றி காண் பெற்றுமையென்.

(கர்.ம்)

அதம்பிலே எடுத்தான் கண்கள் அனல்தாய் பொறி பறக்க
நிதமில்லா கோபம் கொண்டு வில்லையும் கைப்பிடித்து
பதர் உன் நாவினாலே பழுதென்னை சொல்ல வந்தாய்
இதோ பாரும் கொல்வேன் என்று

(தரு)

இருத்துமே வளைத்தான் சரத்தன்னை தொடுக்கவே விடுத்தான்
எந்தன் வில்லதை பொடிதும் செய்தாய் நீ
உன்னைக் கொன்றுமே கர்ணனே உபகாரம் செய்குவேன்
(சு) அண்ட பெண்டபகி பெண்டம் நடுங்கிட
ஆட்டினான் கனை தூட்டினான் கொல்ல.

(கவி)

அரிகள் இருந்தோ போற்றி அடியேனை பொறுத்தோன் போற்றி
அண்டர்களும் மாமுனிவர் அமரர் தேவர்
அதிக பலமில்லா எல்லோருமே
எண்டிசையும் பேருடைய காண்டீபத்தை
இயலாக பொன் தங்கள் செய்தவரை
கண்டப்பிரதனை வெடுத்து உயிரை வாங்க
சுபதமது கொடினேன் கிருஷ்ண தேவா.

(தரு)

தாக்கி வில்லைப் பிடித்தேன். பாணத்தாலே நோக்கித் தொடுத்தேன்
விக்கிப் போகவும் அடித்தேன். சாரதிபதி துக்கி போகவும் தெறித்தேன்.
(சு) அந்தக் கர்ணனின் தலை கொக்கரிக்கும்படியாக
பக்கிலே மாகவே பாணங்கள் ஏவினான்.

(தரு)

எதோ பாகவனை மீறி - பொலிந்தும் பேசவொரு ஆணந்தம் கொண்டாய்
போகமானவரையும் நீயும். பின் தத்துக்கு ஆசை வைத்து சண்டைக்கு வந்தாய்
கூதாக துரியனிடம் சேர்ந்து சாய்குவென்று வந்தாயோ.

(தரு)

இதுதான் சமயமென்று அர்ச்சுனன் பெரிய பாணமதை தானெடுத்து
மாதவன் உரைத்தபடி அர்ச்சுனன் மாட்டியே கர்ணன் தன்னை தாக்கிவிட்டு

(சுபம்) (சுபம்) (சுபம்.)

ராஜசூய யாகம் -

## ராஜசூய யாகம் : நாடகம்

### சிசுபாலன்.



(கவி)

அனந்திகழ் தர்மபுத்திரன் யாகமே செய்ய வென்று
பரந்திடும் நாகர் வந்து பகர்ந்திடும் மொழியைக் கேட்டு
அனைந்திடும் பேர்பால அளவிலா படை நடுங்க
சிறந்திடும் சேதி தேச சிசுபாலன் வருகின்றானே.

(தரு)

அந்த இன்ன யானை பவுதி அணி அணியாய் சேனை சூழ
கந்த மிகு மாலை சூடவே சிசுபால ராஜன்
கதிரவன் போல் வந்து மேவினான்.

(தரு)

சித்திரக் குடை பிடிக்க சேது தேசம் தன்னை விட்டு
அத்தினா புரியைத் தாண்டியே சிசுபாலராஜன்
அழகாக வந்து மேவினான்.

(தரு)

பட்டமணி மார்பதையே சந்திர ஆபரணமென்ன
பட்டவர்த்தனர் சூழவே சிசுபால ராஜன்
பார் புகழும் திறன் வந்தானே.

(தரு)

ஏமனும் நடுநடுங்க பெருந்தியக்கை வாளுமின்ன
காமசுந்தரனைப் போலவே சிசுபால ராஜன்
கண்டவர் நடுங்கவே வந்தானே.

(தரு)

கண்ட சரமாலையாட கதிர் முடி பளபளென்ன
தண்ட வென்டையும் கொஞ்சவே சிசுபால ராஜன்
தாரணி நடுங்க வந்தானே.

(கவி)

எந்தன் சொற்படி நடக்கும் இசைந்த மந்திரிகளே கேளீர்
விந்தையாய் தருமர் செய்யும் விளங்கிய யாகத்திற்கு
சந்தோஷமாக நானும் சென்றிட வேண்டும்
சிந்தை இல்லாமல் எந்தன் தேவியை அழைத்து வாரீர்.

(தரு)

பூதலந்தனில் உன்ன மாதர் புகழுகின்ற
பூவையரில் மிக்க அழகே
மேவி என்னுடன் வாழ்வாய் தேவியே.

(கொச்சகம்) (64)

60

அன்னநடை மின்னொளியே அழகிசுந்தரவல்லியளே
உன்னை அழைத்த விதம் உரைத்திடுவேன் எழுந்திருப்பாய்.

(விருத்தம்)

அன்னநடை மின்னொளியே மானே தேனே
அழகிசுந்தரவல்லியளே சொல்லக்கேளாய்
தன்னகரில் தருமனவர் யாகம் செய்ய
தனிவிருப்பம் அனுப்பியதோர் விதமறிந்தேன்
வண்ணமுள்ள மாதரசே போகவேண்டும்
மகிழ்ந்து விடை கேட்டிடவே வரவழைத்தேன்
நன்மையுடன் நீ எனக்கு தடை சொல்லாமல்
நலமுடனே போக விடை தருகுவாயே.

(தரு)

மாதே மாயன் வார்த்தை தன்னை மகிழ்ந்து நீ பேசவேண்டாம்
யேது என்னை ஜெயித்த வீரம் எடுப்பேன் கணை தொடுப்பேன்.
(சு) இங்கிருந்த இயிலே மங்கையே மயிலே
இனி சொல்ல லாமோ எனை வெல்லப் போமோ.

(தரு)

சீசீ பூச்சி காட்ட வந்தாய் நீ எமை எனக்கென் பாவமே
பேச்சு பேசி அறியாயடி பெண்ணே ஆசைக் கண்ணே
(சு) வேதனை என்பது மாதர்களுக்கும்
பெண்டுகளுக்கவும் மின் [illegible] டுமோ இருக்க.

(தரு)

எனக்குச் சத்துரு வாகவே ஜெனித்தவன்தன்
கனக்க உயிரை போக்கவே
நீ நீக்க படையைக் கூட்டி மனக்கவலை பாராட்டி
(சு) சேதி பறித்து வாய் மிகநாடி
தீதில்லாமலே நான் மிகத் தேடி. (என)

(தரு)

நானே யுரைத்த மொழியால் எனக்குச் சத்துரு
காணப் படுவை தழிவால்
தோறு முன்னே எதிர்த்து கோணல் தனையழித்து
(சு) தோன்றிய சத்துரு வானவனொழிய
நீண்டிடும் உலகினில் கீர்த்தி காழிய. (நானே)

(சு

(விருத்தம்) (65)

61

செங்கமல முகம் போன்ற தேவிகேளாய்
தெரியாதோ உந்தனுக்கு பழைய சேதி
மங்கையந்த ருக்மணியை எனக்கென்றெண்ணி
மனமகிழ்ந்து பரியமதை யீந்திருக்க
பொங்குமுடன் துவாரகையிலிருந்து வந்து
பிரியமதாய் ரதமேற்றி போனப்போ
திங்கள் முக வடிவான தேவிகேளாய்
சேயிழையே எச்சேதி அறிவாயே.

(தரு)

என்னை முற்று என்முன் வந்து இன்னிசை கவித்துவாடி
பேசுறேய் மிக வீசுறேய்
விண்ணவர் அயன் மால் தேவர் வெற்றி கொண்டுமே வென்றிடும்
வெட்டுவேன் கட்டி கொட்டுவேன்
(சு) கிட்டியே வந்து நீ அட்டியில்லாமலே
மட்டில்லா வார்த்தைகள் கொட்டிட லாமோ.

(தரு)

திறமிக்க வலு பெற்ற அரசர்க்கதிபனை
சிசுபால ராஜன் நடந்தான் வெகு சேனைகளுடனே (சிசு)
அரவத் துஜங்களாட இவ்வுலகம் கிடுகிடென்ன
தவணி மன்னவர் காடவே அதிசுந்தர முன்ன
அருவையர் எதிர் ஆடவே.

(அவைகவி)

சந்திர குலத்துதித்த தர்ம பூபதியே
வந்தனம் இந்தன் மலரடி சரணம்.

(கவி)

தேச மன்னவர்களெல்லாம் திறமுடன் வந்திருக்க
பாசமாய் தருமராசன் பாங்குடன் மதிப்பில்லாமல்
வாசமாய் கிருஷ்ண தேவன் மலரடி பூஜை செய்தான்
நேசமாய் இச்சபையை விட்டு நீங்கிடத் தெரிவோமே.

(தரு)

இந்த சபையிலுள்ள விந்தை மன்னவர்களே
இது என்ன நலந்தானோ சொல்லும் சொல்லுங்கள் (இ
[illegible]
(சு) [illegible]

வந்த அரசர் கூடி மகிழ்ச்சியுடனிருக்க
(சு) வடிவுள்ள மன்னரை விட்டுமே நீங்கி
இடையனுக்கு பூசை எப்படி செய்யலாம். (இந்)



(தரு)

…கப்பனிருக்க வேறே தாயொருவனைச் சேர்ந்து
…ரித்த கணைக்குதே இவன் குலமரியாதை (தரி)
…சுகப்படும் அவ்வருக்கு துரோபதை தாரமென்று
(சு) …சுத்தமிப்படி பூசையினாலே
…புத்தி இப்படி வந்ததுமேலே. (தக)

(தரு)

…சாபத்தால் வந்த கெங்கை தலையைக் கொன்ற பாவி
…தன் மகன் இவனுமே இவன் குலமரியாதை. (தன்)
…பத்துபட அம்பை அவள்வாழ்வை கெடுத்தானே
(சு) அருமையான ஒரு வார்த்தையை தன்னி
பெருமையாக சமர் செய்தவன் தன்னை. (இந்த)

(தரு)

…யாதவ நந்த கோபன் அவனுக்கானசியே
ஆடு மாடுகள் மேய்த்தவன் பால்தயிர் திருடி. (ஆடு)
…பேதிவன் வன்மையை எவ்வளவு அறியாமல்
(சு) பெற்றுக்கொள்வது. பூசையப்படி
பார்த்துக் கொண்டிருங்கள் வன்மையிப்படி. (இந்த)

(கவி)

…ரதிக்குத் தகுந்த புத்தி சரிசரி விளங்கக்கண்டேன்
…திக்குத்த இந்த மன்னர் நெடுமுடி இணிந்துவாட
…சாதிக்க இடையனுக்கு துலங்கவே பூசைசெய்தான்
…பதுக்கு இருக்க வேண்டாம் எழுந்திருங் கோவேமே.

(தரு)

…யாகா ஜே என்று சொல்லி பொங்காதே கழ்வார்
…ஆகாத விதம் சொன்னீர் அறிந்தவர் போல.

(தரு)

…லமையறிவேன் வெப்புதே சென்றதனாலே
…வதி விருந்தோமே நடவும் எட்டிநடவும்.

(கவி)

…னி வழியுமென்று மகிழ்ச்சியாய் வீஷ்மர் கூற
…து பெரும்பமேனி கண்களில் பொறிபறக்க
…டியேன் கெர்ச்சித்து தடைபடா சிங்கம்போல
…ள்ள மாயன் தன்னை எதிர்த்துமே உரைசெய்வேனே.

(தரு)

இந்த மதி யாவனோ படைத்தாய் யாதவ சிரேஷ்டா 
எண்ணத்துக்கு விளைவிறந்தாய்
இந்தமதி யேன் படைத்தாய் பேணா இப்படி கெட்டாய்
நிந்திடும் சாம்பூலத்தை முந்தி வாங்க நாயமுண்டோ. (இந்த)

(தரு)

அரக்கனை கொல்லவே போனாய் இலங்கைதன்னில்
அகப்பட்ட சீதையை தவினாய்
எடுத்தனை தீயிற் சென்ற பெய்யாமசீதை தன்னை
வெறுத்த இருத்தனமாய் பிழைத்த புத்தியினாலே. (இந்த)

(தரு)

இந்த வண்ணன் புத்தி கெட்டுமே சீதையாள் தன்னை
வனத்தில் ஓட்டிய தாண்டோனே
கண்ணில் காணமலே காட்டில் பிறந்த பிள்ளையை
என்னதென்று சொல்லியே எடுத்து வந்த புத்தியோ. (இந்த)

(தரு)

இரணியனைக் கொன்று வதைத்தாய் நரசிம்மமாய் கொண்டு
எடுத்து உதிரம் குடித்தாய்
தரணியிலுன்னைப் போலே சண்டாளன் தனைக்காணேன்
நீ ஏனிங்கு கெட்டுயின்று நினைத்தாய் தந்திரங்கள். (இந்த)

(தரு)

கானகந்தன்னிலே திரிந்தாய் ஆயரைக்காக்க
கனத்த மலையைச் சுமந்தாய்
மான பூஷணமான வசுதேவர் உன்னை பெற்றோர்
ஈன புத்தியினாலே பேணா இப்படி கெட்டாய். (இந்த)

(தரு)

ஆயர் குலத்தில் வந்தாயே தயிர்பால் திருடி
அடியும்பட்டுக் கிடந்தாயே
பேயான பூதகிபால் பிடித்து உண்டு வதைத்தாய்
பின்பு அந்த கஞ்சனை வதைத்த படுபாவி நீ. (இந்த)

(தரு)

ஆடுமாடு மேய்த்த புத்தியால் - கோபால
அறிவுகெட்டு பேசிமட்டியாய்
கோடுமேடு பள்ளத்தினில் கன்றுமறங்குகின்றவன்
நாடும் அரசனைப்போல் ஞாயமாணுமே. (இந்த)

(தரு)



..தவ இவத்தில் பிறந்தாய் கோபால கிருஷ்ண
..டியும் உதையும் பட்டாய்
..தமோன இடப் பெண்களுடனே சேர்ந்தாய்
..ாதியின தூவோக் சூலையை விட் அப்புறம்போடா. (இந்த)

(தரு)

எனக்கு நீ தர் ஆவையோ தொண்டை செய்யவே
..இருந்து நீ வாடாவா உனக்கு நான் அஞ்சுவேனோ
உன் வலு வதி வேணை உகந்து கொள்ளவே ஆசை
அகந்தனில் மகிழ்ந்தாயே (ஏன)

(தரு)

வல்ல வீரியங் கெட்டவன் எடப்பெண்களால்
மத்தாலடியும் பட்டவன்
நல்லது உனக்கிந்த ராஜ தன்மை யேதடா
நடுவில் வீற்றிருக்கிறேய் விடுவேனோ இனி சும்மா. (ஏன)

(தரு)

மடுவுக் கேடிய வெள்ளனை கோபாலப் பெண்கள்
புடவைத் திருடும் கள்வனே
படும் வீதியாலே வந்து பார்க்காதே இனி சும்மா
பாணத்தால் என் வீரம் காணச்செய்வே னின்னேரம். (ஏன)

(தரு)

இன்னம் நாமிஷ வேது வலுவிருந்தால்
எதிர்த்து வாரும்ப்போது
பன்னும் தருமர் பீஷ்மர் படை கூட்டி வந்தாலன்று
பம்பரம் போல் சுழட்டி அம்புக்கினை கொடுப்பேன். (ஏன)

(தரு)

ஆட்டியக் கனை தன்னைத் தடுத்துவோ = ஏயாதவக் கிருஷ்ண
ஒட்டியக்கனையை உருகவாட்டினேன். " "

(தரு)

அம்பெடுத் தேன் அண்டம் நடுங்கவே = ஏயாதவக் கிருஷ்ண
இம்ப இம்பவாய் வாங்கி வீசினேன். " "

(தரு)

சாடியே சரம் தன்னை மாற்றினேன் = ஏயாதவக் கிருஷ்ண
கோடிக் கோடியே சிரங்களோற்றினேன். = " "

(தரு) 

மடிப்பேனென்று மகிழ்ந்து வருறேய் = அடாயாதவகிரு65ஷ்ண
முடிப்பேனென்று இன்னே கில்லா = " " "

(சுபம்) (சுபம்) (சுபம்)

## விராட பர்வம் : நாடகம் திருகர்த்தன்

(கவி)

தங்கதிற மணி மகுடம் துலங்கிடும் சோதி
தாளமணி நவமணிகள் அலங்கரித்து
பங்கயனும் மாலுமே அதிசயிக்க
பாரியவன் திரு தண்டும் கரத்தி லேந்தி
சிங்கமுடன் சல்லரி பூரிகையும் பேரி
தனி முரசு நெருங்கிட வே படைகள் சூழ
திங்கள் குல மன்னவனை காணவேண்டி
திருகர்த்த ராஜனிதோ வருகின்றானே.

கே.பி. செல்வகுமார்,
மாவட்ட பொதுச்செயலாளர்
தமிழர் தெருக்கூத்து கலைஞர்கள் இ..
விழுப்புரம் மாவட்டம் (தெற்கு)

(தரு)

திருகர்த்த ராஜன் வந்தேன் திசைபுகழ் புஜபல (திரு)
திருகர்த்த ராஜன் வந்தேன் தேச தேசமதிக்க
பேர் பெற்ற மனு நீதி நிலைபெற்ற ராஜனென்ன
(சு) நிகரில்லாத பல வெகு குண சுந்தரம்
புகலும் வீரிய பகைவர் நடுங்கிட. (திரு)

(ஷை)

நீண்ட மணி முடி மின்ன நெடிய புஜங்கள் துன்ன
தாண்டு மணி வீரகண்டா தகிர்த தகிர்த மென்ன
(சு) சால மீரிய பகைவர் நடுங்கிட
சூல மேந்திவரும் காவலும் என்ன. (திரு)

(ஷை)

உதய கிரண மின்ன வதனம் கள தளன்ன
அதன சுந்தர ஆரம் பளபள பளவென்ன
(சு) அங்கு மேலோங்கிய சங்கரி பூவம்
துங்கமாய் கவரிகள் புங்கமாய் வீச.

(விருத்தம்)

மதிகுல கொடிந்தாய் வந்த மன்னர்க்கு மன்னரான
துதிமிக புகழ் படைத்த தூரிய பூபதியே போற்றி
எதிரில்லா மன்னர் சூழ்ந்து இருக்கின்ற கொலுவை நாடி
அதிபதி அரசே என்னை அழைத்த சங்கதி சொல்...

(கரு)



...ன்னுக்கு மன்னவனை உன்னித துதிய ஆபா
மாரனே வெகு தீரனே
...ன்னகை யாண்டிருந்த என்னையும் கீசகன் வெற்றி
ஆகவே நானும் ஏகவே.

(கரு)

...ந்திர விராடனுக்கு அந்தகாரா சொந்தவர
ஆச்சுதே துயர் போச்சுதே
...ந்தை கீசகனுமாள அந்தகாரணுக்கு சொந்த
மாகவே நானும் ஏகவே.

(கரு)

...யப்பவே விடையளித்தால் செப்பியப் பகைத்திரளை
கூட்டுவேன் இங்கு ஓட்டுவேன்
...கைப்பவ விராடன் வந்தால் கொப்பென அவனை வெல்ல
காட்டுவேன் கொடி நாட்டுவேன்.

(கரு)

...பஞ்சவ ரெதிர்த்த போதும் சஞ்சல மதைத் துணிந்து
பாடுவேன் ஜெயம் நாடுவேன்
கொஞ்சு மனதில் வேறு சஞ்சலமில்லாமல்
கூறுவாய் மனம் தேறுவாய்.

(விருத்தம்)

நானெனும் மச்சதேசம் ராஜகீசகனும் வென்று
தானுள நமக்கு சொந்த தமக்கைக்கு சொந்தமாக
வானோட்கள் சென்றபோது வயிரமும் பிடித்து நீடும்
காடாள விடுத்தோர் தம்மை கண்டித்து வருகுவேனோ.

(விருத்தம்)

அஞ்சன விழியினாளே அன்னமே தேனே மானே
மஞ்சுளா வதியே கேளாய் மச்சநாடதைப் பரித்த
வஞ்ச கீசகனை மாண்டு வகையறிந்தந்த நாட்டை
இன்றியே ஜெயித்து வாறேன் மெல்லி நீ வாழி வாழி.

(கரு)

நடை மயிலாளே நான் படையெடுக்கும் போது = பெண்ணரசே
மடத்தனமா வந்து தடை செய்யலாகுமோ = ௰

(கரு)



எந்தன் பலத்தினால் வந்தவன் தனை வாட்டி = பெண்ணரசே 
அந்த மச்சநாட்டை சொந்தமாக்குவேன் போடி = ௰

(கரு)

என்ன மொழி சொன்னாயடி எந்தன் மின்னே பெண்ணே
வர்ண கருங் குயிலே பெண்ணே - மதிக்க மன்னன் மதைக்க
(சு) வாட்டமில்லா பசு கூட்டமுடனே யவன்
நாட்டையும் கைகொள்ளும் வேட்டினை பாராய் (என்)

(கரு)

அச்ச மேது மச்சபதி அவனை வெல்ல யிலனோ
மச்சவண்ணன் மெச்ச என்னை பிடிக்க பகை முடிக்க
(சு) படையுடனே கியே கனை விழி கொடிய
தடை செய்ய லாகுமோ கன மயிலாளே. (அச்)

(கா - ம)

கீசகன் நமது நாட்டை வளைத்தவன் மடிந்திருக்க
யோசனை செய்வதென்ன உம்பர் கோன் விராடன் பஞ்ச
ராஜரும் வந்தாலென்ன நானதற்கு அஞ்சுவேனோ
பாசமாய் பசுக்கூட்டத்தை

(கரு)

பாங்குடன் ஓட்ட என் பெரிதை ஓங்கவே மீட்ட
தேங்காமல் நான் மச்ச தேசத்தை அண்டியே
சோங்காமல் ஜெயம் பெற்று சுருக்காக வருகின்றேன் (பாங்)

(ஷை)

சூரமும் உண்டு எதிர்த்தவன் தீரமுங் கொண்டு
பாரும் பாரும் மச்ச பதிதன்னை வாட்டியே
வாறேன் நான் பேர்கை மீட்டியே சூழும் (பாங்)

(ஷை)

சதுரங்க சேனையைக் கூட்டி நல்ல தனவிடி போலவே பேரிகை கொட்டி
அதிவித பரிகளை பூட்டி நல்ல அழகான ரதமேல் விரியல் காட்டி.

(ஷை)

வீரரே வரும் பசுக்கூட்டம் போவதைப் பாரும்
வீரரே ஒருமிக்க தீரமுடனே சுற்றி
விடுக்காமலொன்றையும் மடக்கிங்கள் பிடித்திங்கள். (வீர)

(நரு) (72)



சஞ்சலம் வேண்டாம் ஒன்றுக்கும் நீங்கள் அஞ்சவும் வேண்டாம்
மங்கி வந்ததீர்த்து நானே மீதிக்குவேன் வதைக்குவேன். (வீடு)

(நை)

கூட்டமாய் ஓட்டும் இடையர்கள் வந்தால் மீட்டியே வாட்டுமே
கூட்டமாகச் சென்று பட்டணம் சேர்வோம்
வாட்டங்கள் படவேண்டாம் வகையேது பிசகாது.

(நை)

திருகர்த்தன் நானே எங்களுக்கில்லோர் துரைமக்கள் தானே
திருமேவர் புகழ்கின்ற தீரனென்றறியாரோ
பெரிதா எவர் வந்தாலும் பல மின்ன நிலமின்டு.

(சுபம்) (சுபம்) (சுபம்)

விராட பர்வம் நாடகம் : ருத்திரன்:

(கவி)

அவனியெல்லாம் கொடி பெறவே மச்ச வேந்தன்
அருந்தவத்தால் வந்துதித்த வதனதீரன்
கவனமுடன் கல்வியெல்லாம் கற்றுணர்ந்து
கருத்துடனே தன்பாட சாலை விட்டு
இடைவிடாமல் தியானம் செய்து
இரும்படனே பரிதீர மன்னை நாடி
நவமணி தேர் பணி துலங்க ருத்திரபாலன்
நல்ல புது மன்மதன் போல் வருகின்றானே.

(தரு)

ருத்திர குமார தீரன் வந்தேன் - நல்ல
நவமணி பெருகொளி நவமணி போல (ருத்)
ருத்திரக் குமாரன் வந்தேன் சித்திரப்பட சாலைவிட்டு
(சு) சோதீரர் பல ராஜர் புகழ்ந்திட
ஏகமான புவி போர்கள் மகிழ்ந்திட. (ருத்)

(தரு)

வர்ண்ணமணி மாலை மார்பில் ஆட நல்ல
வடிவின் வடிகிய கொடியிடை பெருகிய
கன்னியர்கள் கண்டு மனம் வாட
புன்னகை தந்த மிலங்க பூஷண வர்க்கம் துலங்க
(சு) போக துலங்த நாகரீகமத
வேகமாக பசி தாக நீங்கிடவே. (ருத்)

(73) (தரு)



காலில் தண்டை கொலுசு கொஞ்ச
கலகலவென்றுமே ஒளியது மீறவே
விந்தையாய் நீல மணிகள் மிஞ்ச
கந்தமலர் வாடை வீச கண்டவர் நயனம் பேச
(சு) கால மன்மதன் போலவே வந்திடும்
வேண மாதர்கள் இன்பமும் தந்திட. (ருத்)

(தரு)

பெண்களெல்லாம் ஆனுபோக் கொண்டு
வரிசையாகவே அரசனைப் போலவே
கண்களால் அவங்க மீதில் கண்டு
வெண்கடின கோபமீறி விந்தையீதென்று சீறி
(சு) வீரசூரர் பல தீரரும் வாடிட
கோரமாகவே சூரரும் ஓடிட. (ருத்)

(கவி)

அன்னையே பாதம் போற்றி அலங்கத்தின் வரிசையாக
கன்னியரெல்லாரும் கூடி கனத்த வீரியரைப் போலவே
தன்னுடு பணியை மாற்றி தருந்த ஆண் வேடம் பூண்டு
உன்னிடமுள்ளதும் உண்மையைத் தெரிவிப்பாயே.

(தரு)

அம்மா நானென்ன செய்குவேன் ஒரு
அரசனும் பசுக்களை துடுக்குடன் நடத்திட (அம்மா)
அம்மா இருந்தாலது சூரத் தத்துவம் தானோ
(சு) தாரிய நானுமே வீரியம் செலுத்தவும்
தீரமென்போ ஒரு சாரதி பாரும். (அம்)

(தரு)

அறியாத பிள்ளை என்றுமே - என்னை
பேசிதம் செய்யவும் தானுமே கோபம் (அறி)
சரியான மொழியாலே என் தந்தை வந்திடு முன்னே
துடுக்கான பசுக்களெல்லாம் தொலையும் பட்டணம் விட்டு
(சு) துஷ்டரை வெல்லவும் கலைடும் ஆமா
பக்தி சமாய் சாரதி இஷ்டமதாகும். (அறி)

(கவி)

அன்னையே இதென்ன வார்த்தை அறியாத பிள்ளை என்று
பன்னியே தடை செய்தாலே பசுக்கள் காணமாட்டோம்

(74)



என்னிடம் வருவைப்பாரேல் எனக்குச் சாவதே தந்தால்
மன்னர் மன்னவரை எல்லாம் வரவழை கேற்றுவேனே

(கரு)

மாறுவதிலே புகழ்படைத்த மகிழ்ந்திடும் ரதியே
ஆருதே கோபங்கள் ஆதி நான் தவித்திட
(சு) அந்த மின்றியே இச்சை வைத்துமே
கொச்சும் மன்னரை மெச்சவாருமோ. (மாறு)

(கரு)

பாரும் நீயம்மா பாகன் தன்னை பதுங்காதே சும்மா
நோவும் ஆகுது நினைவிலே தவிக்குது
(சு) நெடிய கானகம் முடிய கோவுகள்
கடந்தே போகுமுன் கொடியிலே சீமை - (பாரு)

(கந்.ம)

அவலும் பெரிய தன்றோ அதன் விஷம் பெரியதென்பார்
விரைவு பொன்று போடாதே வேறொன்றும் பலன் தராது
இறைவர் இவர்க்கு வந்து இன்பமொடு சமைக்கக் கூடி
பிறவி ஒன்றும் என்ன யோசித்து

(கரு)

சிந்தையிலே தக்க நல்லிலையா அம்மம்மா தாயே (சிந்)
(சு) சிந்தையில் நினையாமல் கொக்கி வேண்டாம்
பெருந்தருக் கபடமும் இந்தகம் வருமோ.

(கரு)

பேடியை சாவதென்று மெத்த
பெருமையாக இன்பம் கொண்டு
ஓடி வந்தாயிங்கே உன்னை வணங்கவே
(சு) உன்னைப் பாரேன் நீ ஆணும் பெண்ணுமறு
காணும் மன்னவர் நாணமில்லவோ. (பேடி)

(கரு)

அங்க விகாரத்துப் பேடி - அம்மா அவரை நான் காணும் கூடி
பங்கமில்லவோ என்னை பார்ப்பவர் நகையாரோ
(சு) பாதகிநீயே பேசலாகுமோ
கேவலமாய் நாணம் கெட்டதம்மணி. (அங்)

(கவி) (75)



அங்கமும் வெறுக்குதம்மா ஆணும் பெண்ணும் இல்லாமல் விளங்கும்
பங்கமாய் இருக்குதம்மா பார்க்கவும் வெட்கமாக்கு
சங்கை இல்லாமலிங்கு சாவதியான போக
தங்கும் மன்னவர்களெல்லாம்,

(கரு)

தட்டிக்கை கொட்டி நகைப்பார் அம்மம்மா தாயே (தட்)
தட்டி எவருங்கவும் கொட்டி நகைக்கும் போது
கிட்டி சிரசும் என்னை விட்டுத் தொலையுமோ. (தட்)

(கரு)

விட்டிடாதே மதை ருத்திரப் பாவையை காடி
பட்டத்து தேவியைத்தூ சுட்டிக்கொண்டு வாரன் என்றேன் பேடி.

(கரு)

பட்டிணம் தாண்டி வைரம் தட்டிப் பறிக்க சீராய்
கெட்டியாக ஏதம் விட்டுவருவேன் தோ பாராய்.

(கவி)

நாடியே தேத்தை விட்டு நகரமும் கடந்து வந்தோம்
பேடியே இங்கு பாராய் பெரும்பனை அனேகமாக
கூடியே இருப்பதென்ன குலமெல்லாம் எல்லாம் வந்து
மேடிய விதமேக் கண்டு மொழிவாய் அறிந்தாலே.

(கரு)

அய்யோ இதென்ன காரணம். பயமெடுக்க. துயர் கொடுக்க
அவ பேடியே உன்னிடம் கூடி நான் வந்திட (அய்யோ)
செய்யாத காரியத்தை செய்யத் துணிய வேண்டுமே
(சு) செப்பவும் என் மனம் ஒப்புவதே இப்படி
இப்பவும் நீயும் பாரும் கிருபை வைத்து.

(கவி)

என்னிடம் உள்ளம் வரு இரக்கமில்லாத பேடி
தன்னிடம் உதிர்ச்சற்றும் தடையற என்று எண்ணி
உன்னிதமாக ஏதம் ஓட்டியே செல்லும் போது
பின்னிட யான் திரும்பி,

(கரு)

பேடி தயங்கி ஓடினான் ருத்திர பாலன் (பேடி)
பேடி கையிலே சிக்கி நாடிப் பிடித்தோ வென்று
தேடி நகரை நோக்கி ஓடி அதி வேகமாய். (பேடி)

(76)



(கவி)

உலகிலுண்டோ
ஆடிய பாதா இந்த அன்னிதம்
போடியும் வந்த நானாய் பிழைசெய்து அறியேன்பாவி
வாடியே தவிக்கயானும் வந்தேன்ன கொடிகம்பத்தில்
நாடியே பிடித்துப் போவோன் நானிதற்கு என்ன செய்வேன்.

(தரு)

தேடி எந்தனைப்பற்றி தேர்கொடிகம்பத்தில் ஆதிலேவே
போடி எந்தனைக்கட்ட பெரும்பிழைக்கென்ன செய்வேன் ஆதிலேவே.

(தரு)

சேவேன்று பன்னிமத்தை தாவியேறினான் பித்திரப்பாலன் (தாவி)
உனபின்ன போடி உரைத்த மொழியால்
தீமேது கொண்டு இந்தை துணிந்துமே. (சர)
பந்த போடிபால் ஜெயம் தருமென்று நம்பித்துணிந்தானே பித்திரபாலன் (நம்)
பயந்த மனமும் தெளிந்து துணிந்து
பத்திக்கினையின்மேல் வைத்தடி போர்மே. (சர)

(தந்-ம்)

இந்த ஆயுதமும் கையில் இருந்திடும் வீரருக்கு
வந்த தோர் அச்சாத வாசம் வகையுடன் எந்தனுக்கு
அந்த தோர் வீரர்தானும்

(தரு)

அவர்கள் எங்கே இருப்பாரோ அய்யய்யோ போடி (அவர்)
அவர்கள் எங்கே இருப்பார் அவருக்கண்டறியாமல்
தவசிவ்வா எந்தனுக்கு சாற்றுவாய் அறியத்தானே.

(தரு)

பஞ்ச வர்ண தோகை மின்ன தீரன் - அர்ச்சுனனென்றுமே
பாவைக்கும் கெடி மிகுத்த கெம்பீரன்
அவர் வைத்தடியில் உன்னடியை வைத்திடப்பதம் பெறுமா
மெச்சவே எனக்கு இப்போ உத்திதமாய் சொல்ல வந்தீர்.

(கவி)

(சுபம்)(சுபம்)(சுபம்)

விராட பருவம் - பேழ - (73)

(கவி) (77)

கயிலாய பதியைக்கண்டு கனவரம் பெற்றதீரன் 
அயலான விதி இலங்க அர்த்தனர் மீசன் தன்னை
ஏயிலாக நடை நடந்து உத்தமி வரவுங்கண்டு
தேயலான போடி நேயம் தனஞ்செயன் பகுகின்றானே.

(தரு)

ஏழை விஜயப் போடி வந்தேன்
நய குணை சுந்தர தயவுள்ள தீரன் (ஏழ)
ஏழை விஜயப் போடி நாட கசால் விட்டு
(சு) நாடியே துவாரபதை தேடியே வந்திட
வேடிக்கையாக தெரியாக்கிட

(தரு)

புருஷ வடிவை எல்லாம் காட்டி இடப்பாகத்தில்
அருவை உருவை மணிப் பூட்டி
வருஷ காலம் கழித்து வந்தோமென்றதனாலே
(சு) வாசத்துடன் [illegible] பிரகாசத்துடன் மணி
பேசவும் என் மனம் கூசுதம்மணி. (ஏழ)

(தரு)

வாவன் அரண்மனையைத் தாண்டி தேவியும்கண்மை
காரணமாகக் காண வேண்டி
(சு) வல்ல கெம்பீரனும் நல்ல மனதுடனே
சொல்லியே வந்த தொல்லைகள் நீங்கி. (ஏழ)

(கவி)

மங்களவதியே வாழி வனவாச காலமெல்லாம்
நங்கையே கழித்து இன்று நாளையென்று அதிகமாச்சு
பொங்கமாய் இருக்கும் போது ஆவையே இங்கு வந்த
சங்கதி இன்னதென்று சாற்றுவாய் அறியத்தானே.

(தரு)

என்ன மொழியுரைத்தாய் பெண்ணே
கன்னிக் கரிசியானே
பின்னப் பயலுக்கு வர்ண ரதம் நடத்த
(சு) காரணமாய் கூறவில்லை
பாராமலே போவாய் இனி.

(தரு)

(78)

74 பெய்யலுக்கு எதிர்த்த தெய்யவமே வந்தழைக்க
பாசமோ விசு வாசமோ
துய்ய இனை மாதரசே அய்யமில்லா சொல்லும் வார்த்தை
துக்கமே பசுந் தங்கமே
(சு) சுகமும் தீரமும் வீரமில்லாதவன்
போரதனை வென்ன தோரமும் உண்டோ.
(த ரு)
என்ன வார்த்தையம்மா துரியோதனன் மன்னர் மன்னவம்மா
உனது மைந்தன். சின்னப்பாலனம்மா எதும் நடத்த
சொன்ன போது சும்மா
(சு) என்னைக் கட்டிமகன் தன்னை வேவினன்
அன்னையே ஜெயம் என்ன வாகுமோ. (என்)
(த ரு)
கட்டியே பசுகளை அட்டி இல்லாமலே = உத்தரப்பாலகா
திட்டமாய் பாருமே கட்டியவிழ்ப்பினேன் = " "
(த ரு).
தேசத்தில் கிடைக்காத சீரான நல்லாக்கு = உத்தரப்பாலகா
நேசமதாகவே சேர்ந்ததே உமக்குமே = " "
(த ரு)
ராஜனே இது வாக்கு நல்ல ஜெயமுண்டு = உத்தரப்பாலகா
தேசத்தில் கிடைக்காத சீரான நல்லாக்கு = " "
(த ரு)
தீரனே எதமோதி வந்திட துரியன்
சேனையைக் கண்டுமே நொந்திட
வீரிய மிது தானோ வேந்தர்க்கழகோமோ
தேரியே உன் மனம் திடத்துடனே படித்து.
(த ரு)
என்னபுத்தி கெண்டிருந்தாய் = நீயும்
சங்கை இல்லாமலே பங்கமெண்ணாமல் (என்)
மன்னர் மன்னவர் முன்னே வந்தோம் எதம் நடத்தி
(சு) மிகவும் படையைக் கண்டு அருவம்பயங்கொண்டு
வாடித்தயங்கமனம் ஓடிப்பதுங்கலாமோ.
(கந்.ம்)

(79)

75
மண்டலம் மதிக்கவந்த மகிபதியின்றபாலா
சண்டைநான் செய்வேனென்று சவுரியத்துடனே வந்து
அண்டியப் படையைப்பார்த்து அஞ்சியே எதம் திருப்பி
கொண்டுமே போனலிந்த,
(த ரு)
கொற்றவர் நகையாரோ கைகளை கொட்டி (கொ)
கொற்றவரு முன்னே மற்றவரும் நகைக்க
சித்தம் துணிந்து உயிர் வைத்து இருமென்று
(சு) சீவனுக்கு விதியாகவே
தாவியே எதம் விடும் தேவகமாகவோ.
(கந்.ம்)
தன்னிட்டப்படியே ராஜன் தாண்டியே இத்தப்போக
என்னிட்டம் செல்லாதென்று எண்ணியே யோசிக்கவன்
முன்னிட எதம் திருப்பி மொழிவகை தருமோவென்று
பின்னிட பரிநடத்த,
(த ரு)
பிடித்து இத்து யெறிஞன் உத்திரன் தன்னை (பிடி)
பிடித்து கொடிகம்பத்தில் துடித்து இருக்கக்கட்டி
அடித்துப் பரிகள் தன்னை நடத்த அதிவேகமாய்.
(கனி)
சாத்துடன் தேர்விடுத்து சடுக்கென வந்து வன்னி
மரத்தடி தனில் நிறுத்தி மன்னவா காட்ட வித்தேன்
அரத்தினில் இருந்த தீரா ஆயுதம் இருக்குதப்பா
திறத்துடன் மரத்தில் ஏறி சீக்கிரம் எடுத்துவாராய்.
(கந்.ம்)
பிரபல்யம் இவர்ந்த இந்திரப்பிரஸ்தம் தன்னை ஆண்டு
திரமையாய் மனம்போராமல் துரியனும் சூது ஆடி
அரண்மனை யாவும் வென்று அனுப்ப ஆரண்ய வாசம்
(த ரு)
அவர் வைத்த ஆயுதம் இதுவே பஞ்சபாண்டவர் (அவர்)
வைத்த ஆயுத மிது மற்றொருவர் இதை எடுத்தால்
கொத்தும் பாம்பாகவே உத்தமர் சொற்படிக்கு.
(த ரு)

உன்னிட76த்திலும் இருப்பார் ருத்திரப்பாலா = தன்னிடத்திலும் இருப்ப
தன்னிடத்திலும் தங்கி
உன்னிடத்திலும் சொன்ன
முன்னை துரிய ராஜன் சொன்ன காலம் துலிய. (உன்)

(சுபம்) (சுபம்) (சுபம்.)

## கிருஷ்ணன் தூது நாடகம்: சகாதேவன்.

(கவி)

நல்ல சாஸ்த்திரங்களாரும் நலமுறுங் கல்யுணர்ந்த
வல்ல பாண்டவர்கள் தன்னில் வகையுள்ள இளையோனை
வில்லினில் விஜயன் போல விற்பனர் கண்டு மெச்ச
சொல்லிடும் சகாதேவன் சொகுசுடன் வருகின்றானே.

(தரு)

வெண்ணிலா குலத்திலகர் புண்ணியர் தனக்கிளையோர்
வேத கல்கறுத்தவர் சகாதேவனென்னும்
நீதி சாஸ்திரங் கற்றவர்
அண்ணன் தம்பி சூதன் ஆண்ட நகரம் தோற்றோம்
கன்னி துரோபதையுடன் கானகம் தன்னில் சேர்ந்தோம்
(சு) தலங்களே பிராது நலங்களே துறந்தோம்
துலங்கும் உபாயம் தோன்றியே அடைந்தோம். (வெ)

(தரு)

குருமர் எனது அண்ணன் வழுவை மணி வெண்ணி
தந்தார் கெங்கையிட்டாய் பேயம் - உலகோர்காண
பிடித்தார் பிர்ம்மதேவன் சாபம்
இரும்பு செய் வீமசேனன் திரும்ப பலபல்லனானார்
கரும்பு வில் அழகுடைய காண்டீபன் பேடியானார்
(சு) காணவே தாமகிரந்தியும் நகுலன்
தோணவே தந்திர பாலனும் ஆனான். (வெ)

(தரு)

பாஞ்சாலன் தபத்தில் வந்த பைங்கொடியாகவேனி
பணிப்பெண்ணாய் ரூபமானாள் - விரித்த கூந்தல்
பாரில் முடிப்பனென்று கூறினாள்
சகல மனதுடனே மிக்கும் ஆயுதமெல்லாம்
அங்க வன்னிமரத்தில் அடக்கமாகவே வைத்தோம்
(சு) அரவமாய் சாபமும் வருகவே தந்தோம்
உரமுடன் விராடன் திருமுகம் வந்தோம். (வெ)



(கவி)

கந்தி மாமா நீயும் தனியாக அழைத்த தென்ன 77
சுந்தர வீமன் கிரீடி சுகமுறும் நகுலதேவன்
விந்தை சேர் தருமனன்னன் விளங்கும் சபையிலென்ன
புந்தியில் மகிழ்ச்சியாக புகலுவீர் செய்குவீரே.

(தரு)

தூது நீ போனதென்ன மாமா தூது
போகாத விட்டாலென்ன மாமா
கூட்டுதல் முடித்தாலென்ன மாமா
முடிக்காமல் விட்டாலென்ன மாமா
அதுவன் மாண்டாலென்ன மாமா
கர்ணன் தான் ஆண்டாலென்ன மாமா
இப்போது உரைத்தாலென்ன மாமா நீயும்
பூபாரம் தீர்த்தாலென்ன மாமா. } இந்தப்பாட்டுக்கு அடுத்தபாட்டு கடைசியில் உள்ளது பார்க்கவும். (பூபாரம் பாட்டு)

செய்யுள்: (1)

சிந்தித்த படி நீயும் சென்றாலென் கெழிந்தாலென் தெரிந்த நாளு
மைந்தர்க்குள் முதல்வனிடம் வழங்காமலிருந்தாலென் வழங்கினாலென்
கொந்துற்ற குழலிவளும் முடித்தாலென் விரித்தாலென் குறித்த செய்கை
அந்தத்தின் முடியும் வகை அடியோர்க்கு (யோர்க்கேலா) அத்தே சேர்த்தி.

(2)

முருகலிக்கும் பசும் துளப முடியோனே
அன்று அவனை ஒழிப்பாயுண்டு
மறுதிடச் சென்று உயிர்ச்சகடம் விழ உதைத்து
பொதுவர் மனை சென்று வளர்ந்தமாலே.

(3)

நீ பாரத அமரில் யாவரையும் நோக்கி
பூபாரதம் தீர்க்க பிறந்தாய் புயல்வண்ணா
கோபாலா போர்வோ கோவிந்தா நீயன்றி
மாபாரதம் அகற்ற மற்றோர் கொல் வல்லாரே.

(4)

ஒருவருக்கும் தெரியாது உண்மையைக் கானர்யென் உண்மையாக
திருவுளத்தின் செயலிதுவோ அதுவனக்கும் கருத்தென்றேன்
தெய்வமன்னன்.

(5)

பாவைக் 78 கர்ணனையும் பார்த்தனையும் கொன்றவன்தின்
காரர் இழுல் கலந்து காலில் கிடையட்டி
நேராக கைப்பிடித்து நின்னையும் நான் கட்டுவேனில்
வாராமல் காக்கவாம் மாபாரதம் என்றேன்.

(தரு)

விட்டு விடுவே னென்று எண்ணாதே நீ
வீணை வார்த்தைகள் பண்ணாதே
எட்டுவெண்ட வதாவடம் திட்டமாய் எடுத்தாலும்
வலுபோட்டு சாஸ்திரத்தால் வருத்துன்னை கட்டுவேன்.

(தரு)

உலகமே உபிராகி நின்றேலும் பரமன்
உடல்பாதியாகவே சென்றேலும்
அங்கு வில்பள்ளி அரிதேவர் கொண்டாலும்
வலுபோட்டு சாஸ்த்திரத்தால் வருத்துன்னை கட்டுவேன்.

(கந்-மீ)

உரித்திடும் தேவ் தந்த உத்தமா எனது மாமா
அரித்திட மடியா வண்ணம் ஆயிரம் நேமமாயை
பரித்திட ஞானம் தன்னால் பவந்தாமா நெஞ்சு தன்னில்
இருத்திடக் கண்டு யானும்,

(தரு)

ஞானக் கயிற்றேல் கட்டினேன் இருப்பதைக்கண்டு. (ஞா)
யானைக் கருள் தந்தவா அயுபமென்றிட்டப் போது
அடியவனெந்தனைக் காத்து அருள் தருவாய் இப்போது.

(தரு)

என்ன சொன்னாலும் இனி உன்னை விடுவதில்லை
மன்னவைக் காப்பதாய் சத்தியம் - செய்தாலே இன்று
உன்னை விடுவேன் நிச்சயம்.

(சுபம்) (சுபம்) (சுபம்)

பூபாலம் தீர்க்க வந்தவர் நீயென்று புந்தியில் அறிந்துகொண்டனே தேவாதிதேவா (புந்)
பாரதயுத்தங்கள் பதினெட்டு நாளென்று பகைகளும் ஏற்படுத்தி தேவாதி தேவா (பகை)
சகலமாய் செய்து மன்னர் அவ்வரையும் கண்ணை பில்மடித்திடவே தேவாதி தேவா (கண்)
வீமனைப் பிடித்து நீரும் மாமா விர்ப்பன சிறையில் போடும் மாமா
காலனைப் பின்றுமானை மாமா காண்டிபத்தில் கட்டி போடும் மாமா
இவனே என்று துரோபதையே மாமா சிறைத்து மொட்டை அடிக்க வேண்டும் மாமா
பரந்தாமா உனக்கட்டினேன் மாமா பாரதம் முடிந்த தேமமாமா

(சுபம்) (சுபம்) (சுபம்)

கிருஷ்ணன் தூது - விதுரன் 

(கவி) விதுரன்

பிரியமாய் கிருஷ்ண தேவர் பித்தன் போல் வரவுங்கண்டு
தெரியவே சேதி எல்லாம் தெரிந்திட மனதில் எண்ணி 79
பரிசில் வில்லும் ஏந்தி வாசவன் வருகைக்கண்டு
தெரியுடன் விதுர ராஜன் திருப்பமும் வருகின்றானே.

(தரு)

சத்திய விதுர ராஜன் வந்தேன் நல்ல
சவுரிய புஜபல அதிபல தீரன் (சத்)
சத்திய விதுரராஜன் எத்திசைப் புகழ் செய்யாரவன்
பத்தினைப் பணி துலங்க சத்திய சந்தனமானவர்
(சு) பங்கயன் வருகையை மங்களமாக
போங்கமாய் அழைத்திட எங்கும் அன்பாக (சத்)

(தரு)

அண்ட முனிவர் பயந்தோட என்
ஆர வீரத்தனைக் கோலத்தைக்காணவே
கண்ட முனிவர்களும் பயந்தோட
எண்திசை புகழும் கீர்த்தி கொண்டு மன்னர்கள்தோட
மண்டலவாசி போரும் கண்டு மலர்கள் போட
(சு) மன்னரும் போகை உன்னிதமாக
கன்னியர் பாடிடும் நன்னயமாக (சத்)

(கவி)

அரிகரி முகுந்தா போற்றி
கரிதனை காத்தாய் போற்றி
தமியேன் என்குடிசை தன்னில் சித்தம் வைத்தான்வாய் போற்றி
அடியார் தமது மீது அன்பு வைத்தான்வாய் போற்றி

(தரு)

என்ன புண்ணியம் செய்தேனோ நாதர்
கொண்டு தங்கிட திருவடி காண. (என்)
அன்ன வாகன மேரும் அயனுக்குத் தந்தையாகி
சின்னஞ் சிறுவன் செய்த குடிசைக்கு வரவேகி
(சு) தூதாக வந்திடும் பாதயுந்தோனே
நீதரா உன்பாதம் நான் காண வந்தேன் (என்)

(தரு)

அடியார்க் கானந்த வதியே என்
அதமது நோக்கியே பகைவனைப் போக்கியே

மடியக் 80 காலமும் மக்களை இருக்கவும்
தடியுத் தலைவர் வந்தால் தாளத்தில் நிற்கவும்
(சு) ஓரடிக்காகவே மாபலிக்கு நீர்
மேவடி யாருக்குமே தாவி தலையில் வைத்தீர். (அடி)

(தரு)

பாண்டவர்க்காக வந்தவா அந்த
பகைதீர முடிக்கவும் விருப்பமாய் இருக்கவும்
தூண்டாமணி விளக்கானவ
வேண்டிய வரந்தரும் வல்லான கீர்த்தியே
கொண்டவர் அடியாருக்கு கொடுத்திடும் கீர்த்தியே
(சு) கோவா காளிங்கமாய் மேவா வாழ்வு தரும்
மேவா அருள் புரியும் ஞானத்தில் நிறைந்தவனே. (பாண்)

(தரு)

அன்றிலை புரிக்கு நீர் வந்த தென்னவோ
அன்பாய் எனக்கிதை அருளையய்யனே.

(தரு)

மருதமாம் சாய்ந்திடவே உதைத்த பாதனே
மலையடியைக் காண வேண தவங்கள் செய்தேனே.

(தரு)

ஒருவனை புள்ள மன்னவனோ தர்ம தானமே
உங்களுக்கும் தெரிந்திருக்கும் எங்களையனே.

(தரு)

கொடியப்பாவி துரியனவன் கொடுக்கமாட்டானே
கொடுமையான சண்டை செய்து வாங்க வேண்டுமே.

(தரு)

விதிப்படி நடந்திருக்க நாம் என்ன செய்யலாம்
விருந்திற்கு நீர் சம்மதிக்க வேண்டுமையனே.

(தரு)

என்னாளும் கண் தூக்கும் வேத அதி மேலமே
அன்னை சாமி தானம் மகிழும் ஜோதி சுடரே.

(கவி (...))

சமையல் காரகோ கேளும் சுவாமிக்கு தனியாக
இலையில் நாடியிலாம் பேர் இங்கு சாமி சமைக்க வேண்டும்



சுவையும் பாகம் தாலும் சரியாக இல்லாவிட்டால் 81
அவையும் என் வாளினால் ஆக்கினை செய்திடுவனே.

(வலாவலா பாட்டு)

கோவிந்தமே அரி கோவிந்தமே
கோபாலா அரிஹரி எடுத்தியப்பாய்
ஆவலாய் மூன்று முடி அகலமது கொண்டு
அன்பான வாழை இலை எதிலே பரப்பி
சீவன் சம்பா நெல்லு ஆயிரத் தென்கலம்
சிதறிமேல் பரமேல் பச்சரிசி குத்தி. (கோவி)

ஆவின் பால் கூட்டிவிட்டு கன்னையது செய்து
அன்பான புளியன்னம் தயிரன்னமாக
மாவான பின்கன்னம் சக்கரைத் தனிகை
மதுரமானக்கலை கிச்சிலியன்னம் (கோ)

காவியே வாழைக்காய் கத்திரிக்காயும்
தடிப்பான் கிகாய் புடலங்காய் பாவக்காய் முன்னி
சுவையான வெண்டைக்காய் பரங்கிக்காய் மாங்காய்
திகையான கொத்தவரை பீக்கன் முருங்கை. (கோ)

அவரைக்காய் வழுதலங்காய் வாழைத்தண்டு கீரை
அரைக்கீரை சிறுகீரை வெந்தய முன்னை
மாவள்ளி சிறுவள்ளி பெருவள்ளிக்கு
மருவள்ளி ஆள்வள்ளி கோவள்ளி முன்னி. (கோ)

தவமான முன்னிப் பிரண்டை யும் சேர்த்து
தப்பாமல் இரும்புமது பொரியல் உபக்கடியும்
துவரம் பருப்புடன் கலப்பு பதார்த்தம்
சொல்லியே நாத்தெட்டு விசையது நெய்யும். (கோ)

எசுமுடன் தயிர் மோரும் பாயாசம் வெண்ணீர்
வர்த்தான் வாழைப்பழம் மாம்பழம் கூட
வசமான வட தோசை அப்பளம் போலி
திரமான ஆயிரம் தேங்காய் உடைத்து. (கோ)

அதிரசம் சுய்யுண்டை வட்டுண்டை வெறும்
தீபமுடன் சாம்பிராணி பத்தி கற்பூரம்
தீபமான வெற்றிலை பாக்குச் சுண்ணாம்பு
தேனான வாழைப்பழம் ஏலம் லவுங்கம். (ஜெகா)

தேங்காய் ஜவத்திரி குங்குமப்பூவும்
சாம்பிராணி தைலமுடன் அத்தப்பண்ணியும்
அதி லேப்பியங்கள் அவர்முன்பு வைத்து
அலங்காரத் தீபத்துடன் ஆராதனை செய்தான். (ஜெகா)

(சுபம்) (சுபம்) (சுபம்)

## அரவான் களப்பலி நாடகம் சகாதேவன்

(கவி)

இமையவர் புகழும் சீலன் இருநிலத் தோர்க் கொண்டாட
அமையுறு சாஸ்திரங்கள் ஆய்ந்திடவே வல்ல தீரன்
உமை யருச்சுனனை போலும் ஏனிவற தூரிய னென்றும்
தமையனை வேண்டி சகாதேவனும் வருகின்றானே.

(தரு)

சாஸ்திரம் தனக்குகந்த பார்த்திபமாக வந்த
சகாதேவ ராஜன் வந்தேன் — நல்ல
நவமணி பெருஞ்சோதி நன்மணி பாதிய (சகா)
வாழ்த்து வந்தனம் பொய்யாது வல்லவன் மிக்க நல்லவன்
(சு) வாசவன் பணிந்திடும் கேசவன் திருபதம்
பூசனை புரிந்திடும் மாசில்லா தீரன். (சாஸ்)

(தரு)

உலகமெல்லாம் நிறைந்தருள் மாயன்
கட்ட வெசபதமும் இட்டு முடித்திட
நலமெங்கும் அறிந்தவர்க்கு நேயன்
நலமிசை புகழ்படைத்த சந்திரகுலம் தனில்வந்த



(சு) தாவிய கோவண் மேவிய கருடன்
தேவனைப் போலவே கோவுகள் மேய்த்த. (சாஸ்) 

(தரு)

வந்திடும் துரியனான் அஞ்சினடிதியவை
தருமரு மீஞ்சி சரி இவரென்றுமே
சந்தேகமில்லாமல் அந்த நினைவெல்லாம்
ஆசை கொண்டும் ராஜதீரனே.
(சு) அம்புலி மன்னரும் இன்பமாய் பணிந்திடும்
தென்புள்ள தீரனும் சம்பிரமாகவே. (சாஸ்)

(கவி)

கருதி என்னடி பணிந்த காவலாளிகளே கேளீர்
வடிவுள்ள எனது அண்ணா வந்ததை கண்டறிந்தேன்
பரிவுள்ள பொற் பீடத்தில் பத்தமும் குலைப்பு கட்டி
அடியினி அலங்கரித்து அகமகிழ்ந் திருந்திடவே.

(சேபத்தியம்)

சந்திர குல சீலனே சாம்ராஜ்ய பாலனே
தமையனே உன்பாதமலர் சரணடிமையேன்
மந்திரகிரி தாங்கியே மாயவர் மைந்தனே
மலரடிக் கோடிகோடி சரணடிமையேன்
சுந்தர கெம்பீரனே சோதிமுடி பூஷணை
துய்ய பாதந்திற் கோடிகோடி சரணடிமையேன்
அந்திரர் பதிமெச்சியே அதிதீரனே கிருபை
அன்பு வைத்தாள்வாய் சரணம் சரணம்.

(தரு)

ஆரும் வெகு சனம் பணிந்திடும் ஒருநாளும் இங்கு வந்துமறியேன்
மன்னாநாடி வந்ததை கேளுமண்ணா
(சு) நாகரீகபதி போககுணபதி
யேகதீரவை யோகனை எந்தை. (ஆ)

(தரு)

என்னமாய் துணிந்து வந்தீரோ சாஸ்திரமே கேட்க நான்
இடர் செய்வ தொன்று வந்தீரோ
மண்ணும் உலகந்தன்னில் பண்ணும் வேதசாஸ்திரம்
தன்னை விடவே நெட்டி சொன்னதோர் உந்தனுக்கு. (என்)

(தரு)

நாடு 84 நகராண்ட மன்னவா   பாரதம் தோற்க
நாளிட்டுத்தா என்று சொன்னவா
ஆடும் பரமசிவன்   கூடுமான வரைக்கும்
தேடிவக்கணம் வைப்பவன்   மடி நம்பிவதுண்டோ. (நாடு)

(கவி)

வெங்கையை மானும் கொல்லும் வேடனை உடும்பு கொல்லும்
ஓங்கிய பெம்மந்தன்னை ஓதிய யானை கொல்லும்
ஆங்கால மரியாக்கிள்ளி அரவத்தை தேரை கொல்லும்
நீங்காது நீங்களிந்த நெறி தப்ப ஜெயம் தாரதே.

(விருத்தம்)

தப்பிதமிதுவோ சுவாமி   சாஸ்திரம் பொதுவெவர்க்கும்
ஒப்பியே ஒருவர் கேட்க   ஓரவஞ்சகமாய் சொல்ல
எப்படி தாணி வதைப்பேபோ   வைவென்றேல் எனக்கு மென்று
அப்படி முகூர்த்தம் வைத்தா   வரில்லை என்பார் சுவாமி.

(சுபம்) (சுபம்) (சுபம்.)

கிருஷ்னன் தூது நாடகம் : கிருஷ்னன்

(கவி)

பாண்டவர் நினைக்கும் போது   பரவாசு தேவன் தானும்
வேண்டியே காண வேண்டி   வெண்டையம் கலகலென்ன
காண்டீபன் விஜயனாலே   காரணம் முடிக்க வேண்டி
ஆண்டவன் கிருஷ்ணமூர்த்தி   அய்வர்முன் வருகின்றனே.

(தரு)

அரிகரி கிருஷ்ன தேவர் வந்தார்   அய்வர் சபைக்கு
முகரி கிருஷ்ன தேவர் வந்தார்
கரியை ரக்ஷித்த மாயன்   காருத்தனெனும் உபாயன்
(சு) கனக நவமணி   முடிகளும் துலங்க
எனது மார்பினில்   திருவையுமிலங்க.   (அரி)

(தரு)

நம்பி சாத்தகி ஆழ்வார்   சன்மார்க்க முனிவோரும்
நம்பும் அடியாருக்கிடம்   ரக்ஷித்தருள் புரியும்
(சு) நாதனென்றிடும்   காரணப் போதன்
தானென்றிடும்   நாரணப் போதன்.   (அரி)

(தரு)



பேயின் முலைபாலுண்டு   பேதையை கண்டு களித்தின் 85
தாயும் தமையன் பக்கல்   ஆயர்பாடி ஒளித்தோன்
(சு) தாரதிலவையும்   பாரதப் போரதே
தெரதாய் துதித்திட   வாரேன் நான் தூது.   (அரி)

(தரு)

என்றும் என் திருவடியை   நம்பினவர்க்குத் தாசன்
அன்னை சாமியின் நாவில்   அருள்தரும் பிரகாசன்
(சு) அருமறை தேடியே   ஆனந்தப் பொருளே
குருவாய் வந்து   அனுதினம் அருளே.   (அரி)

(தரு)

தருமனே வாழி   நானும் சுகித்து   இருக்கறீரோ
தருமனே இவ்வுலகில்   பெருமை இணைத்துடன்
வறுமை இல்லாத செல்வம்   பெருகும்படி அளித்தேன்.

(கவி)

முரசு கேதனனே வாழி   முடிவினில் எனை நினைந்து
வரவழைத்தென்னவோ தான்   வாட்டமாய் இருப்பதேனோ
உனுடன் எந்தனுக்கு   உண்மையை உரைப்பாயானால்
திடமுடன் காப்பதாக   நீ தெல்வா அருளுவேனே.

(தரு)

வந்தால் சந்தோஷம் தான்   எந்தனரும் மைத்துனரே
ஏதுக்கு   அழைத்தீர்   தோதுக்கு
சிந்தையில் ஆனந்தம் கொண்டு   உந்தனிடம் தேடி தன்னை
சொல்லுமே   இன்று   வில்லுமே.

(தரு)

போச்சுதென்று என்னிடத்தில்   பேச்சியும் உரைக்க வந்தீர்
தங்கையே   சொல்லுவேன்   இங்கையே
ஆச்சுதே பதின்மூன்றும் தான்   வீச்சியே நடந்திட வாம்
தங்கையே   சொன்னேன்   இங்கையே.

(தரு)

தூதுக்கு போகவே   மன்னவா   என்னை
தாண்டி அழைத்தது   மன்னவா
வாதுக்கும் சூதுக்கும்   வகையாக நான் வல்ல
யேதுக்கு என்னிடம்   இப்படி பேசுரீர்.

(தரு) (90)

பாகம் தரவிடிலே வேகமாய் யுத்தம் செய்து
பார்த்துக்கொள் வைத்து வாளேன் தருமநந்தனே
பாவம் உனக்கு ஏதுக்கு பாவமாய் இருக்குமோ
பார்த்து நீ சொல்லுங் காணும் தருமநந்தனே.

(தரு)

யானை மதமடக்க வேண்டுமோ கண்டக் கோடாலி
அது விடாங்கிடுமோ ராஜதீரனே.

(தரு)

அருமை அன்பு வீமாக்கோனே ஆசீர்வதித்தேனே பூமா (ஆசீ)
(சு) பெருமை மிக உள்ள உத்தமனாகவே
மருகன் போல் வாழ்ந்திருக்க நிரந்தரமாய்.

(தரு)

கொடுத்திட்டால் நாடு கேட்கவும் முடியாது = வீமனே
திடத்துடன் நீ போய் விருத்ததை கேட்டுவா = ,,

(தரு)

வேண்டியே அடிபணிந்த காண்டீபனே நீயும் வாழி
தாண்டியே உனக்களித்தேனே = சந்தோஷமாக
பாண்டியன் மருகா கர்த்தனே.

(தரு)

என்னால் ஆவது ஏது கன்னியரே சொல்லும் = தங்கையரே
சொன்ன சபதம் போல மன்னர்கள் முடிப்பார்கள் = ,,

(தரு)

போங்கி அழுவதினால் நீங்குமோ வல்வினை = தங்கையரே
ஏஜமான் அய்வர்களும் நிஜமாய் இருக்கும் போது = ,,

(தரு)

வசமது கேட்கவோ மன்னனே - இந்த
வையகம் நகையாதோ சொன்னனே
உலகத்து அரியனை உங்கள் பாகம் கேட்டு
தருகா விட்டால் காணேன் சண்டைக்கு நாள் வைப்பேன்.

(தரு)

சாஸ்த்திர இணைந்தே ஆசீர் அளித்தேன் - (சாஸ்)
சாஸ்த்திர இணைந்தே வாழ்த்துவமாகவே
ஆண்டியோடிருள் அளித்தேன் நான் போகவே.

KP. D[illegible]

(கவி) (91)



சீராக நல்வருமே சொன்னபடி செல்லாமல்
திறந்து சொன்னப்பா இவ்வசன மைந்தனுக்கு
வாராய் நீ அந்தரங்க மண்டபத்தில்
பாராய் நீ பாரதமும் முடிக்கும் சேதி
பெருக நினைத்திடாதே தம்பி என்றும்
விளங்கிடவே இருவருமே பேசுவோமே.

(தரு)

(வ) வந்தவனை நீ கட்டிவைப்பாய் எவரெவர் தலைகளை வெட்டிவைப்பாய்
உத்தமனாக் கட்டிட உன்னாலே யாகுமோ
சற்றும் எளிதுமாய் சாமார்த்தியம் கொள்ளாதே.

(தரு)

என்னை பெண்ணாக எண்ணாதே இப்போ
நான் மொழி யொன்றும் பண்ணாதே
மன்னர் அய்வர்களில் வல்லவனோ நீயும்
உன்னிடம் சமர்த்தாலே உன்கைத் தென்னைக் கட்டுவாய்.

(கவி)

இன்பமாய் கேசவரே இந்த நல் உலகம் காண
தன்பதினாயிரம் நான் பெறும் உறவுங் கொண்டு
அன்புள்ள சாஸ்திர வல்லோன் அறிந்திடா வகையைக் கண்டு
ஐம்பதினாயிரம் நான் வடிவுடன் நெஞ்சில் மறைந்திட்டனே.

(கந்-ம்)

துன்னிய சபையிலென்னை துரத்தியே ஞானம் தன்னால்
என்னையும் வருந்த தன்னில் சதியுடன் கட்டக்கண்டேன்
தன்னை நீ அங்கு சந்தித்து தயவுடன் கேட்டனப்பா
அன்னிதம் நினைக்க வேண்டாம்.

(தரு)

அய்யய்யோ உயிர் போகுதே மைத்துனரே யிங்கு. (அய்)
வையமெல்லாம் ஒருமையாய் அனந்த மதுசூதனைக்கே
செய்த கொள்கை பொறுத்து அய்யய்யோ கட்ட விதிப்பாய், (அய்)

(கவி)

சந்தேகம் தெளிந்து வந்த சகாதேவ மணியே கேளாய்
தந்தேனே உனக்குச் சத்தியம் சாஸ்திரம் உரைத்ததுபா
இந்த ஓர் ரகசியத்தை இன்னிவமதியப் போறார்
முந்தியே தேவர் சாட்சி முருந்தனும் அளித்தேனப்பா.

(தரு)



வைகுந்தன் ரதத்திலேறி யானவர்கள் மேவர் தாவ
வெய்யிலேந்தன் வேகமாகவே = அதிவிரைவாய்
தெய்வயோக சம்பன்னன் போகவே
பாண்டவர்க்கு தூது செல்ல மாயன்பரி தேரிலேறி
பாரிடமே தேடி வந்தேனே = அரிகிருஷ்ண தேவர் (பா)
வேண்டியே விதுரன் மனை ஆண்டவனும் போக வேண்டி
வேணதோர் சந்தோஷங் கொண்டுமே = வேணு கோபாலன்
காணவே ஆனந்தங் கொண்டுமே.

(தரு)

மெச்சு மனைக் கண்புனைய விதுர ராஜனே
வேண்டி வந்த காரியம் நான் விளம்புவேன் கேளும்.

(தரு)

கருமனவர் பதின்மூன்று வருஷம் துலைத்து
காரணியில் உபலவியம் வந்து சேர்ந்தார்கள்.

(தரு)

குருநாட்டை பாண்டவர்க்கு கேட்க வந்தேனே
இவ்வயத்தை அனுப்படி செய்யப்போறேனே.

(தரு)

பத்தனிலே எனக்கு அன்னம் பகர்ந்திட வேண்டும்
பக்ஷமுள்ள எந்தனையே விதுர மன்னனே.

(தரு)

துரியன் சபையை நாடினர் - அரிகிருஷ்ண தேவர் - (துரி)
கரியை ஏற்றிய மாயன் கனக ரதத்திலேறி
அர்ச்சுனனோ வென்று பக்தர் அடிதொழ புஷ்பமாரி
(சு) அச்சுதனே பர நிச்சயனனே
பச்சை மேக வர்ண்ண மச்சவதாரன்.

(தரு)

சந்தன ராஜன் பெற்ற விந்தையுடைய வீஷ்மா
சரியே வீஷ்மா சரியே
வந்தவுந்தனைத் தேடி எந்தனிடம் பேசுவீர்
சரியே வீஷ்மா சரியே.

(தரு)

துரோண கும்பத்தில் வந்து பாரில் அவதரித்த
டாரியே துரோணச் சாரியே





நோய் எழுந்திருந்து கூடவென்னதோ பதில்
நீருமே கண்ணால் பாருமே.

(தரு)

காந்தார தேசமாளும் எந்தனுடன் பிறப்பே
தமையனே சகுனி தமையனே
துரியன் தம்பியரான பிரியமுள்ள மைத்துனரே
வந்தனே கால்கள் நொந்தனே
சரியாமோ உங்களுக்கு நெறியாய் இருக்கின்றீரே
கர்மமோ இதுவும் வர்மமோ.

(தரு)

அண்ணன் மகன் பெருந்திருவான் கண்மணி புலவரான
ராஜனே துரிய ராஜனே
பெண் கொடுத்த சம்மந்தியான் கண்ணனும் வந்திருக்கேன்
பாருமே கண்ணால் நீருமே.

(தரு)

எதிரில் விதுரன் வந்து என்னை அழைத்துப் போனார்
புசித்தேன் அவர் வீட்டில் ராஜ தீரனே.

(தரு)

இறவென்றும் உறவென்றும் எனக்குப் பேதமில்லை
இனி வரும் சேதிகேளும் ராஜ தீரனே.

(தரு)

மன்னவர் பஞ்சவர்க்கு தூதாகவே வந்தேன்
மகிழ்ந்து உரைக்கலாமோ ராஜ தீரனே.

(தரு)

உன்வீட்டில் அமுதுண்டு உன்னை வெறுக்கலாமோ
உண்மை நினைத்திருந்தேன் ராஜதீரனே.

(தரு)

வேண்டும் துணைவர் ஆண்ட நாட்டை கேட்க வந்தேன்
வெட்கி இருப்பதேனோ வேந்தர்களே.

(தரு)

காதகமாய் பேசுவதும் நீதியாமோ உந்தனுக்கு
கருத்தை அறிந்து பாரும் ராஜதீரனே.

(தரு)

(94)

90

பார்க்க வந்தேன் அவர் நாட்டையே உன்னை
கேட்க வந்தேன் ஒரு பாட்டையே
நாட்டை யுவக்கெல்லாம் பகிர்ந்திடும் அய்வருக்கு
காட்டினிலேயும் கலங்கிட லாகாது.

(தரு)

தேசம் தராவிட்டால் தர்மமா அய்ந்து
ஊராகிலும் விடு தர்மமா
உலகெல்லாம் கீர்த்தியாய் இருந்திட அய்வருக்கு
ஐந்து ஊராகிலும் விடுவாயோ வேந்தனே.

(தரு)

வல்ல உன் அண்ணைக்கு வல்லியே அய்ந்து
வீடாகிலும் விடு தொல்லையே
வீடாகிலும் விடு கலகமும் வேண்டாம்
காடாளும் அய்வரை காத்திடுவாய் நீயே.

(தரு)

இப்படி சொல்வது உபாயமா ஒரு
மனையாகிலும் விடு ஞாயமா
உலகெல்லாம் அய்வர்தன் கீர்த்தியழியாமல்
கலங்காமல் நீயுமே கண்டிப்பாய் தரவேண்டும்.

(தரு)

மதிகுல அய்வரும் வாடவே காண்.
வந்தேனே தூது போகவே
அது விதமாகவே அவர் நாட்டை கேட்டால்
பதியினில் கேலியாய் பரிகாசம் செய்கிறீர்.

(தரு)

வந்தது சந்திர குலம் மறுபடி குரு குலம்
வில்லவர் குலமல்லவோ ராஜர்களே
புருஷனில்லாத பெண்டு பிள்ளை எத்தனை உண்டு
பேசாதே வாயை மூடும் ராஜர்களே
குந்தி பிள்ளை பெற்றேன் என்று உந்தன் தாயார் சேதி கேட்டு
கோபி அவையும் போல • குந்தி உங்களை பெற்றாள்
கோகுல மாகி வந்தீர் ராஜர்களே
நடந்திடும் என்று சொல்லி திடமாக சொல்ல வந்தாய்
ஞாயம் தெரியும் போம் போம் கர்ண ராஜனே

K.P.செ[redacted]
7-வது [redacted]
L.R.[redacted]
[redacted]
செங்[redacted]

(95)

அறிவார்கள் உந்தன் பேரை உன் அன்னை தந்தையாரு 91
அகம் கொண்டு பேசுவாரோ கர்ணராஜனே.
தெரிவார்கள் உந்தனையே தேர்ப்பாகன் மைந்தனென்று
தேசம் பழிக்கும் போடா கர்ணராஜனே.

(கவி)

சர்ப்பமே கொடி படைத்த சத்திய மறந்த பின்னாய்
இப்புவி பாகம் தன்னை இயலுடன் கொடுக்கா விட்டால்
ஐப்படன் நாளை சன்னை உகந்துமே அய்வரைவர்
கர்ப்பனை யாகவே நீ கைப்பேட்டு தந்திடாயோ.

(தரு)

அகப்பட்டு கொண்டானே துரியோதனன் (அக)
அகப்பட்டுக் கொண்டானே திகைப்பட்ட மான் போல
(சு) தேன் மொழி கூந்தல் தன்னை முடிக்கவென்
நாணிட்ட சபைத்தை முடித்துப் பேரடைக்குவென்.

(தரு)

துரோணர் மைந்தனே இங்கு வரும் துரியன்
சகுனம் வஞ்சனையும் பாரும்
அரவக் கொடியோன் சூதும் அவன் செய்த மோசமும்
தரணி பூபாலருக்கும் தானது முறையாமோ.

(தரு)

அஸ்வத்தாமனே கிட்ட வாருமே வலி
அந்தர விபகாரத்தை பாருமே
சுந்தர நிலமாதி வந்ததும் என்னமோ
சந்திரன் மீதினில் சகல ஐய்யாவமோ.

(தரு)

காணாமல் போனாலும் போகட்டும்
கையில் கிடையாது மீட்டும்
வீணாய் நீ வந்து வெகு கோலமாச்சுது
காணாமல் துரியனும் கண்டிப்பவன் உன்மேல்.

(கவி)

இந்திரா சொல்வேன் கேளாய் இப்போது மறையோன் போல
மைந்தன் கர்ணனுக்காய் மனமது இரங்கி நீயும்
சுந்தர கர்ணன் பக்கம் சொகுசுடன் சென்று நீயும்
சிந்தையாய் கவசகுண்டலத்தை சிறப்புடன் தானமாய் பெற்று வாராய்.

உ

இராஜ[redacted]யாகம் கிருஷ்ணன்



(கவி) (98)

நாரதமுனிவர் வந்து [redacted] நால்வந்தரசரெல்லாம்
திரமாய் மகத[redacted]னை சிறைவைத்த சேதிதன்னை
கூறவே இண்டலிசன் கொற்றவர் சேதி சொல்ல
தேறவே மாயகிருஷ்ண தேவரும் வருகின்றாரே.

(தரு)

கருட வாகனமேறி கதைசிலை வாளாழி தண்டம்
புருஷ ரத்தினமென்னவே சாரங்கபாணி
பொங்குடனே வந்து மேவினான்.
எட்டுதிக்குமன்னர் போற்ற இன்பமாய் இசைகள்பாடி
பட்டு பீதாம்பர மின்னவே சாரங்கபாணி
பகட்டாக வந்து மேவினார்
அம்புவி மன்னர் நடுங்க யாகம்செய்து கோன் மிடுக்க
இன்பங்கொண்டவர் களிக்கவே சாரங்கபாணி
இமையவர் துதிக்கவே வாராரே
கோவியலூர் மேலநகர் சாலிகிருஷ்ண தாசன் போற்றும்
மால் திருச்செல் கேசவன் சாரங்கபாணி
மன்னவர்கள் முன்னே வந்தாரே.

(கந்தம்)

பரிதிஎதிர் அகப்பட்ட பனியைப்போலும்
பார்மதியைக் கண்ட தெருளிருளைப்போலும்
சுருதி முறை கொண்டவர்கள் பாவம் போலும்
கோதிமுடி அரசர்களை உங்களுக்கு
கருதிய தீவினைப்பறந்து ஓடியென்றும்
கடைசேர் உலகமெங்கும் கீர்த்தி ஓங்க
உறுதி பெருமலிந்த உலகையாள்வீர்.

(தரு)

உத்தமரே வாழ்வீர் ஜெயமுங் கீர்த்தி
பெற்றுமே வாழ்வீர்
பக்தியாக நம்மை பாங்காய் வரவழைத்தீர்
சத்திய வாசகசே சங்கதி அதிவிப்பீர்

(தரு)

இராஜசூய யாகமென்றால் பேசவும் எளிதல்ல
ராஜனே கேளும்பா தருமபூபா (ராஜ)

(97)

தேச தேசங்களை ஜெயித்திட்ட அரசரை 
ஜெயமுண்டு பிறகாட்டி சுயம்பெற வேண்டுமே.

(கவி)

தருமகுல தருமபூபா சராசந்தராஜனுக்கு
சிசுபாலன் முதலாயுள்ள தேசபூபதியைத் தன்கை
வசமாக்கி இருக்கு மற்ற. வல்லவன்தனை மடித்தால்
பிசகிலா இந்த யாகம் பிரியமாய் நடத்தலாமே.

(தரு)

மனப்பருதுகள் சொல்லவில்லை மன்னா
நினைப்பு வேற வதுங் சொல்லு
அனுப்பும் தம்பி வீமனை அர்ச்சுனன் என்பின்னால்
அவனை மடித்து வாரேன் புவனமீதிலே.

(தரு)

வீமனால் கொல்ல விதியிருக்க அவனை
ஆமோ ஒருவராலே அருக்க
சோம குலேசனே துணைவரையனுப்பினால்
சொல்லும் அவனைக்கண்டு வெல்லுவேன் மயங்காதே.

(கவி)

ஏத்தனை சொன்னாலென்ன எங்கள் தேசத்துவண்மை
இத்தம் நீர் வைக்கவேண்டாம் இவபுத்திரமணியே கேளாய்
சத்தியவானே வந்த சங்கதி என்னவென்றால்
உத்தரபிக்ஷைக்கு வந்தோம் உகந்துமே அளித்திடாயே.

(கவி)

வருவது வருமே யென்றும் வாராதது வருவதுண்டோ
அருமைசேர் மகதமன்னா அந்தணரல்ல நாங்கள்
தருமருக்கிளைய வீமன் தனஞ்ஜெயன் இவர்களோடும்
திருவணி அதிகிருஷ்ண தேவனென்றறிவாயே.

(தரு)

பகைத்தேன் நானென்று பேசுறேய் சராசந்தனே
பதட்டமாகவே பேசுறேய்.

(தரு)

அறிந்தேனென்று முடுக்குறேய் நமதுக்கிரை
அன்பாய் வந்தோமே கொடுக்க.

(தரு)

துண்ட 91 னை நீவாடா சமர்கள் செய்ய (98)
துன்னவண்டம் நீ வாடா.

(தரு)

இப்படி கோபிக்க லாமோ ஏகுபாலா தம்பி (இப்)
அப்பா வீஷ்மாச்சாரியும் செப்பும் மொழியைக் கொண்டு
இப்புவி மன்னரெல்லாம் ஒப்பியே இருக்கக் கண்டு.

(சுபம்) (சுபம்) (சுபம்)

அரவான் களப்பலி நாடகம் : கிருஷ்ணன்.

(கவி)

அண்டமெண்ட புவனமெல்லாம் அளந்த சோதி
அங்கடலில் பாம்பணைமேல் பள்ளி கொண்ட நாதன்
தண்டமொடு சக்கரமும் வில்லுமேந்தி
தமித்தர்கள் மதமடக்க வந்த தீரன்
கொண்டலனி திருமேனிக் கமலக் கண்ணன்
கொடிய துரியன் செய்த விதமழிக்க
வண்டணியும் துளபமலர் ஆரம் வீச
மாயகிருஷ்ண தேவரிதோ வருகின்றாரே.

(தரு)

தேவக்கோபாலக் கிருஷ்ணன் வந்தார் - அரிமாயனான
தேவகியுன் பாலன் வந்தார்
தேவக் கோபாலக் கிருஷ்ணன் செல்வ ருக்மணி மார்பன்
பாவையர்கள் ஆலமேந்த பட்டுத்திரிகள் சூழ
(சு) பன்னிய முனிவரும் உன்னிய தேவரும்
துன்னியங்கே உறவே தன்னிகரில்லா. (தேவ)

(தரு)

இத்துகள் பளபளென்ன நெற்றியில் சுட்டிகள் துன்ன
சத்த தண்டைகளும் சதங்கை கல கலென்ன
(சு) சங்கமும் ஆழியும் செங்கதிர் நவமணி
தங்கிய கடகமும் வெங்கதிரென்ன. (தேவ)

(தரு)

நாரதனோடிய வேதா நீடும் பிரிய கெம்பீரன்
மாதவம் பெருகிய யசோதை மனம் பூரிக்க
(சு) மங்கூடர் வீசவே கந்த கோத்திரன்
ஏந்திர பந்தவர் சந்தலம் தீர. (தேவ)

(தரு) (99)

அகலம் சாலியில் வாசன் பகரும் வன்னியக் குலேசன் 95
புகலும் எங்கையனாரும் மகிழும் கிருஷ்ண சுவாமிக்கு
(சு) புத்தியும் வித்தையும் சுற்றமும் அருளிய
கர்த்தனென்றுமே உத்தமர் பணிய. (தேவ)

(தரு)

கொடிய துரியனை நீங்கள் மடியச் செய்யலா அவன்
அடியிலாழ்ந்துமே ஒன்றிய் கதிகலந்தீர்கள்
(சு) கொண்டானும் கொண்டானும் சம்மந்தியாகவும்
அண்டி வந்து நான் அம்பலமானேனே.

(தரு)

கெடுக்கும் துரியன் பகை முடிக்கும் காலத்தில் அவன்
நடக்கை புரிந்துமே அவனை அருக்கலாகுமோ.
(சு) கெட்டுதே எனும் விட்டு தெந்தனை
ஒட்டி அவனுடன் முட்டி வாழ்குவீர்.

(விரு-ம்)

கருத்துமே கேட்க வந்த தர்ம்ம புத்திரனே கேளாய்
அருத்துமே துரியராஜன் அவன் கேட்ட படியே எல்லாம்
நடக்கவும் உண்டு உங்கள் ஞாயம்பின் அறியப்போறீர்
விடுத்துமே வந்த சேதி விளம்புவீர் அறியத்தானே.

(தரு)

மதிகெத்து ராஜமன்னு வஞ்சகனை கொல்கொடி
(சு) மனதொத்தவா ஜெயத்திட
நாயமோ இது கனமோ இது.

(தரு)

மோசக்கார சேர்க்கையன் செகுத்திட்டான் துரியனுக்கு
(சு) ஒட்டி அவனிட கெட்ட புத்தியை
விட்டு வந்தனன் கெட்டி ஜெயித்திட.

(தரு)

இற்றம் பொருத்தனே இலைத்திர படைகளெல்லாம்
சித்தம் மகிழ்ந்துமே செகுத்தும் கொள்ளும் மனதாக
(சு) சிந்தை மகிழ்ந்துமே வந்த துரியனை
சந்திட பலியாய் முந்தி செய்யவே.

(தரு) 100

பாரதத்தில் 96 தமக்குள்ளே   பலி கொடுத்து வெல்லும்
தவறாமல் ஆயுத பூஜை   செய்வதோ சொல்லும்
(சு) ஜாலம் செய்யவும்   காலமல்லவே
நீலா சமாதான   வேளையே.

(கலி)

சல்லியன் தன்னை வைக்க   சாய்ந்தனன் சூரியன் பக்கல்
வில்லாளி தன்னை வைக்க   வேர் அறும் ஐவர் பூண்டு
நல்லவரானை வைக்க   நமக்கவன் சொந்தமல்ல
செல்வம் செல்வதற்கு   செட்டியார் இருக்கின்றனே.

(ஜம்பை தரு)

பகையாளி தனக்கு இனி   பலியிடுக்க அரவானும்
வெகு கேட்டு மகிழ்ந்து கொண்டு   விதமதியேனே.

(ஜம்பை தரு)

நாளைய ராத்திரி பூஜை   நடத்தும்படி நேர்த்தம் வைத்தேன்
வேலி நல்ல வேளையிது   அளவில்லா கடபலிக்கு.

விருத்தம்

சித்தமாய் இருப்பவனென்று   செல்வனை அரவதீரா
பெற்ற தாய் தந்தைமார்கள்   பிழைசொல்லத் துணிய மாட்டேன்
சுத்தமாய் அவ்வர் தன்னை   சோதித்து பதிலுரைப்பேன்
சித்திர நாககன்னி   செல்வியை அழைத்து வாராய்.

(விருத்தம்)

தங்கையே நாககன்னி   தாயே நீ சுகமாய் வாழி
இங்கிலே சூரியன் வந்து   இருந்திட கடபலிக்கு
பொங்கமாய் மகனை கேட்க   பொருந்தினன் அவர்களுக்கு
அங்கமாய் இருப்பவனென்று   அதையுனக்கு அறிவித்தேனே.

(தரு)

ஆதிசேஷன் மகளே   என் தங்கா இனி இங்கே
அழுது புலம்பாவேனோ
நீதிவா பதிபோனி   செத்தியதிந்துமே
(சு) நெரியாகவே பரிபாலனம். வருவான் பலி தருவான். (ஆதி)

(தரு)

வர்ணப் பசுங்கிளியே   என் தங்கா இனி இங்கே
வாடித் தவித்து மென்னே



என்னை வெறுக்கவும்   மன்னவருடன் கூடி
(சு) இன்றும் என்றுமே   அருமைப்பலி
தருமென்றுமே   தனை கேட்கவும். (வர்)

(தரு)

மகனை பலி கொடுக்க   என் தங்கா இனி இங்கே
வலுவாதம் செய்வதுண்டோ
ஜெகமானவும் சூரியன்   மனம்போல் நடக்கவும்
(சு) நேரமாகிய காளின்சியே. அரவானிடம் உரவாகுமே. (மத)

(தரு)

மங்கை நீ லோன்மணியே   என் தங்கா இனி இங்கே
மயங்கித் தவிக்காதே
தங்கமே அரவானை   இருக்காதே பலியென
(சு) தனை செய்யவும் முடியாதினி. கொடிமின்சியே வடிவே. (மங்)

(விருத்தம்)

வஞ்சியே மகிழ்ந்து கேட்ட   வரமது தருவேனம்மா
அஞ்சியே தவிக்கவேண்டாம்   அவ்வலை மனம் சோதிப்பேன்
கொஞ்சியே அவர்கள் தம்மை   கேட்பதை கேட்டுக்கொண்டும்
பஞ்சணை நடுவிறந்த   பார்த்தனை வரச்செய்வாயே.

(பாண்டவர்படம்)(விருத்தம்)

பரமனார் அருளைப் பெற்ற   பஞ்சபாண்டவரே கேளும்
அரவானும் சூரியனுக்கு   அவயம் உயிர் கொடுத்தால்
மறவாமல் கடபலிக்கு   வாரேனென்று உரைத்த இந்த
உறவாகி இதைக்கதாலுங்க   விஷ்டத்தை சொல்லுவீரே.

(தரு)

பலியாக்க   பலி மாசக விதிக்கிந்த
அலியாருதீர்   யாவென்ன செய்யவாம்
(சு) அரவபாலனை   பருவமின்சியே
மருவி விதைத்திட   சூரியன் விடுவானோ. (பர)

(தரு)

தர்ப்பனை செய்யும்   சதிகாரபாவிக்கு
கர்ப்பினை தாரா   கடபலிகிடைக்கது
(சு) கலை கொண்டாலும்   தேவுமலை பாவி
பாவிமரியவை   அவருமுடித்திட

(தரு) (102)

98

இளப்பமென்னவே எங்கே தவிக்கிறீர்
கடவுள் என்பதை கண்டதில்லையோ நீங்கள்
(சு) கருத்து அவயவம் உடலில் கொஞ்சமாய்
அமைவிப்பது வருவாள் போர் முகம். (இள)

(தரு)

சொல்லுவேனொன்று சந்திர அய்யரே
நல்லகாலம் நமக்கிப்போ வந்தது
(சு) நித்தி தரியனும் வைத்த காரியும்
பத்தி புலட்டவும் வெற்றி நம்மதே. (சொ)

(கலி)

மறைவேந் தனிலுதித்த சாஸ்திரிமாரே சொல்லக்கேளீர்
தரணியில் இன்றுதானே தர்ப்பணம் செய்கின்ற
உரை செய்யும் அமாவாசை ஜோதி யோகங்களும் உரைத்து
உரைவிடா இருப்பதேனோ ஜோதிடர் அறியத்தானே.

(தரு)

பரிவாக பஞ்சாங்கம் பார்த்தீரோ
பார்த்தெனக்கு பதில் சொல்வீரோ
சொல்லும் அமாவாசை துவக்கத்தை அறியாமல்
வல்லமை கண்டிங்கே வாய் பேச வந்தீரோ.

(தரு)

பஞ்சாங்கம் தன்னை நன்றாய் பாரும்
பார்த்து பதிலைக் கூறும்
கூறும் அமாவாசை இனிமேல் இன்றைக்கே
சாருமவர்களெல்லாம் தர்ப்பணம் செய்யவே.

(தரு)

இருவரும் கூடி வந்த போதே அமாவாசை
இன்னும் வரவேயுண்டோ இப்போதே
இருவருமாக இங்கே வந்த போதே
சரி சரி இன்றைக்கே அமாவாசை.

(தரு)

குஞ்சிரிப்பு கொண்டு நகைத்தார் மனதிலெண்ணி. (குஞ்)
அஞ்சாமல் உலகத்தில் அமாவாசை இன்றைக்கே
சஞ்சலங்களில்லாமல் சரிதம் விட்டபோதே.

(தரு) (103) 99

தருமருக்கு உந்தன் தாய் தந்தை மார்களுக்கும்
சம்மதமோ நீ புவியிருக்க
(சு) தருமலோலனை அவமதிலனே
சமய மோசம் உண்டாகுமோ சொல்லும்.

(தரு)

அப்பா நீ இந்த கடவுள் என்பதை
அறிந்திருக்க மாட்டாய் அதை சொல்வேன் கேளாய்
(சு) அதிக்கைக் கண்டுமே சரிகை கொண்டு
அரக்கர் உடல் அழிபுத முண்டு.

(விருத்தம்)

காருங்கள் புவியில் நீயும் சாகாமல் பாவத்தில்
அருள் கொடி மீட்டுத்தவீரன் அவனே பூதலி
பெருந்திரு வரம் பாலித்தேன் பிரியமாய் தந்து அய்யம்
பெருக்கத் தந்தாரிப்போ ஜனகனும் போகலாமே.

(சுபம்) (சுபம்) (சுபம்)

சுந்தர மாலையிருவாட்கம்: கிருஷ்ணன்.

(கலி)

அண்டமெண்ட புவனமெல்லாம் வயிற்றில் வைத்து
ஆதரித்து படியளிக்கும் ஆதிமாயன்
தண்டலையமாலையது மார்பிலாட
தங்கத்திர செங்கையுடன் மீதிலேறி
கெண்டை விழிமாதர்கள் சங்கீதம்பாட
கெம்பீரமுள்ள சத்துருக்கள் வாட
புண்டரீக மெய்விளங்க கிருஷ்ணமூர்த்தி
பூரித்து தரியன் முன்னே வருகின்றானே.

(தரு)

அரவணை சயனன் திருவேங்கட நாதன்
ஆதிநாராயண மூர்த்தி வந்தேன் இந்த
சோதி சுடரொளியாய் நின்றேன்
ஆதி த்ரேதா யுகத்தில் அயன் தனை உண்டு செய்தேன்
அரித்து நான் குலத்தை களித்து மனமகிழ்ந்தேன்
(சு) அண்டத்தை ஓரடி அளவை அளந்தேன்
கடந்த மாபலி கர்வத்தை ஒழித்தேன். (அர)

(குரு)

சக்கரம் கதை கோதண்டம் சாரங்கம் சங்கும் தாங்கி
சாயி கிருஷ்ண மூர்த்தியும் நானே ஜெகரஞ்சகன் (சாயி)
(சு) சக்கினை தாசர்கள் என்னை மதித்தேன்
சண்டாள ராக்ஷர் இனமதை அழித்தேன். (அர)

(குரு)

பாதமதை போற்றி செய்த பண்புடைய மாதவனே
ஆதரவா என்னையும் அன்புடனே வாழி வாழி.

(கவி)

வஞ்சகம் கபடில்லாத மதிவல துரியா வாழி
மிஞ்சியே கீர்த்திமன்ன விளம்புவாய் வந்த சேதி.

(கஞ்சம்)

மருமலர் மார்பா உந்தன் மகளுக்கென் மகனை வேண்டி
வருகவே மன மகிழ்ந்தேன் வந்ததே போதும் பெண்ணை
இருதய மனங்களிக்க ஈயும்.

(குரு)

என்ன பரிசம் தருவாய் துரிய பூபா (என்ன)
என்ன பரிசம் தர மன்ன நினைவு கொண்டு
உன்றன் பெண்ணை வேண்டி என்னிடம் நாடி வந்தாய்.

(கஞ்சம்)

சரி சரி சதை விற்றல்லோ சங்கடம் தீர்க்கப் போகேன்
நரி நரி போன்றென்றிலே நேசித்து மொழிவதன்றோ
இரு இருவான எந்தன் தோபாலப் பெட்டியுண்டு
அதுநிறைய தந்தாலே

(குரு)

அதுவே பரிசமாமே துரியபூபா (அதுவே)
அதுவே பரிசமாகும் இதுநிறைய தந்தாலே
அதிரூப சுந்தரியை இசைந்துடன் தருவேன்.

(குரு)

பொன் மிகுந்த மன்னவனே போதும் போதும் சொன்ன வார்த்தை
என் மனது இச்சையாமோ துரியபூபா (என்)

(குரு)

பொன்னளவு காண வந்தேன் பூமானே அமர்ந்த வந்தாய்
என்னடா புதுமை இருக்குது - இந்தப் பொன்னிலே. (என்)



(குரு)

பொன்புதனை காட்ட வந்தேன் பேதகமில்லாத மன்னா
பொன்புதனைத் தூக்கி காட்டுவேன் = அளவு காண (பொ)

(குரு)

தூக்கிக் காட்ட வேணுமிப்போ சுந்தர அனுமந்தனே
பார்த்தனைத்து வாருமாதவா - கொடிக்குள்ளாக. (பார்)

(கவி)

அற்புதமாக வந்த அனுமந்த வாழி வாழி
பெரிப்புள்ள கனமெடுத்து பொன் தூக்கி அளந்திடவே.

(குரு)

பார்த்தாயோ துரிய பூபா பசும் பொன்னும் புதுமையிதே
காற்றினிலே ஓடிப் போக கால் பெட்டி அளவு கண்டேன்
மாத்திடத் தாம்பூலம் தான் வகை சொல்லும் இக்கால் பெட்டி
சேர்த்திடும் இல்லாவிட்டால் திரும்பி ஓடுவாயே.

(கவி)

திரவியம் இருந்து சிந்தை துரியனும் திகைக்க கண்டேன்
பிரமாக இடைந்து போக பேச்சுக்கில் அரியவானேன்
பரிவாக வளரச் செய்ததாம் பாரஇக்கால் பெட்டிக் கண்டோம்
உலவாக கால் பெட்டிக்கு ஒருமொழி சொல்லுவாயே.

(கவி)

சுந்தர மகனே வாழி துரியன் தன் மகனுக்கின்னை
தந்தேனன் உந்தன் பாக்கியம் உன் அறிவினில் அறிவாயே.

(குரு)

அவனே உலகில் வல்லவன் துரியன் மைந்தன்
தவறில்லா செல்வம் வாய்ந்தவன்
சிவன் செயலாலே அந்த செல்வம் கிடைத்ததம்மா
(சு) சிந்தையும் வாடி நொந்திட வேண்டாம்
வந்துமே பதில் மொழி தந்திடலாமோ.

(குரு)

அன்னக்கிளியாலே என் அருமை மகளான சுந்தரியே
சொன்ன மொழியைத் தள்ளி வந்து சோதிக்கிறாய் மாதை
(சு) சுந்தரியே உன்னை எந்த இடம் தனில்
தந்திடவே எண்ணி வந்ததைக் கூறும் நீ.

(106)

(தரு)

பட்டமதை இழந்தானவர் பாவி தங்கையை அழியவிட்டு
வனவாசம் போகவிதி வந்து நேர்ந்ததே அம்மா
(சு) மெல்லியைப் போலவே செல்வமில்லாமலே
தொல்லைகளாகுமோ நல்லதோ அம்மணி.

(கவி)

வடிவான எந்தன் மகனை நீ கேளும் வளமான துரியனும்
பழமொழிகள் கான என்தங்கைக்கு பரியங்கள் தந்தாயென்னை
நீடமான தங்கையவளை கொண்டுமே பார்த்தேன் சிந்தை களிக்கமனமும்
அடவாக நானே செய்ததேனம்மா

(தரு)

அருமை படவும் ஆக்கதே என்தங்கையானதும் (அருமை)
அருமை கண்டறிந்து ஒடுங்கிமனமும் நொந்து
தகைவே உந்தனை பெருமை படவுமானேன்.

(தரு)

எந்த விதம் வந்து பேசுவேய் துரியனுக்குப் பெண்ணை
தந்ததென்று மனம் கூசுவேய்
உந்தனை விஜயனுக்கு தந்து நீ தவித்திடவும்
சிந்தையுங் கலங்கிவாடி கண்பிசைக்கப் பார்ப்பதுண்டோ. (எங்)

(தரு)

பஞ்சவர் வனத்தில் வாடவே உங்களுக்கெல்லாம்
சஞ்சலம் மிகுந்து வாடவே
ஏந்திழை மகளே கேள் நோயமோ உந்தனுக்கம்மா
கண்ணில்லாமலே வாடி கண்பிசைக்கப் பார்ப்பதுண்டோ (பஞ்ச)

(தங்-ம்)

என்னாலே குற்றமுண்டோ என்னிடத் தங்கா நீயும்
முன்னாலே வந்து கேட்டால் மொழிவேனோ இல்லையென்று
உன்னாலே குற்றமம்மா உனைப்பெற்றேன் நன்மை துன்மை
பின்னாலே அறியப் போவாய்.

(தரு)

போகாமல் நடந்திடுவாய் அரண்மனைக்கு (போகா)
பேசவும் ஆகுமோ ராஜனுக்கீந்திட
நேசமாய் தந்திட்டேன் யோசனை உண்டோ.

(107)

(பிராமணர்)(கவி)



அருவையும் மகனை அன்பாய் அனுப்பிடமாட்டாளென்று
பிரியமாய் அதிமாயன் பிராமண வடிவங்கொண்டு
தருமசாஸ்த்திரங்களோடு தள்ளாடி தடியை ஊன்றி
பெருமை சேர் கங்கை முன்னே பிராமணர் வருகின்றாரே.

(தரு)

அதிநாராயணர் அந்தணராகியே
வேதியனாகியே விரைந்து நடந்தாரே
அதிநாராயணர் அபிமன்ன ராஜனுக்கே
மாது சுந்தரியாளை மணமது செய்ய வேண்டி
முத்துக்குடை கவிய முன்கை கடகமின்ன
சித்தம் மகிழ்ச்சியாக தேவாதி தேவனை
காவி வேஷ்டிகள் பூண்டு கனகபூஷண மின்ன
தாவி நடை நடந்து தள்ளாடி தடியை ஊன்றி
தங்கை சுபத்திரை தன்மனை நாடியே
பண்ணிய வேதங்கள் பலவகை பாடியே.

(தரு)

தென்தேசம் வரதராச்சாரி திருமகள் சுந்தரிக்காக
திருமணத் தீர்க்கவே போவேன் அம்மணியே.

(கவி)

தந்தையரோ வனவாசம் செய்வாரிப்போ
தாயாரும் பிள்ளையுடன் வருத்தம் தரும்
சொந்த அம்மான் மகளாகும் இவர்க்குப் பெண்ணும்
சோபனமும் வாதிட்டு செய்ய தகும்
சிந்தையிலே அச்சமில்லை எதிர்த்த பேரை
ஜெயம் பெறவே ஜெகநாதன் வந்தாரம்மா
இவ்விதங்கள் சூதென்று நம்ப வேண்டாம்
எம்பிரான் வரமீது பெற்று போகுவாயே.

(தரு)

சந்திர குல மன்னவனே உந்தன் மகனை சேர்ந்திடுவாய்
ஜாலமோ செய்ய கோலமோ.

(தரு)

குற்றமில்லை சத்திய தீரா உந்தன் திருமணமும்
கூறுவேன் நீறை வேறுமோ.

கே.பி. செல்வகுமார்,
மாவட்ட பொதுச்செயலாளர்,
தமிழர் தெருக்கூத்து கலைஞர்கள் இயக்கம்
திருவண்ணாமலை மாவட்டம் (தெற்கு)

(108)



(தரு)

நாடி வந்தவளை கைவிடலாம் ஏற்றதோ சுவைபுகன்று
என்றிதோ போக என் செய்வேன்

(தரு)

தாண்டி போக வீரம் கூறி மீண்டு போக என்னை அருகில்
தள்ளுவாய் இன்பம் கொள்ளுவாய்.

(சுபம்) (சுபம்) (சுபம்)

## 13-ஆம் நாள் சண்டை நாடகம்: கிருஷ்ணன்

(கவி)

மதிகுலத்தில் வந்துதித்த ஐவரவர்
மாமறையின் விதிப்படிக்கே வகுத்தியற்ற
துதிபெறும் பசுந்துளப முடியோன் தானும்
பதின்மூன்நாள் பகையுடனே மனதிலெண்ணி
அதிவீர சுவனெனும் வக்கிரதந்தன்
அம்சமென தோன்றியதோர் அபிமன்னன் தன்னை
கொதி கொளவே இன்றமரில் மடிப்பேனென்று
கோபாலக் கிருஷ்ணனிதோ வருகின்றானே.

(தரு)

பங்கயக் கண்ணனிதோ வந்தார் அன்பு மிகுந்த
பக்தர்கட் கேவலம் தந்தார்
பொங்கும் திருமுகத்தில் பொன்னிற நாமந் துலங்க
சங்கம் அழியும் வில்வாள் செங்கரம் தனில் விளங்க
(சு) தங்கமாமணி பணிகளும் வீச
புங்கவர் யாவரும் புகழ்ந்துமே பேச. (பங்)

(தரு)

வெற்றிசேர் விஜயன் மைந்தனானவன் வலிமிகுந்த
வீரவான் அபிமன் என்னும் பேரான்
இன்றுநாள் அமர்முகத்தில் நன்றான அணியில் வைத்து
கொன்றிடுவேன் சூழ்ச்சியினால் இன்றுமே கோபாலக் கண்ணன்
(சு) டுமடும் சல்லரி பேரிகைபாட
டமருங்கின்னரி தாளங்கள் போட

(கவி)

வேதமும் மாதவர்க்கேன் எதிரான ஐவராசர்
அமர்களம் தன்னில் இன்று அன்புடன் அதிப்பதாலே

(109)



விமலனவன் போக வேண்டும் மெல்லி ருக்மணியாள் தன்னை
கமல வாசகியினுடன் கன்னியை அழைத்து வாரீர்.

(தரு)

கலங்குகின்ற நாயகியே கமலமுக வதனியே
பரம்பொருள் நிறைந்திருக்க பத்தினியே சுகித்து வாழி
(சு) பலகாலமும் நலமாகவே
இலமாமணி தலமீதிலே.

(தரு)

இஷ்டமென் பிராண சகியே எப்போதும் என்மேல்
பக்ஷம் மிகுந்த சகியே
அஷ்ட பாரியில் மிக்க அன்பில் சிறந்தவளே
(சு) அமர்களம் தனில் ஐவராசர்கள்
எமதுள்ளம் கோரியே ஏற்றிடச் செல்கிறேன்.

(தரு)

பயம் வித்தகள் ஒன்றும் இல்லையே - பாவையே நீயும்
பதறிவாடாதே தொல்லையே
கடிமணங் கமழும் நல்ல கமலமலர் வாசகியே
(சு) கார்த்திட ஐவரை வார்த்தையின்படியே
சேர்த்திடும் அவ்விதம் முடித்திட வேண்டும்.

(கந்:ம்)

மானமில்லை என்றுரைக்கும் மாதுருக்மணியே கேளாய்
கனிவுடன் ஐவர் தம்மை காதலா கண் போல் காக்க
எனக்கும் வாக்குதிப்போ பிடிவாத ஐவர் தம்மை
கனமுடன் யானும் காத்தால்.

(தரு)

உண்டு ஐவர்க்கு லாபமே அதை
உணராமல் பேசுவாய் கோபமே
பண்டு மொழிப்படி பாண்டவர்க்குப் பலி
பாவனிருந்தால் மேலும் நமக்கென்ன வலி.

(தரு)

முன்னால் வரப்படி மானே அன்று
முடிந்தாலும் அரவானும் தானே
என்னை விடாது எப்போது மில்லையே
கன்னி உளறியாள் கலங்குவதேதுக்கு.

(கவி)

 (110)

அலர் மெகவுதனியாலே அம்பிகை பாகனை
விலகிலா பீமனம்சம் ஆகிய விஜயனுக்காய்
வலவனும் ஆகி நின்றோன் என் மெத்துவம் குறைந்திடாது
நலம் புகழ் நாரணர்க்கு.

(தரு)

தாழ்வு எக்காலம் இல்லையே ருக்மணியாளே
தடுத்தால் வருமோ தொல்லையே
வாழ்வாகி நாயகமே வஞ்சி ருக்மணியாளே
மாறாத நேசத்தாலே ஏதேது நடத்துவானேன்.

(தரு)

விண்டவர் தனை பகைத்த துண்டவை கருவறுத்த
வீரவில் விஜயனை மேவும் வாழியே
பாரதில் அரிவளித்தேன் நாளும் வாழியே.

(தரு)

சந்திரகுல மணி தீபா ஒருசங்கடம் நேர்ந்தது பூபா
வந்துதே இன்னளில் உந்தனுக்குத் தீம்பு
எந்த விதமென்று எடுத்துரைன் சொல்லுவேன்.

(தரு)

விற்குரு தோரணரும் நாடி விருதுகட்டி வாலசன் தேடி
திக்குதே மனம் தேவனும் ஏன் செய்வேன்
பக்குவ நீதர்க்கொன்றும் பரந்தாமனே யேயனை.

(கவி)

வஞ்சகத்துரியோதனன் வகுத்திட்ட சூழ்ச்சியாலே
சஞ்சயக்கனிங்கன்றோ சமரது செய்யும் போது
நெங்கு நீ நினைத்ததாலே நெடியமால் வந்து காத்தேன்
மிஞ்சியே அஞ்ச வேண்டாம் விதமதை புரைப்பேன் யானும்.

(தரு)

நலிய வேண்டாம் துரியன் சேனை வலிய வந்தழைக்கும் போது
கலியது வந்தனுகாமல் காக்க வேண்டுமே.

(தரு)

சுத்துரு துரியன் படை சூத்தியே ரணகளத்தில்
சக்ரயூகம் வகித்து சமர்க் கெழுந்தாரோ.

(111) (கவி) 

பார்த்தனே பண்ணவேண்டாம் நான் யுத்தத்தில்
பகதத்தன் மடிபடவே துரியன் சேனை
வேர்த்துமனங் கடிந்துரைக்க துரோணாச்சாரி
விரத மொழி தனைப் பேசி தருமன் தன்னை
நேர்த்தியுடனே பிடிக்க வரவேனென்று
நிகரில்லா மகர யூகம் வகுத்து
பேர்த்தடி வைத்திடாமல் முன்னும் பின்னும்
பிசகில்லா காவலது புரிந்திடுவரே.

(தரு)

சஞ்சய கனிங்கதிரனே இவர் சண்டையில் மெத்த சூரரே
வஞ்சகத் துரியனுடம் வாக்குரைத் தனுப்பி
வலிய சண்டை செய்ய புலிபோல வாராரே.

(தரு)

பதறாதே பொறும் பொறும் மைத்துனா
பதறிடல் ஆபத்து பார்க்கினே
மிதமில்லா சேனைகள் மீறியே வந்திடும்
கதமாக பேசிடும் காரணம் அறியாயோ.

(தரு)

மைத்துனா என் மொழி தள்ளாதே உன்
மனதில் யாதொன்றும் வையாதே

(தரு)

சித்தம் வாடாதே சுத்த கெம்பீரன்
ஜெயவீரவானபின் அஞ்சாதே
மெத்தவே அணியில் இத்தத் நிறுத்த
அடிமை வருமோவென்று அஞ்சாதே
(சு) மீரியே சேனையை கூறது செய்துமே
வாரிப் போரிட்டிடும் வீரியனுக்குதே.

(தரு)

சொல்லுவேன் நானே செல்வனும் தானே
துணிவுடன் பதினேழும் நாளமரிலே
சல்லியன் தன்னை தண்டிவல் மோதி
சமர்களம் தன்னில் மூர்ச்சை யாக்கனே

(சு) தன்னைப் பாட வீரனை அடைவுடன் யாவுமே
படைப் பினில் வைத்திட கெடுதி வராது.

(கந்.ம்)

இதயமும் வாடுகிறதிம்மா எழில்வாள விஜயா கேளாய்
மகன் பிறைக்கும் மட்டில்லா பலம் படைத்தோன்
அதுவிதம் அறியமாட்டாய் அமருக்கு அடங்கா சூரன்
புகரிட துரோணர் தன்னை,

(தரு)

பற்குணை வதைத்திடுவானே துரியன் சேனை
மங்கலை வதைத்திடுவானே
திங்கள் குலத்தில் வந்த தீரனுக்கு எதிரியுண்டோ
அங்கமும் வாடாதே எந்தன் தங்கை இடம் கேட்டறிய்யும்.

(தரு)

தங்கையே சுபத்திரையே இங்கினி வரவழைத்த
சங்கதி உரைக்க மனம் வாருதம்மணி
திங்கள் குலத்திலகன் பாங்கினன் உனது நாதன்
செங்களத்தில் மாளவினி ஆக்குதம்மணி
(சு) தீரக் குறை இதுவோ தங்கா பேராய் விளங்குது போ
மாருகப் புகழ் ஏதோ வேணுதும்.

(தரு)

வஞ்சகத் துரியனவன் பஞ்சவர் பூண்டு நீங்கிய
மகா சூது செய்தானம்மா தங்கையவே
